KALKI
14.11.93 ரூ. 3.00

கல்கி

தீபாவளி சிறப்பிதழ்

- அதிக பக்கங்கள்!



● ஸ்வீட்
ஸ்பெஷல்!











நகரில் சில நரகாசுரர்கள்!

'சார்...' வெளியே இருந்து ஒரு குரல்!

மெல்ல எட்டிப் பார்க்கிறேன்.

அரசுத் துறை ஊழியரில் நான்கு பேர் நின்று கொண்டிருந்தனர்.

எந்தத் துறை என்பதை உங்கள் கற்பனைக்கு விட்டு விடுகிறேன்.

இவர்களை நாம் அழைக்கவில்லையே!

அழைத்தாலும் இத்தனை பேர், இவ்வளவு பவ்யமாக வந்து நிற்க மாட்டார்களே!

இவர்கள் எப்படி... இந்த நேரத்தில்... நம் வீட்டிற்கு முன்னே...

'என்னங்க, யாரு வேணும்?' - இது நான்.

'ஐயாவைத்தான்'... இது அவர்கள்.

இது என்னையா புது மாதிரி! அரசு ஊழியர்கள், மக்கள் குறைகளை வீடு தேடி வந்து கேட்கிறார்களா என்ன? திகைப்புத்தான் எனக்கு!

'சொல்லுங்க, என்ன சேதி?'

'ஒண்ணுமில்ல... தீபாவளி வருது...' ஒருவர் ராகம் பாடினார்.

'ஆமா; அதுக்கென்ன...' நான் வெகுளியாய்ச் சிரிக்கிறேன்.

'யோவ்! அந்த நோட்டை ஐயாகிட்ட கொடுயா!' - ஒருவர் அவசரப்படுத்த, இன்னொருவர் நீட்டுகிறார்.

வாங்கிப் பார்க்கிறேன். பல பக்கங்களுக்குப் பெயர்கள் - எதிரே பெருந்தொகைகள் - வரவு என்று எழுதியிருக்கிறது.

'ஆமா! நான் என்ன செய்யணும்?' - விளங்காமலே கேட்கிறேன்.

'என்னய்யா நீங்க! எழுதுங்கய்யா' - மிக உரிமையாகவும் பாந்தமாகவும் பல குரல்கள்.

'என்னங்க. நானும் அரசுத் துறை ஊழியன்தானே; என்கிட்ட வந்திருக்கீங்களே...'

'சும்மா போடலாம்யா... எழுதுங்கய்யா' - இப்போது குரலில் குழைவு இல்லை. கொஞ்சம் அதிகாரம் ஒட்டிக் கொண்டிருந்தது.

அவர்கள் துறையைப் பொறுத்தமட்டில் நான் அதிகாரமில்லாத ஏழை. பேசாமல் முடிந்ததை எழுதி, தொகையைக் கொடுத்தேன்.

'எவ்வளவோ' என்று ஆசை ததும்பும் விழியோடு வாங்கியவர், 'இவ்வளவு தானா...; வேண்டாம்யா' என்று ஏளனத்துடன் அதைத் திரும்ப என்னிடமே தர முயல, இன்னொருவர் 'சரி, சரி; அதுக்கு முன்னாடி ஒரு ஒன்ன போட்டுக் குறிச்சிக்க, பிறகு பார்த்துக்குவோம்' என்று சொல்ல, 'வருகிறோம்' என்று சொல்லாமல் கூட, முணுமுணுத்துக் கொண்டே சென்று விட்டார்கள்.

என் தேகம் வியர்த்தது.

இல்லை; அழுதது!

கடும் நெருக்கடிகளுக்கு இடையிலும் கடும் சோகங்களைச் சுமந்து கொண்டு மேகமாய்ப் பனி மழை பொழியும் ஆயிரம் ஆயிரம் அரசுத் துறை ஊழியர்களுக்கிடையே இப்படி ஒரு ஐந்தாறு பேரா!

தீபாவளி, ஊரை வதைத்த நரகாசுரனை ஒழித்த நாளின் மகிழ்ச்சி அல்லவா! அதைக் கொண்டாடும் சாக்கில் நாமே நரகாசுரனாக மாறினால் எப்படி?

இந்த நீதி இவர்களுக்குத் தெரியாது என்றால் நாம் கற்றுக் கொடுக்கலாம்.

தெரிந்தே தவறு செய்பவர்களை எப்படித் திருத்துவது?

– சாலமன் பாப்பையா

தீபாவளிப் படங்கள் :

எந்தக் குதிரை, ரேஸில்

* 'திருடா திருடா'வில் பிரசாந்த், ஹீரா, ஆனந்த்






* 'சக்கரவர்த்தி' - கார்த்திக், பானுப்ரியா

தமிழ் மகா ஜனங்களை வருஷா வருஷம் தீபாவளி சமயத்தில் மகிழ்ச்சி(?)க் கடலில் ஆழ்த்துவதில் நம் சினிமாக்காரர்களுக்கு மகா சந்தோஷம். சொத்தையோ, நத்தையோ - தீபாவளிக்குப் படங்கள் ரிலீஸ் பண்ணி விடுவதென்பதை ஒரு கௌரவமாகக் கருதுகிறார்கள். எப்படியும் பத்து படங்களுக்குக் குறையாமல் ஒவ்வொரு தீபாவளியன்றும் தியேட்டர்கள் புதுக்கோலம் பூணுகின்றன. இந்த வருடம் கொஞ்சம் ஓவர். நிலவரப்படி பதினைந்து படங்கள் தீபாவளி ரிலீஸு"க்காகக் காத்திருக்கின்றன. இதில் எத்தனை, சென்ஸாரில் சிக்கித் தவிக்கப் போகிறது, எத்தனை, ரீ-ரெக்கார்டிங்குக்குத் தேதி கிடைக்காமல் நிற்கப் போகிறது, எத்தனை, லேப்-சார்ஜ் கட்ட முடியாமல் நிறைப் போகிறது - இத் தனையையும் மீறி எத்தனை ரிலீஸ் ஆகப் போகிறது - அதில் எத்தனை ஓடப் போகிறது - எத்தனை தூங்கப் போகிறது - ஏகப்பட்ட அனுமானங்கள்.

முக்கியமான விஷயம் இந்த வருஷம் ரஜினி படமோ, கமல் படமோ கோதாவில் இல்லை என்பது. ஆகவே, தியேட்டர்களில் பாலாபிஷேகத்துக்கும் பஞ்சாமிருத நைவேத்தியங்களுக்கும் வாய்ப்பில்லை. பாக்யராஜ் படமும் இல்லை. பாலசந்தர் படமும் இல்லை. இப்படியாகச் சில பெருந்தலைகள் இந்த வருடம் ஒதுங்கிக் கொண்டிருப்பதால் அனேக 'ஜு"னியர்'களுக்குச் சற்று ஆசுவாசம். ஆயினும் லிஸ்டில் மணிரத்தினம் இருக்கிறார். பிரபு, சத்யராஜ், கார்த்திக், விஜயகாந்த் தவிர மம்முட்டி இருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேல் பாரதிராஜா புதுப்பிறவி எடுத்து வந்திருக்கிறார். போட்டி, ''சபாஷ் சரியான போட்டி'' என்று சொல்லும்படி இல்லா

விட்டாலும் 'சப்'பென்று ஆகிவிடவும் இல்லை.



* 'உழவன்' - பிரபு, பானுப்ரியா

●● அதிக எதிர்பார்ப்புக்களைத் தாங்கி வருவது மணிரத்தினத்தின் 'திருடா திருடா'. கவிஞர் வைரமுத்துவிடம் பேசிக் கொண்டிருந்தபோது, 'இது மாதிரி டோட்டல் பொழுது போக்குப்படம் சமீபத்தில் வேறு கிடையாது'' என்பதாகச் சொன்னார். காதில் விழுந்த கதைச் சுருக்கமும் அதையே ஊர்ஜிதப்படுத்துகிறது. இரு திருடர்களைப் பற்றிய கதை. அவர்களது ஓரட்டிகள், சேட்டைகள், கோட்டைகள் என்பதாக மணிரத்னம் புகுந்து விளையாடியிருக்கக்கூடும். இந்தப் படத்தில் மேலும் இரண்டு சிறப்புக்கள். ஒன்று ஏ.ஆர். ரகுமான். அசத்தும்படியான இசை. ஏற்கெனவே பிரபலமாகிவிட்ட பாடல்கள். இரண்டு - பி.ஸி. ஸ்ரீராம் - மணிரத்னம் ஜோடி மறுபடி இணைகிறது. கல்கி தொழில் மலர் '93 க்காக ஸ்ரீராமைச் சந்திக்கச் சென்றபோது 'திருடா திருடாவில்' உபயோகப்படுத்தியிருக்கும் லைட்டிங் எஃபக்ட்ஸ் இதுவரை வேறு எந்தப் படத்திலும் தான் உபயோகப்படுத்தவில்லை' என்று சொன்னது நினைவு வருகிறது. தவிரவும் ஹீரா, பிரசாந்த் போன்ற நட்சத்திரங்களுக்கு இந்தப்படம் வந்தால்தான் புனர் வாழ்வு. இவர்களது சமீபத்திய படங்கள் எதும் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை. மணிரத்னத்தையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

●● அடுத்தது 'மகளிர் மட்டும்'. எழுத்தாளர் ம.வே. சிவகுமாரின் கவர்ச்சிகரமான ஒரு சிறுகதையின் டைட்டிலை மட்டும் எடுத்துக் கொண்டு, எக்ஸ்போர்ட் கம்பெனியில் பணிபுரியும் பெண்களின் பிரச்னையை டீல் பண்ணியிருக்கிறார்கள் என்கிற அளவில் - களம் புதிது. நாஸர் ஹீரோ வாகியிருக்கிறார். ரேவதி கண்ணாடியுடன் வித்தியாச கெட்-அப்பில். எல்லாவற்றுக்கும் மேல் கமலஹாசனின் சொந்தப் படம். அவரே கதை, திரைக்கதை சமாசாரங்களை எழுதியிருப்பதாகக் கேள்வி. (ஓரிரு சீனில் நடித்திருப்பதாகவும்.) படம் வெளிவந்தால் தாய்க்குலத்தின் ஆதரவு நிச்சயம் இருக்கக் கூடும். கிரேஸி மோகன் வசனங்கள், கொஞ்சம் போல் சிரிக்கவைக்காமல்

* 'மகளிர்மட்டும்' - ரேவதி



ஜெயிக்கும்?



* 'கிழக்குச் சீமையிலே' - விக்னேஷ், அஸ்வினி

போகாது. இன்னொரு விஷயம்- இளையராஜா இசை. சமீப காலமாய் ராஜாவின் இசையமைப்பில் சூப்பர் 'ஹிட்' பாடல்கள் என்பதாக எதையும் சொல்ல முடிய வில்லை. இந்தப் படத்தில் அவர் தம்மை மறுபடி நிரூபிக்க முயற்சி எடுத்திருப்பதாகப் பேச்சு.

●● 'கிழக்குச் சீமையிலே' பாரதிராஜா படம். சமீபகால சரிவுக்குப் பின் மீண்டும் ஒரு உத்வேகத்துடன் புறப்பட்டிருக்கிறார். அவரது 'குழு'வில் மகத்தான மாறுதல்கள். இளையராஜா இல்லை - ஏ.ஆர். ரகுமான்! கதாசிரியர் கலைமணியோ, செல்வராஜோ இல்லை - யாரோ புது முகம்! பாரதிராஜாவின் நிலையை நிர்ணயிக்கப் போகிற படம். வழக்கம் போல் கிராமத்துக் கதைதானெனினும் இதில் மறுபடி 'முதல் மரியாதை' பாரதிராஜா எழுந்து நிற்கப் போகிறார் என்கிறார்கள். ராதிகா வேறு நடிக்கிறார். ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள்.

●● 'உழவன்' என்றொரு படம். சரியான விளம்பர மில்லாததால் ''அப்படியொரு படம் வருகிறதா?'' எனப் பலரும் கேட்கிறார்கள். வருகிறது. 'இதயம்' வெற்றிப்படம் தந்த டைரக்டர் கதிரின் டைரக்ஷனில். உழவனாகப் பிரபு. கல்லூரி மாணவர்களின் ஒருதலைக் காதலை 'இதயத்'தில் தந்தவர், இன்று தவிர்க்க முடியாமல் கிராமியத்துக்குப் போயிருக்கிறார். படத்துக்கு மிகப் பெரிய பலமாக இருக்கப் போவது ஏ.ஆர். ரகுமானின் இசை. படம் ஓடினால் பிரபுவுக்கு நல்ல காலம். சமீப காலமாய் அவர் தொடர்பான கிசு கிசு தவிர, படங்கள் ஒன்றும் ஓர்க்-அவுட் ஆகாத நிலை. இந்தப் படம் அவரது பெரிய எதிர்பார்ப்பில் வெளியாகிறது.

●● 'எங்க முதலாளி' பஞ்சு அருணாசலம் தயாரிப்பில் விஜயகாந்த் படம். விசாரித்த அளவில் 'கரம் மசாலா'வாம். சின்னக் கவுண்டருக்குப் பிறகு விஜயகாந்த்துக்குப் பயங்கரமான இறங்கு முகம். இந்தப் படத்திற்குப் போதிய விளம்பரம் வேறு இல்லை. பொறுத்திருந்து பார்ப்பது தவிர வேறு வழியில்லை.

●● 'கிளிப்பேச்சு கேட்கவா'. பாசில் படம். மம்முட்டி, கனகா. மலையாள டப்பிங் இல்லை. ஒரிஜினல். இளையராஜா இசை. பாசில் படத்தில் எப்போதும் நல்ல கதை இருக்கும். இதிலும் அதற்குக் குறை இருக் காது என நம்பலாம்.

●● AIRPORT - இங்கிலீஷ் படம் இல்லை. சத்யராஜ் படம். மலையாள ஜோஷி டைரக்ஷன். நெடுநாள் தயாரிப்பில் இருந்த இந்தப் படம், இந்த தீபாவளிக்கு வந்து விடும் என்கிறார்கள். பாட்டு எதும் இல்லை என்பது ஒரு விசேஷம்!

●● 'ச பா ஷ் பாபு' - போன நூற்றாண்டு டைட்டிலில் வரும் படம். ஹீரோ - சிலம்பரசன்! சிலம்பரசனுக்காகவே எடுக்கப்பட்டுள்ள படம். அவனது ஸோலோ நடனம், சண்டை, டயலாக் என - அவனது ரசிகர்களுக்கு மட்டுமேயான படம். ராஜேந்தர் இல்லை இதில். சசி மோகன் டைரக்ஷன்.

●● சின்ன ஜமீன், சக்கரவர்த்தி - இரண்டுமே கார்த்திக் படங்கள். பிரசித்தி பெற்ற 'தக்காளி உருட்டுக் காட்சி'யால் ஏற்கெனவே மக்கள் மத்தியில் அறிமுகமாகியிருப்பது சின்ன ஜமீன். சக்கரவர்த்தி என்றொரு படம் வருவதே இதை எழுதிக்

கொண்டிருக்கிற நேரத்தில்தான் நமக்கே தெரியும். இரண்டு படத்தையும் ஒரே சமயத்தில் ரிலீஸ் பண்ணுவார்களா என்பது தெரியவில்லை. ஏதாவது ஒன்றை நிறுத்தி வைக்கக் கூடும்.

●● சந்தைக்கு வந்த கிளி, சின்ன தேவன், குயில் தோப்பு, த்ரில், செந்தூரப் பாண்டி - இவையும் தீபாவளி ரிலீஸுக்காகக் காத்திருப்பவை. இதில் 'குயில் தோப்பு' ஆர். செல்வராஜ் படம். அவரது கதை மட்டுமே மூலதனம். ஒரு குறிப்பிட்ட வட்டத்தில் இப்படம் பற்றிப் பெரிதாகச் சொல்கிறார்கள்.


●● 'த்ரில்' என்பது மர்மப்படம். புதியவர்களின் படைப்பு. சின்ன தேவன் - 'மங்கள நாயகன்' கணேஷ் நடிக்கும் படம். அவருக்கு இன்னும் சூப்பர் ஸ்டார் ஆகும் ஆசை விடவில்லை என்பதற்கு இந்த மறு முயற்சி ஒரு சான்று.

●● 'அன்னைவயல்' என்கிற 'பாக்ஸ்' படத்தைத் (கவனிக்க : பாக்ஸ் ஆபீஸ் அல்ல) தந்த குருஜியின் புதிய படம் 'சந்தைக்கு வந்த கிளி'. இதிலாவது நிமிர்ந்து நிற்கும் முயற்சியில், கொஞ்சம் அதிகம் சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கக் கூடும்.

இத்தனை படங்களில் எத்தனை நிச்சயம் வரப்போகிறது என்று சொல்வது கஷ்டம். ஆனால் 'திருடா திருடா', 'கிழக்குச் சீமையிலே', 'உழவன்' ஆகியவை, எல்லா சம்பிரதாயங்களும் முடிந்து திரையிடத் தயாராயிருக்கும் படங்களுள் குறிப்பிடத் தகுந்தவை.

போட்டியிடும் பல படங்களுக்குள் கொஞ்சம் கூடுதலாக அறிமுகமானவை என்பதுடன் மணிரத்னம், பாரதிராஜா, பிரபு போன்றோர் மீதுள்ள எதிர்பார்ப் பினாலும், இம்மூன்றும் வரிசைப்படியே ஹிட்டாகும் என்பதாகப் பரவலாகக் கணிக்கப்படுகிறது.

– கிச்சா.



ஓர் இனிய வெற்றிக் கதை!

சிறுகுறுப்புக்கு வேறு பெயர் ஏதாவது வைக்கலாம் என்றால், அகர்வால் பவன் அதிபர் கணேஷ் குப்தாவின் பெயரைச் சொல்லிவிட லாம்.


''சென்னையில் நான் அகர்வால் பவன் ஆரம்பித்தது 1975 ல். 77 - ல் ராமகிருஷ்ணா லஞ்ச் ஹோமை ஏற்றுக் கொண்டோம். என் தகப்பனார் கூட இதே தொழிலில் ஈடுபட்டிருந்ததால், எனக்கும் இயல்பாகவே இந்தத் தொழிலில் ஆர்வம் இருந்தது. இப்போதும் கூட எந்த வகை ஸ்வீட்டையும் பிராக்டிகலாக நானே அடுப்பங்கரையில் போய்த் தயார் செய்யும் திறமை எனக்கு உண்டு...'' என்று கூறும் கணேஷ் குப்தாவின் சகோதரியின் கணவர் ராஜஸ்தானிலிருந்து 1949 - ல் மதுரை வந்து, 'டெல்லி வாலா ஸ்வீட்ஸ்' தொடங்கி கோவை, பங்களூர் என்று விரிவுபடுத்தியவர். இந்தப் பின்னணியில் வந்த கணேஷ் குப்தா, மிடில் கிளாஸ் மக்கள் இது போன்ற ஸ்வீட் வகைகள் விலை உயர்வானவை என்ற அபிப்ராயத்தோடு சற்று எட்ட இருந்தே பார்த்துவிட்டுப் போய்க் கொண்டிருந்த நிலையை மாற்றிய முதல் மனிதர் என்று சொல்லலாம்.

''உங்கள் வெற்றிக்கு என்ன காரணம்?''

''ப்யூரிடி. பயன்படுத்தும் சுத்தமான அக்மார்க் நெய், மற்றும் ஆதாரப் பொருட்கள். குவாலிடி - நாங்கள் உருவாக்கியிருக்கும் தரம். இவற்றின் அடிப்படையில், நியாயமாக நிர்ணயிக்கப்பட்ட விலை... சாதாரணமாக, மக்களின் நம்பிக்கையைச் சம்பாதிக்க, சில வருடங்கள் ஆகும். ஒரு தடவை, இரண்டு தடவை, ஸ்வீட் வாங்குவார்கள். ஆனால் தொடர்ந்து வாங்கிக் கொண்டே இருக்கப் பண்ணுவதுதான் வியாபாரத்தின் வெற்றி. 'இங்கே ஸ்வீட் வாங்கினால் நாம் எதிர்பார்க்கும் சுவை இருக்கும்' என்ற நம்பிக்கையை ஒரு வருடத்திலேயே உருவாக்கினோம். நாங்கள் 'பேக்' செய்து கொடுப்பது வெறும் ஸ்வீட்டை மட்டுமல்ல. நம்பிக்கையை!''

காங்கேயத்திலிருந்து மிக உயர்தர நெய்; உள்ளூரிலேயே தருவிக்கப் படும் தானிய, பருப்பு வகைகள்; பண்ருட்டியிலிருந்து முந்திரிப் பருப்பு; வடக்கேயிருந்து வரும் உலர்ந்த பழங்கள், குங்குமப்பூ. ''இவற்றை எல் லாம் வாங்கும்போது, இவை இந்தத் தரத்தில் இருக்க வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லியே வாங்குகிறோம். இதில் விட்டுக் கொடுப்பதே கிடையாது!''

* கணேஷ் குப்தா



ஒரு ஸ்வீட் வகை நன்றாயிருக்கிறதா, இல்லையா என்று யார் தீர்மானிப்பது? ''மக்கள்தான் சொல்ல வேண்டும்!'' என்கிறார் குப்தா.

''நான் தமிழக மக்களை ஒரு விஷயத்தில் மனமாரப் பாராட்டுவேன். நல்ல ருசியை உணர்ந்து ரசிக்கத் தெரிந்தவர்கள் இவர்கள். கியூவில் நின்று வாங்கவும் தயங்காத இந்த மக்களின் ஆசிர்வாதம்தான் என் வெற்றிக்கு இன்னொரு படி. அதே போல், என் ஊழியர்களின் பண்பாடு நிறைந்த சேவையும் மற்றொரு காரணம். ஆர்டர் பண்ணினால்



* அகர்வால் பவன்

குறிப்பிட்ட நாளில் டெலிவரி கொடுக்கிற உத்தரவாதம் இன்னொரு ப்ளஸ் பாயின்ட்.''


வாடிக்கையாளர் திருப்தி என்பது வியாபாரத்தில் மிக மிக முக்கியம். மீதி ரூபாய் கொடுக்கும் போது, புத்தம் புதிய நோட்டுக்களைக் கொடுக்கிறார் கணேஷ் குப்தா. ''இதற்காகவே கூட என்னிடம் சில வாடிக்கையாளர்கள் தொடர்ந்து வரலாம் இல்லையா?'' என்கிறார், புன்னகையோடு.

அகர்வால் பவன் ஆரம்பித்த புதிதில் இத்தனை வகை ஸ்வீட்டுகள் கிடையாது. இப்போது நூறுக்கு மேல். ''புதிது புதிதாக ஆராய்ச்சி செய்து உருவாக்கிக் கொண்டே இருப்போம்'' என்கிறார் இவர்!

காலையில் ஐந்து மணிக்கு எழுந்து, வாக்கிங் முடித்துவிட்டு, குளியல். பூஜை அறையில், சுவாமிக்கு முன் ஒரு சாஷ்டாங்க நமஸ்காரம். (''விரிவான பூஜை எல்லாம் கிடையாது. என் கோயில் இந்தக் கடைதான். என் பூஜை இந்த வியாபாரம்தான்!'') பிற்பகல் லஞ்ச். பிறகு சற்றே ஓய்வு. மாலை மறுபடி கடை.

''ரிலாக்சேஷன், எல்லாம் கிடையாதா? இத்தனை உயர்வை எட்டிய பிறகும், நீங்களே இங்கே வந்து உட்கார வேண்டுமா?''

''உயர்நிலையை எட்டிய பிறகுதான் பொறுப்பு இன்னும் அதிகமாகிறது. அதைக் காப்பாற்றிக் கொள்ள மேலும் கவனமாய் இருக்க வேண்டும். ஓய்வுக்கெல்லாம் ஏது நேரம்?''




மகன்கள் நிர்மல் குமார் குப்தாவும், சுரேஷ் குமார் குப்தாவும் இதே துறையில், அப்பாவுக்கு உதவியாக இருக்கிறார்கள்.

ஆயிரக் கணக்கான பேருக்கு வேலை வாய்ப்புகள் கொடுத்திருக்கும் இந்தத் தொழிலில் சுடுபட இன்று பலர் முன் வருகிறார்கள். அவர்கள் வெற்றி பெற எவை முக்கியத் தேவை?

''1. கடினமாக உழைக்கத் தயாராய் இருங்கள். 2. தொழில் தொடங்கிய பிறகு, மனத்தில் எந்த நேரமும் நாம் முன்னேற வேண்டும், முன்னேற வேண்டும் என்ற உந்துதல் இருந்து கொண்டே இருக்க வேண்டும். 3. தரத்தைக் காப்பாற்றத் தயங்கவே தயங்கக் கூடாது. 4. ஊழியர்களிடமாகட்டும், பலாரில் ஆகட்டும், நாணயமாக நடந்து கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்!'' என்கிறார் குப்தா.

– சாருகேசி

புகைப்படங்கள் : கோபிநாத்



இப்படித்தான் பிறக்கிறது

தமிழ் சினிமாவின் உரியடி, வழுக்கு மரம் மாதிரியான மார்க்கெட் நிலவரங்களில் சிலர் உச்சாணிக் கொம்பை வெகு சீக்கிரம் பிடித்து விடுகிறார்கள். அப்படியானவர்களுள் சமீபத்திய சகாப்தம் ஏ.ஆர். ரகுமான். வைரமுத்துவோடு சேர்ந்து சின்னச் சின்னதாக ஆசைப்பட்டு, இன்று பெரிய பெரிய கோட்டைகளைப் பிடித்துக் கொண்டிருக்கும் இந்த 'இருபது'களின் பிரதிநிதியை - அவரது ஆஸ்தானக் கவிஞரோடேயே சேர்த்து சந்தித்தாலென்ன என்று தோன்றியது.

மனுஷன் மகா சங்கோஜி. பேசுவதற்குக் கூட வெகுவாக யோசிக்கிறார். உடை அலங்காரம், தலைமுடி கலைந்திருத்தல், மூன்று நாள் தாடி என்று எது பற்றியும் கவலை கொள்ளாத 'கருமமே கண்ணாயினார்'. குரல் கூட, கொசு ரீங்காரம் மாதிரித் தான் வருகிறது. ஒரு வினாடி கையும் வாயும் சும்மா இருக்கிறதில்லை. தாளமும் ராகமும். முன்நெற்றி மயிரை ஒதுக்கி விட்டபடி முறுவலிக்கிறார். ரொம்ப அழகாக வெட்கப்படுகிறார்.

நேர் எதிர் வைரமுத்து. 'கப்பலோட்டிய தமிழன்' எஸ்.வி. சுப்பையாவின் மிடுக்கு. குற்றால உற்சாகம், வைகை எக்ஸ்பிரஸ் வேக வார்த்தைப் பிரயோகம். வெகு கலபமாய் உணர்ச்சி வசப்படுகிறார். (அந்த நேரங்களில் சற்றுக் கூடுதல் அழகாய்த் தெரிகிறார்!)

எப்படிச் சேர்ந்தது இந்த ஜோடி? எப்படி ஜெயித்தது இந்த ஜோடி?

'சின்னப் பையன்' என்கிற எண்ணம் கவிஞருக்கு இல்லை. 'பெரிய கவிஞர்' என்கிற 'ஒதுங்கல்' ரகுமானுக்கு இல்லை. சுருதி கூட்டின வீணையின் ஏழு தந்திகள் ஒன்றாய் இழைவது மாதிரி அத்தனை லாவகம். அத்தனை இழைவு.

இவர்கள் எப்படி பணிபுரிகிறார்கள்? நாம் பார்க்கப் போனது அதைத்தான்.

வைரமுத்து சொன்னார்: ''மெட்டுக்குப் பாட்டு, பாட்டுக்கு மெட்டு பற்றியெல்லாம் நிறையச் சொல்லியாகி விட்டது. சுவாரஸ்யமாக வேறு ஏதும் பேசுவோமே!''

வரப்போகிற 'திருடா திருடா'வில் ஒரு பாடல். கதாநாயகி, மோகம் பொங்கப் பாடுகிற சிச்சுவேஷன். டியூன் போடுகிறார் ரகுமான்.

'தா... தா... தத்தத்ததா....' வைரமுத்து ரெடியாகிறார்... லேசான ஹம்மிங்....

தமிழில் தனிச்சொல், நெடிலில் ஆரம்பமாகும் ஓரெழுத்துக்கள் ஏ, நீ, வா, போ, ஓ, பூ.... என மிகச்சிலதான்.

இதில் எதைத் தேர்ந்தெடுப்பது?

காதல்பாட்டு.

'ஏ, ஓ, நீ, பூ வெல்லாம் ஏராளமாய்

இவர்கள் பாட்டு...

வந்து சலித்தவை....

புதிதாக ஒரு சொல்... ஒரு சொல்....

சில நிமிடத் தவிப்பில் 'நீ' பிறக்கிறது. கவிஞருக்கு உற்சாகம் பொங்குகிறது!

'நீ...நீ...தித்திக்கும் நீ....'

''வாவ்...!'' என்கிறார் மணிரத்னம். உற்சாகம் அவர் முகத்தில் தெரிகிறது... ரகுமானுக்கும் அது தொற்றிக் கொள்கிறது.

சரணம் அடுத்தது. ஏற்கெனவே வைரமுத்து எழுதி வைத்துள்ள 'வா' என்கிற கவிதையைச் சரணமாக்கி விட நினைக்கிறார் மணிரத்னம்.

கண்ணுக்குள் நீயிருந்தும் உறக்க
மென்ன?
கற்பூர தேகந்தான் கரைவதென்ன?
பின் நோக்கி உன் கால்கள் நடப்ப
தென்ன?
பிரியத்தைப் புடைவைக்குள் மறைப்ப
தென்ன?

ரகுமான் ட்யூன் போட ஆரம்பிக்கிறார்.

மெல்லிய ஹம்மிங்....

''சார்... அந்த நாலாவது வரில ஒரு வார்த்தை எடுத்துட முடியுமா? லேசா இடிக்குது...''

''பிரியத்தைப் புடைவைக்குள் மறைப்பதென்ன' வில் புடைவையை எடுத்து (ஸாரி!) விடுகிறார் வைரமுத்து.

'தானனன்ன தான னன்னன்னா....'

'பிரியத்தை மறைப்பதென்ன...'

ஓ.கே! என்கிறார் மணிரத்னம்.

பாடல் அடுத்த வரிக்குப் போகிறது.

பாடுவதற்கும் கேட்பதற்கும் இனிமையாகத்தான் இருக்கிறதெனினும் அதென்ன 'தித்திக்கும் நீ'?

கேள்வியை நாம் தொடுக்கிறோம். சிரிக்கிறார் கவிஞர்.

''தீக்குள் விரலை வைத்தால், பாரதிக்கு நந்தலாலாவைத் தீண்டும் இன்பம் தோன்றவில்லையா?''

ரகுமானுக்கு ஒரு பெரிய குறை. அவரிடம் வருகிறவர்களெல்லாம் 'சின்ன சின்ன ஆசை' மாதிரியும் 'உசிலம்பட்டி பெண்குட்டி' மாதிரியும் ட்யூன் போட்டுக் கொடுங்கள்'' என்றுதான் கேட்கிறார்களாம்.

''பாடலைப்பற்றி எனக்கு ஒரு ஐடியா கிடைக்கும் போது, முழு ஈடுபாட்டுடனும் உத்சாகத்துடனும் என்னால் இசையமைக்க முடியும். உதாரணமாய் 'ரோஜா'வில் வரும் காஷ்மீரத்து வெண்பனிப் பின்னணியில் ஒரு டூயட் என்று சொன்னதன் விளைவு தான் 'வெள்ளை மழை' பாட்டு. எத்தனை சக்ஸஸ் ஆயிற்று அது? அது புரியவில்லை பலருக்கு. ஹிட்டான பாடலின் ட்யூனிலேயே கேட்கிறார்கள். ரிபீட்டிவிடியே அனாவசியமென நினைக்கிறார்கள்.''

வைரமுத்துவின் பிரச்னை வேறு விதம். 'சினிமாப் பாடல்கள் இலக்கியமா' என்று கேட்கிறார்கள். பலருக்குக் கவிதைக்கும், பாடலுக்குமே வித்தியாசம் தெரிவதில்லை.

''வாளற்றுப் புற்கென்ற கண்ணும்
அவர் சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்''

''இது குறள். இதற்கு, காதலன் சென்ற வழியைப் பார்த்துப் பார்த்து, காதலியின் கண்கள் ஒளியிழந்து விட்டன. நாட்களை எண்ணி யெண்ணி விரல்கள் தேய்ந்து விட்டன என்பது பொருள். இதை அப்படியே ட்யூன் செய்தால் ரசிக்க முடியுமா?

எனவே,

'மாலைகூடும்
தேதி எண்ணிப்
பத்து விரலும்
தேயும்



இவன் இழுத்துவிடும் பெருமூச்சில்
ஈரச் சேலை காயும்'
என்று எழுதினேன்'' என்கிறார்.

பாட்டில்லாமல் சினிமா நிற்காதா? இப்படியொரு கேள்வியைக் கேட்டதும் வைரமுத்து சற்று யோசித்தார்.

''பாடல் என்பது கதையை நகர்த்துகிற கருவி. ஒரு கட்டத்தில் கதாபாத்திரங்கள் எவ்வளவு வசனம் பேசினாலும் திருப்தி ஏற்படாது. அங்கே நாலு வரியில் ஒரு பாட்டு வைத்து விட்டால் போதும், சுவாரஸ்யம் கூடிவிடும்.

''உதாரணமாக 'சொன்னது நீதானா' பாடல். 'பாட்டு வேண்டும், வேண்டும் என்று கதை கெஞ்சுகிற இடத்தில் செருகப்பட்ட பாடல்... பக்கம் பக்கமாக பேசப்பட வேண்டிய விஷயங்களை அந்த மூன்று நிமிடப் பாடல் சொல்லிப் போய்விட்டது. பாடல் அப்படி இருக்க வேண்டும்! அது அவசியம்தான்!''

''தள்ளாதே தள்ளாதே தாவணியைத்
தள்ளாதே'வும் அவசியம் தானா?''
கொஞ்சம் யோசிக்கிறார்.

''இல்லை. இது entertaining விஷயம். அனாவசியங்களே சில நிர்ப்பந்தங்க ளால் அவசியமாகி விடுகின்றன. கதை நகர்த்தப் பாடல் என்பது போய், பாடலுக் கேற்ப கதை பண்ணும் காலம் இது. இது மாறிவிடும்!

''சமீபமாக 'கிழக்குச் சீமையிலே' படத்தில் ஒரு பாடல். இது முந்தின ரகம். பாடலுக்கு முக்கியத்துவம் கேட்கும் ரகம்.

''திருமணம் முடிந்து, புகுந்த வீடு செல்கிறாள் தங்கை. முன் வண்டியில் அவள் செல்ல, பின் வண்டியில் தொடர்கிறான் அண்ணன். இந்தச் சூழ்நிலைக்குப் பாட்டு கேட்டார் பாரதி ராஜா...''

உற்சாகமாக திசைமாறுகிறார் வைரமுத்து.

''...கவிஞரைப் பாட்டு எழுத விட்டு விடுவோம். அப்புறம் ட்யூன் போட்டுக் கலாம்'' என்று ரகுமான் சொல்லிவிட்டார்.

வைரமுத்துவுக்கு மகா உற்சாகம். அண்ணன் தங்கைப் பாசம். பிரிவில் சோகம். அந்த மண்ணின் மணம், கலாசாரம் இத்தனையும் வந்தாக வேண்டும். பாட்டு வருகிறது.

''வாக்கப்பட்டு வண்டி கட்டிப் போற
பொண்ணே!
வலது கண்ணைப் பிரிஞ்சி போற
இடது கண்ணே....
நீ வெளையாடின தாவாரம் வெறிச்
சோடிப் போனதம்மா...
குருணை போட்டு நீ வளர்த்த கோழி
கூட அழுகுதம்மா....''

அழகான ஆரம்பம்.

ஆனால் படத்தில் வருகிற பாட்டு இது இல்லை!

இவரைப் பாட்டு எழுதச் சொல்லி விட்டு ரகுமான், தான் ஒரு ட்யூன் போட்டு வைக்க, ரெண்டும் ஒத்து வரவில்லை.

அதனாலென்ன?

உடனே பாடல் வேறுமாதிரியாகப்
பிறக்கிறது....
கத்தாழங்காட்டுவழி கள்ளிப்பட்டு
ரோட்டு வழி
வண்டிகட்டிப் போறவளே வாக்கப்
பட்டுப் போறவளே
வண்டிமாடு எட்டிவெச்சு முன்ன
போகுதம்மா
வாக்கப்பட்ட பொண்ணுமனம்
பின்ன போகுதம்மா....

இத்தோடு முன்பெழுதிய பாடலிலிருந்தும் ஒரு சில வரிகள் சேர்த்து 'தயார்' பண்ணி விடுகிறார்.

இது மாதிரியான கிராமியப் பாடல்களுக்கெல்லாம் ரகுமானால் எப்படி இசைக்கச் சாத்தியமாகிறது? ரகுமான் மிக அதிக அளவில் மேற்கத்திய இசைக்கருவிகளை - கம்ப்யூட்டர் யுக்திகளைப் பயன்படுத்தி இசை அமைக்கிறவர். இதுமாதிரி கிராமிய ராகமெல்லாம் சரிப்படுமா?

மகத்தான சந்தேகம். அவரிடமே கேட்டபோது -

''நான் ஒண்ணும் ஃபாரின் ரிட்டன் இல்லையே? இந்த ஊருதானே. எப்படி ரசனை இல்லாமல் போகும்?'' என்கிறார்!

ரகுமானின் 'ரசனை' பற்றிச் சட்டென்று இடைமறித்து வைரமுத்து சொன்னார்.

''வரப் போகிற 'காதலன்' படத்திற்காக ஒரு பாட்டு.

'முப்பது வயதில் முடிவெள்ளை யென்றால் டேக் இட் ஈஸி பாலிஸி' என்று துவங்கி, வரிசையாக டேக் இட் ஈஸி பாலிஸி தொடர்கிறது. முதல் பிள்ளை பெண் பிள்ளையென்றால், அழுத காதலி அண்ணே என்றால் என்று சொல்லிக் கொண்டே வந்து, இறுதி வரி - 'வழுக்கைத் தலையன் திருப்பதி போனால் டேக் இட் ஈஸி பாலிஸி' என்று முடிந்ததும், ஊஞ்சவில் உட்கார்ந்து பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்த ரகுமான், தாவிக் குதித்து குபீர் என்று சிரித்து, வெகுவாக அந்த நகைச் சுவையை ரசித்தார். 'உம்'மென்றிருக்கிறாரே என்று பார்க்காதீர்கள். அழுத்தமான ரசிகன்!''

நாம் ரகுமானைப் பார்க்கத் திரும்புகிறோம். ஆள் அம்பேல் ஜூட். எதிர் ரூம் கண்ணாடிக் கதவுகளின் பின்னால் ரீ-ரிக்கார்டிங்.....

சந்திப்பு : சந்திரமௌலி
மேலட்டை வண்ணப்படம்,
புகைப்படங்கள் : கோபிநாத்


இந்தா, வாங்கிக்க, பஸ் ஸ்டிரைக்!
தொழிற்சங்கத் தலைவர்
பஸ் பயணி
ஸ்டிரைக்கை முறியடிச்சுக் காட்டறேன்
முறியடிக்க முடியுமா, பார்த்திருவோம்...
ஒழியணும்யா வாழப்பாடி! பாயாசம் ரொம்ப ஜோரு...
வேண்டாம் வாழப்பாடி! வேணும் மட்டன் புலாவ்...
ஏய்...
எல்லாம் அம்மா பண்ண வேலை... அதான் அவங்க விருந்து சாப்பிட்டா, எனக்கு வயத்தைக் கலக்குது!...
ஃபைவ் ஸ்டார் விருந்து.
௨௦க்கும் மேற்பட்ட வாழப்பாடி எதிர்ப்பு எம்.எல்.ஏக்கள்
தமிழர்களின் உண்மையான தலைவன் நான்தான்... புலிகளே சொல்லிட்டாங்க! உர்ர்....
வை.கோ.
நீ புலி வேஷம் போட்டு ஆடினா நான் வேடமில்லேயே ஆடறேன்! உர்ர்ர்...



கல்கி



1993
நவம்பர் 14
மலர் : 52
இதழ் : 16
ஸ்ரீமுக
ஐப்பசி 29

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

அரசுப் போக்குவரத்தே, அட அழகே!

நவம்பர் இரண்டாம் தேதி செவ்வாய்க் கிழமை, தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்கள் நடத்திய மின்னல் வேலை நிறுத்தத்தால் மக்கள் அடைந்த துன்பம் சொல்லி மாளாது. கல்யாணத்துக்குப் புறப்பட்டவர்கள் கண்கலங்கி நின்றார்கள்; காரியாலயம் கிளம்பியவர்கள் கைகளைப் பிசைந்தார்கள்; பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் போக முடியாமல் பல்லாயிரக்கணக்கானவர்கள் பரிதவித்தார்கள். வேலை நிறுத்தம், பகுதி அளவில் செவ்வாய்க்குப் பிறகும் நீடித்தது.

பஸ் ஊழியர்களுக்கு போனஸ் தரப்பட வேண்டியதில்லை என்று யாரும் கூற மாட்டார்கள். ஆனால் பல்வேறு போக்குவரத்துக் கழகங்களும் பெரு நஷ்டத்தில் இயங்கும் போது, போனஸ் என்பதை ஓர் உரிமையாகக் கோருவது அர்த்தமற்றதாகிறது. போனஸ் பெற வருவாய் உச்சவரம்பு என்று அரசும், கட்டாய போனஸ் என்று நீதிமன்றமும் நிர்ணயித்துள்ளதற்கு இருதரப்பும் மதிப்பளித்துத்தான் நடந்து கொள்ள வேண்டும்.

சங்கத் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் தமிழக அரசு போனஸ் விகிதத்தை அவசரமாக அறிவித்ததில் தவறிருக்கலாம். பஸ் ஊழியர்கள் அதில் குறைகாணலாம். ஆனால் அதற்குப் பரிகாரம், திடீர் வேலை நிறுத்தம் செய்து பல்லாயிரக்கணக்கான மக்களைப் பரிதவிக்க விடுவது அல்ல. ஸ்ட்ரைக் என்பதையே கனவிலும் எண்ணிப் பார்க்கக் கூடாத துறைகளில் ஒன்று பஸ் போக்குவரத்து. ஆனால் மெத்தப் படித்த டாக்டர்களே இன்று வேலை நிறுத்தம் என்ற கொடிய ஆயுதத்தைக் கையாளும் போது, பஸ் ஊழியர்களை எப்படிக் குறைகூற முடியும்?


பஸ் ஊழியர் வேலை நிறுத்தத்தால் மக்களுக்கு நேர்ந்த அவதி ஒருபுறமிருக்க, அன்று பல்வேறு தொழிலகங்களில் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் ஏற்பட்ட நஷ்டம் தமிழகத்துக்குப் பல கோடி ரூபாய் அளவில் இருக்கும். தேசபக்தி என்பது நமக்கிருந்தால் நிச்சயம் இதற்காக வருத்தப்பட வேண்டும். இன்னொரு பக்கம் ஆட்டோ, டாக்ஸி போன்ற வாகன ஓட்டிகள் ''கொள்ளை'' என்று கருதத்தக்க அளவில் மக்களைக் கசக்கிப் பிழிந்தது, கண்ணீரை வரவழைக்க வேண்டும். ஒரு அநீதியிலிருந்து சங்கிலித் தொடராகப் பல அநீதிகள் நிகழும் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

தீபாவளிக்கு முன்னதாக ஒரு நெருக்கடியை அரசுக்கு ஏற்படுத்தினால்தான் வெற்றி கிட்டும் என்ற நோக்கில் போக்குவரத்துத் துறை தொழிற்சங்கத் தலைவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவு. ஆனால் இது தர்மம் அல்ல. கோரிக்கைகளை முன்வைத்து, போதிய அவகாசம் தந்து, அப்படியும் பேச்சு வார்த்தை நடக்கவில்லையெனில், தேதி குறித்து விட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதுதான் ''ஜென்டில்மேன்'' செய்யக்கூடியது. மின்னல் வேலை நிறுத்தத்தால் போக்குவரத்து ஊழியர்கள், மக்களின் கொஞ்ச நஞ்ச அனுதாபத்தையும் அடியோடு இழந்து விடுகிறார்கள். ஏற்கெனவே போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளில் மக்களுக்கு உள்ள வெறுப்பு மேலும் அதிகரிக்கவே செய்யும்.

பல்வேறு தனியார் நிறுவனங்கள், பஸ் விட அனுமதிக்கப்பட்டிருந்தால் ஒரு நிறுவனத்தில் ஒருவேளை வேலை நிறுத்தம் என்றாலும் மற்ற பல நிறுவன பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கும். மக்களின் அவதி இந்த அளவுக்கு இராது. மேலும் போட்டா போட்டி காரணமாக மக்களுக்கு வசதிகளும் அதிகரிக்கும். பஸ் ஊழியர்கள் பண்பாட்டுடன் பயணிகளிடம் நடந்து கொள்வார்கள். இப்போதே கூட தொலைதூர பஸ் பயணங்களுக்குக் கட்டணம் சற்று அதிகமானால் கூடப் பாதகமில்லை என்று பலரும் தனியார் சர்வீஸையே விரும்புகிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். திறமையாக நிர்வகிக்கப்படும் தனியார் நிறுவனங்கள் நல்ல லாபம் கண்டு, ஊழியர்களுக்கு போனஸ் தரவும் தயங்காது. மக்களின் வரிப்பணம் போக்குவரத்துக் கழகங்களின் பல கோடி நஷ்டங்களை ஈடுகட்டப் பயனாகும் பரிதாப நிலை தோன்றாது.

எல்லாவற்றையும் அரசுடைமையாக்கும் கொள்கை எத்தகைய மடமை என்பதை இந்த பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் மக்களுக்கு நன்றாக உணர்த்தியிருக்க வேண்டும். அரசுக்கு?

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்வி களுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது.)



●● என்னிடம் GATE-94 (MATHS) புத்தகங்கள் விற்ப னைக்கு உள்ளது. வேண்டு வோர் தொடர்பு கொள்க.

- ஆர். கிருஷ்ணன்,
1-B, தலையாரி குரு
நாதன் கோயில் தெரு,
தெற்கு மாசி வீதி, மதுரை - 1.

பாலம்

●● பசு மாடு வளர்க்கும் அன்பர்கள், தங்களால் பராமரிக்க இயலாத சூழ்நிலை யில், அவற்றை அடிமாடு இம்சையிலிருந்து காப்பாற்றி, கடைசி வரை பாதுகாத்து வர என்னிடம் திட்டம் உள்ளது. விவரங்க ளுக்கு:

- ரா. ஏழுமலை,
ஈஸ்வரன் கோயில் தெரு,
திருவேற்காடு,
சென்னை - 77.

●● சிறு முதலீட்டில் தொழில் தொடங்க, கம்ப்யூட்டர் ஜெராக்ஸ் நிலை யம் நிறுவ எண்ணியிருக்கிறேன். நல்ல நிலையில் உள்ள கம்ப்யூட்டர் ஜெராக்ஸ் இயந்திரத்தை விற்று விட விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

- டி.சி. அம்பிகானந்தன்,
4, மேற்கு ஜோன்ஸ் சாலை,
சைதை, சென்னை - 15.

●● எனது எழுத்துலக நண்பர் எம். ஜோவலன் வாஸ் தற்போது எங்கிருக் கிறார்? தொடர்பு கொள்வாரா?

- அழகனார்,
13/525, கல்லாய்ச் சாலை,
கன்னிக்கோட்டை - 673 002.

●● ஸிலிகேட் பசைக்குப் பதிலாக நான் கண்டுபிடித்துள்ள விலை குறைந்த டி.ஏ. பேஸ்ட்டைப் பயன்படுத்தி, சிறு சோப் தயா ரிப்பாளர்கள் தரமான சோப் தயாரிக்கலாம். பயன்படுத்த விரும்புவோர் எழுதவும்.

- கஸ்தூரி ராஜா,
17, 10வது தெரு,
வேங்கடேஸ்வரா காலனி,
சென்னை - 600 051.

●● வால்மீகி ராமாய ணம், உத்தர காண்டம், சம்ஸ் கிருத மூலம், தமிழ் அர்த்தத் துடன் பி. எஸ். கிருஷ்ண சாமி அய்யர் எழுதிய புத்த கம் விலைக்குத் தேவை.

- கே. பார்த்தசாரதி,
B-11, சுபம் ஃபிளாட்ஸ்,
4, படேல் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 33.

●● குதிரை வால் சம்பா என்ற ரக நெல் வைத்திருப்போர் தெரியப்படுத்தவும். எனக்கு விதை நெல் தேவை. விலை கொடுத்துப் பெற்றுக் கொள்கிறேன்.

- இரா. சேவியப்ப உடையார்,
காடியார், அரியூர் அஞ்சல்,
605 751.

●● வட சென்னையில் பார்வையற் றோருக்கு உதவ ஒரு Readers' Association தொடங்க விருப்பம். இதில் ஆர்வமுள்ளோ ரும் இப்பகுதியைச் சேர்ந்த பார்வையற் றோரும் தொடர்பு கொள்ளவும்.

- வி. ராஜசேகரன்,
12/11, மணலிபுதுநகர்
சென்னை - 600 103.

●● ஆயில் பெயிண்டிங்குகளை விற் றுத் தரும் நிறுவனங்களின் முகவரிகளை அறிய விரும்புகிறேன்.

- ஆர். எஸ். கோபாலகிருஷ்ணன்,
93&A, சுக்கில நத்தம் அஞ்சல்,
அருப்புக்கோட்டை வட்டம்,
காமராசர் மா. வ. - 626 101.

●● எனக்குத் தெரிந்த ஏழைப் பெண் ணின் குழந்தை, கால் வளர்ச்சியின்றி உள் ளது. சென்னையில் இலவசமாகவோ, குறைந்த செலவிலோ ஜெய்பூர் காலணி (Jaipur foot) பொருத்துகிறார்களா என விவ ரம் அறிய ஆவல்.

- திருமதி பானு மகாலிங்கம்,
16, 4வது தெரு, கல்பாக்கம்,
செங்கல்பட்டு (மாவ) - 603 102.

●● எண்ணெய் பிழிதல் தொழில் தொடங்க ஆர்வம். மெஷின் யாரிடமாவது விற்பனைக்கு இருந்தால், அல்லது தயாரிப்பவர் விலாசம் தெரியப்படுத்தவும்.

- என். சத்தியநாராயணன்,
50, அகமுடையார் தெரு,
நாமகிரிப்பேட்டை - 637 406.

SUITE என்றால் 'ஸ்வீட்'!

ஐந்து நட்சத்திர ஓட்டலில், 'ஸ்வீட்'டில் தங்கியிருந்தேன் என்று பெரிய மனிதர்கள் சொல்லும் பொழுது, 'ஸ்வீட்டைச் சாப்பிடத்தானே முடியும்? எப்படித் தங்க முடியும்?' என்ற சந்தேகம் இனி உங்களுக்கு எழ வாய்ப்பில்லை.

படத்தைப் பாருங்கள் :

இதைத்தான் ஸ்வீட் என்கிறார்கள். (ஸ்பெல்லிங் படி 'ஸ்யூட்' என்று இருந்தாலும், சொல்லும்போது அதை 'ஸ்வீட்' என்றுதான் சொல்ல வேண்டுமாம்!)

பார்க் ஷெராடன் லாபி மானேஜர் சுப்பிரமணியம் நம்மை முதல் மாடியில் உள்ள ஸ்வீட்டுக்கு அழைத்துப் போய்க் காண்பித்தார். லக்சுரி ஸ்வீட்!

பிரம்மாண்டமான ஹால் மாதிரியான அமைப்பில், ஒரு பக்கம் சோபா செட், கலர் டீ.வி., அதைத் தாண்டி மதுபானம் அருந்த வசதியான 'பார்', பிரிஜ். இன்னொரு பக்கம் திரும்பினால், உட்கார்ந்தால் ஆளே உள்ளே போய்விடக்கூடிய தடிமனான சோபா செட். டீபாயில், சமீபத்திய ஆங்கில பிஸினஸ் இதழ்கள். அன்றைக்கு வெளிவரும் ஆங்கிலத் தினசரிகள். ஏ.ஸி. தவிர ஃபேன்.

ஒரு பெரிய பழக்கூடை, குக்கீஸ், சீஸ், என கொறிக்க, பசியாற பண்டங்கள்; மலர்க் கொத்து அலங்காரம். டைனிங் டேபிள் நாற்காலிகள் .

டாய்லெட்டில் தனி பெர்ஃப்யூம், ஷாம்பூக்கள், பல வகை சோப்புகள். வேண்டிய அளவு டவல்கள். குளித்துவிட்டு அணிற அங்கியும், செருப்புகளும் வேறு!

அடுத்து படுக்கை அறை. இரண்டு படுக்கைகள். இங்கேயும் டீவி உண்டு. நேரடி டயல் செய்யும் வசதி உள்ள டெலிபோன், படுக்கை அறையிலும் உண்டு.

பெரிய பெரிய நிறுவனங்களின் சேர்மன்கள், எம்.டி.க்கள், துபாய் போன்ற நாடுகளிலிருந்து வரும் பிஸினஸ் குடும்பங்கள், பணம் கொழுத்த அரசியல்வாதிகள், சினிமா நட்சத்திரங்கள் என்று, பிரபலங்கள் மட்டுமே இந்த ஸ்வீட்களில் தங்குகிறார்கள்.

கால்களை மயில் பீலியில் வருடுவது போல, தரையில் மிருதுவான கம்பள விரிப்பு. பளீரென்று உறுத்தாமல், கண்களுக்கு இதமாக ஒளி உமிழும் விளக்குகள்.





ஒவ்வொரு தளத்திலும் ஒரு கோடியில் டீலக்ஸ் ஸ்வீட்டும், இன்னொரு கோடியில் லக்சுரி ஸ்வீட்டும் இருக்கின்றன. (டீலக்ஸ் ஸ்வீட், மற்றதை விடச் சற்றே சிறியது.)

டீலக்ஸ், லக்சுரி தவிர, எக்ஸிக்யூடிவ் ஸ்வீட், பிரசிடென்ஷியல் ஸ்வீட்டுகளும் உண்டு.

லக்சுரி ஸ்வீட்டுக்கு ஒரு நாள் வாடகை சுமார் ஐயாயிரம் ரூபாய் என்றால், பிரசிடென்ஷியல் ஸ்வீட்டுக்கு இருபதாயிரம் ரூபாய்!

''ஸ்டார் அந்தஸ்து உள்ள ஹோட்டல்கள் எல்லாவற்றுக்கும் ஸ்வீட், இன்றியமையாத ஓர் அங்கம்'' என்கிறார் சுப்பிரமணியம்.

– எஸ்.வி.என்.

புகைப்படங்கள் : கோபிநாத்



சுற்றுச்சூழல் – மிரட்டும் உண்மைகள்!

- இந்தியாவில் கிடைக்கக்கூடிய நீரில், 70 சதவிகிதம் மாசடைந்துள்ளது. அதனால் வரும் நோய்களினால் 78 சதவிகித வேலை நாட்கள் வீணாகின்றன.

- பூமியில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் அறுபது லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பு தவிர்க்க முடியாத அளவில் பாலைவனங்களாகிக் கொண்டு வருகின்றன. இப்படி நிலங்கள் பாலையாவதால் ஆண்டொன்றுக்கு ரூ 44,200 கோடி இழப்பு ஏற்படுகிறது.

- இரசாயன உரங்களை 'நிலத்தின் போதை மருந்துகள்' என்று சொல்லலாம். நிலங்கள் மீண்டும் முந்தைய நிலைக்கு வருவது சிரமம். வியாபார நோக்கிலேயே இப்படி நிலத்தைப் பயன்படுத்தும் முறைகள் தொடருமாயின், வருங்காலச் சந்ததியினர் கடுமையான சோதனைகளைச் சந்திக்க நேரிடும்.

- பூச்சி மருந்துகளைப் பயன்படுத்த ஆரம்பித்ததால், மண் தனது மிருதுத் தன்மையையும் இயல்பையும் இழந்து, கடுமையான நச்சுத்தன்மை நிறைந்ததாக மாறி வருகிறது. இதனால் மண்ணின் நுண்ணுயிரிகளும் வாழ இயலாமல் போகின்றன. மண்ணின் இயற்கை வளம் இதனால் கெட்டுப் போகிறது.

- ஒலித் தொல்லையின் அளவு, குறிப்பிட்ட நிலையில் இருந்தால் மட்டுமே உயிரினங்கள் தாங்கிக் கொள்ளும். அதற்கு மேல் போனால் மனிதனுக்குச் செவிப்பறை செயலிழந்து போக வாய்ப்புண்டு. இருதயம் பலவீனப்படும். மூளையின் செயல்கள் சீராக இருக்காது. மனித உடலில் ஹார்மோன்கள் அதிகமாகச் சுரக்கும். மனம் பலவீனமடையும். கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றில் உள்ள குழந்தைகள் ஊனமுற்றுப் பிறக்க வாய்ப்புண்டு.

- வாயு மண்டலத்தில் அதிகரித்து வரும் நச்சுக் காற்றால் கி.பி. 2030-ஆம் ஆண்டில் பூமியின் மேற்பரப்பின் தட்பவெப்ப அளவு 1.5 டிகிரி செண்டிகிரேடு முதல் 4.5 டிகிரி செண்டிகிரேடு வரை அதிகரிக்கும்.

- திண்டுக்கல் வட்டாரத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் 800 ஏக்கர் விளைநிலங்கள் விவசாயத்துக்குத் தகுதியற்றவையாக உள்ளன. இப்பகுதியில் உள்ள 467 கிணறுகளில் 350 கிணறுகளில், உள்ள நீர் பயன்படுத்த முடியாத அளவுக்குச் சீர்கெட்டுப் போனது.

- ஒரு சொட்டு பெட்ரோலுக்குச் செலவிடும் பணத்தை விட ஒரு சொட்டுத் தண்ணீருக்காக அதிகம் செலவிடும் நாள் வெகு தொலைவில் இல்லை!

கற்றுச்சூழல் விழிப்புணர்வு; ஆசிரியர் : அருட்திரு இன்னாசிமுத்து, விலை ரூ. 30, வெளியீடு : சோலைத் தேவி, காந்தி நகர், வேலூர், வ.ஆ. மாவட்டம்.

தொகுப்பு : பாலன் பூங்குழலி

இனிப்புப் பண்டிகை இவர்களுக்கு எதிரியா?

வடக்கிலும், தெற்கிலும் இனிப்புகளுக்குப் பெயர் போன பண்டிகை தீபாவளி தான். முதியோர் இல்லம் மற்றும் ஆதரவற்ற அனாதை இல்லங்களில் கூட தீபாவளியன்று எல்லோருக்கும் இனிப்பு வழங்க வேண்டும் என்று உதவி வேண்டுகிறார்கள். ஆனால் நம் வீட்டிலும், சுற்றுப்புறத்திலும் உள்ள வயதானவர்களில் பெரும்பாலோருக்கு இந்த இனிப்புப் பண்டிகை கசப்பான முறையிலேயே கழிந்து விடுகிறது. இதற்கு மாற்று வழி ஏதேனும் உண்டா? சர்க்கரை வியாதிக்காரர்களும் பண்டிகை நாட்களில் பாதுகாப்பாக இனிப்பு உண்ணலாமா, என்ன மாதிரி இனிப்பு வகை, சர்க்கரை வியாதிக்காரர்களுக்கு ஏற்றது என்பது பற்றி மருத்துவரிடம் கேட்டோம், தீபாவளி சமயத்தில் வாசகர்களுக்கு ஓர் இனிப்பான செய்தி தரலாமே என்று!

நீரிழிவு நோய் வல்லுநர் டாக்டர் பெரியாண்டவர் சொல்கிறார் :


''இனிப்பான செய்தியை இந்த ஆண்டு தர முடியாவிட்டாலும் இன்னும் சில ஆண்டுகளில் தரலாம். எதிர்காலத்தில் சர்க்கரை வியாதிக்காரர்களும் இனிப்பு தீபாவளியைக் கொண்டாட முடியும் என்று நம்புகிறேன்.

''காரணம், மேலைநாடுகளில் இப்போதே நீரிழிவு நோய்க்காரர்களுக்காக என்றே தனிப்பட்ட உணவு விடுதிகள் உள்ளன. இங்கு, குறைந்த கலோரி சத்துள்ள கேக்குகள், பிஸ்கட்டுகள் மற்றும் இனிப்பு வகைகளை செயற்கை இனிப்புச் சத்து கொண்டு தயாரிக்கிறார்கள்.

''பொதுவாக, இனிப்புத் தின் பண்டங்கள் என்று நாம் விரும்பிச் சாப்பிடுவது, எண்ணெய்ச் சத்துள்ள லட்டு, ஜிலேபி, அல்வா, பால் கோவா போன்றவையே. ஒரு சராசரி அளவான லட்டு 400 கலோரி வரை சத்தை அளிக்கிறது. முக்கால்வாசி நீரிழிவு நோய்க்காரர்களுக்கு மதிய உணவுக்கு 450 கலோரி வரைதான் நிர்ணயிக்கப்படுகிறது. அதனால் இவர்கள் ஓர் இனிப்பு வகையைச் சாப்பிட விரும்பினால் கூட, அவரது முழு மதிய உணவையுமே அவர் தியாகம் செய்ய வேண்டி வருகிறது. இது நடைமுறையில் இயலாத காரியம். மேலும், இந்த இனிப்புக்களில் கலபமாகச் செரிக்கக் கூடிய சர்க்கரைப் பொருளே அடங்கி இருப்பதால், வெகு சீக்கிரத்தில் இது இரத்தத்தில் கலந்து விடும். இதனால் இவர்களுக்குப் பசி அதிகமாகி, இவர்கள் அதிகம் சாப்பிட முயலலாம். அது ஆபத்தில் முடியும்.



* டாக்டர் பெரியாண்டவர்



''மற்றுமொரு முக்கியமான, கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், முக்கால்வாசி இனிப்புகள் நெய், வனஸ்பதி அல்லது மற்ற எண்ணெய்களினால் தயாரிக்கப்படுவதால், இரத்தத்திலுள்ள கொழுப்புச் சத்து அதிகமாவதோடு இதயத்திற்கும், இரத்தக் குழாய்களுக்கும் சேதம் ஏற்படக்கூடும்.

''எல்லா சர்க்கரை வியாதிக்காரர்களும் கேட்கும் மற்றொரு கேள்வி, சர்க்கரையைக் குறைக்கும் மாத்திரைகளை அதிக அளவில் இனிப்புக்களோடு எடுத்துக் கொள்ளலாமா என்பதுதான். இதற்கு விடை நிச்சயமாகக் 'கூடாது'. இப்படிச் செய்வதால், நம் உடல் உள்ளுறுப்புக்களின் சுற்றுப்புறம் மாறுபடுகிறது. இது மாதிரி அடிக்கடி மாறுபடுவதால், வாய் வழியாக இவர்கள் சாப்பிடும் சர்க்கரையைக் குறைக்கும் மாத்திரைகள் செயலிழந்து போகக்கூடும். விளைவு - இவர்கள் இன்சுலின் ஊசி மருந்து போட்டுக் கொள்வதை ஒத்திப் போட முடியாது போகும்.

''இதுநாள் வரை நம்மில் பெரும்பான்மையோர், சர்க்கரை வியாதியைக் குறைப்பதற்கு கோதுமைக் கஞ்சி, கேழ்வரகுக் கூழ் இவற்றை உண்ணலாம் என்ற தப்பான அபிப்ராயம் கொண்டிருந்தோம். இது முற்றிலும் தவறு. இவ்வுணவுகள் திரவ வடிவில் இருப்பதால் சுலபமாக நம் உடலில் செரிக்கப்பட்டு, சர்க்கரை இரத்தத்தில் கலந்து விடுகிறது. எனவே சப்பாத்தி, ரொட்டி போன்ற திட உணவுப் பொருட்களையே சர்க்கரை வியாதிக்காரர்கள் சாப்பிட வேண்டும். இவற்றை மென்று தின்ன ஆகும் நேரம் (chew count) சர்க்கரையைக் குறைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. சப்பாத்தி செரிக்க ஆகும் நேரம் அதிகமாதலால், இரத்தத்தில் உள்ள சர்க்கரையும் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்படுகிறது.

''நம் நாட்டிலுள்ள இனிப்பு மற்றும் ஐஸ்கிரீம் போன்றவை தயாரிக்கும் நிறுவனங்கள் செயற்கைச் சர்க்கரைச் சத்தாலான இனிப்புகளைத் தயாரிக்க முன்வந்தால், அதுவே சர்க்கரை வியாதிக்காரர்களுக்கு மிக மிக இனிப்பான செய்தியாய் இருக்கும்'' என்றார் டாக்டர் பெரியாண்டவர். ஆனால் அவற்றின் சுவை, நம்மவர்களுக்குப் பிடிக்க வேண்டுமே!

– பாலன்

அஸ்வினி மஸில் ஆயில்

மூட்டு வலி, சுளுக்கு மற்றும் இதர வலிகளிலிருந்து உடனடி நிவாரணம் அளிக்கிறது.



உபயோகிப்பவர்களின் அபிப்பிராயம் :

மூட்டுவலிக்கு, நான், கடந்த சில மாதங்களாக உங்களுடைய அஸ்வினி மஸில் ஆயிலை உபயோகிக்கிறேன்.

எனது மனைவியும், தனது இடுப்பு வலிக்காக, அஸ்வினி மஸில் ஆயிலைத்தான் உபயோகிக்கிறாள். நாங்கள் இப்பொழுது இங்கிலீஷ் மருந்துகளை உபயோகிப்பதை முழுமையாக நிறுத்திவிட்டோம்.

வருங்காலத்திலும் தாங்கள் இதன் தரத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பீர்கள் என நம்புகிறேன்.

நன்றி, வணக்கம்.

V.T. பெருமாள்

கே.கே. நகர், சென்னை.

விலை:
25 ml. பாட்டில் ரூ.10/-
வரிகள் உள்பட.

MAC/AHP/943

தயாரிப்பாளர்கள்:

அஸ்வினி ஹோமியோ பார்மஸி

முஷாபேட், ஐதராபாத் 500 018.

பாக்கிங் மற்றும் தபால் செலவுகள் உள்பட ரூ.50/- ஐ, D/D மூலம் நேரடியாக அனுப்பி வைத்தால் மூன்று 25 ml. மஸில் ஆயில் பாட்டில்கள் அனுப்பி வைக்கப்படும்.

அஸ்வினி ஹோமியோ ஹேர் ஆயில் தயாரிப்பாளர்களின் மற்றுமோர் தயாரிப்பு

இல்லந்தோறும் இருக்கவேண்டிய வலி நிவாரணி

"**ச**ந்தைப் பேட்டை இறங்குங்க" என்று கண்டக்டர் சொன்னதும் விலுக்கென எழுந்தேன். பயண அசதியோ, பசியின் களைப்போ - லேசாகக் கண் அயர்ந்துவிட்டேன் போலும்.

என்னுடைய ஒரே அரக்கு நிற சூட்கேசை எடுத்துக் கொண்டு பஸ்ஸை விட்டு இறங்கினேன். கிராமத்துக் காற்று என் உடலை வருடி, வரவேற்றது.

கிட்டத்தட்ட பதினைந்து வருடம் இருக்குமா இங்கு வந்து....?

வளைந்து செல்லும் செம்மண் பாதை

போட்டிக்கதை - 12

யில் நடந்தேன். பெட்டி சற்று கனமாயிருந்ததால் கை வலித்தது.

கொஞ்ச தூரத்திலேயே டீக்கடை வந்தது. ஒரு இளைஞன் லாவகமாக டீயை ஆற்றிக் கொண்டிருந்தான். வெள்ளையனின் மகனாய் இருக்குமோ....?

ஊர் அதிகமாக மாறியிருக்கவில்லை. அதே டீக்கடை, மளிகைக்கடை, கோயில், சிதிலமடைந்த சில வீடுகள்... சில கட்சிக் கொடிக் கம்பங்களைத் தவிர, புது வரவுகள் ஏதும் கண்ணில் படவில்லை.

கோயிலின் இடதுபுறம், நான்காவது வீடுதான் என்னுடையது. அதாவது எங்கள் பூர்வீகர் சொத்து.

அம்மாவுக்கு என் கடிதம் கிடைத்திருக்குமா? ஒரு வாரம் முன்பே எழுதிவிட்டேனே.

கடிதம் கிடைத்திருந்ததன் அடையாளமாய், வாசலிலேயே அம்மாவின் உருவம் தெரிந்தது.

அம்மாவைக் கண்டதும் மனத்தில் கொப்பளித்த பாசத்தை மறைக்க முடியவில்லை. நடையைச் சற்று எட்டிப் போட்டேன்.

"வாடா!" என்று வரவேற்றாள்.

அப்போதுதான் கோலம் போட்டு முடித்ததன் அடையாளமாய்க் கையின் விரல்களில் கோலப் பொடி வெள்ளைத் திட்டுகளாய். அருகில் மாவு டப்பா.

"சௌக்கியமாம்மா?"

"ம், ம்! உள்ளே வா!" என்று நடந்தவளைப் பின் தொடர்ந்தேன்.

வீட்டின் வாசலை மிதித்ததும் ஒரு சிலிர்ப்பு. எத்தனையோ முறை முன்பெல்லாம் வந்தபோது உணராத சிலிர்ப்பு. மொத்தமாய் வந்து விட்டதனாலோ....?

கூடத்தின் கட்டிலின் மேலே பெட்டியை வைத்தேன். விரல்களில் பெட்டியின் பிடியின் தடம். விரல்களை உதறிக் கொண்டேன்.

"கால், கையை அலம்பிண்டு வா. காப்பி கலந்துண்டு வரேன்." என்று சொல்லிவிட்டு அம்மா சமையலடி நோக்கி நடந்தாள்.

எங்கள் வீடு பெரிய வீடுதான். ஆனால் தனி அறை என்றால், ஒரே ஒரு ரூம்தான் உள்ளது. அதுவும் சாமான்கள் அறை. இங்கு எங்கும், எதிலும் ஒளிவு, மறைவே இல்லை.

வெள்

இணற்றிலிருந்து நீரை இறைத்து முகத்தை அலம்பிக் கொண்டேன். கொல்லைப்புற சுவர் மாடத்திலிருந்த பல்பொடியால் கையாலேயே விளக்கினேன்.

உடலில் தண்ணீர் பட்டதும் களைப்பு குறைந்து போய்விட்டது. கொல்லையில் ஒரு பாத்ரூமும், கக்கூசும் புதிதாய்க் கட்டப்பட்டிருந்தது. சமீபத்தில்தான் கட்டியிருக்க வேண்டும். சுண்ணாம்பு வாசனை வயிற்றை ஏதோ செய்தது.

கூடத்துக்குத் திரும்பி, கட்டிலில் அமர்ந்தேன். காப்பி தம்ளருடன் அம்மா வந்தாள். வரும் போதே ஸ்விட்சைத் தட்டி விட்டாள். தலைக்கு மேல் புது காற்றாடி, வெளுத்த என் தலை முடியைக் கலைத்தது.

வியப்புடன் அம்மாவைப் பார்த்தேன்.

புன்சிரிப்புடன் காப்பியை நீட்டினாள்.

"ராத்திரி நன்னாத் தூங்க முடிஞ்சதா?



கண் சோர்ந்திருக்கே? காப்பிக்கு சர்க்கரை போதுமா?'' என்று கேட்டவளின் கையைப் பற்றினேன்.

தசைகள் சுருங்கிப் போய் மெலிந்திருந்தது.

''அம்மா....''

''என்னடா?''

''என்னை மன்னிச்சுடும்மா.''

''அசடு...'' என்று சொல்லிப் பரிவுடன் பார்த்தாள். இந்த வயதிலும் கண்ணாடி தேவையில்லாத பார்வை.

''இல்லைம்மா. இப்பத்தான் எனக்கு என் தப்பு புரியறது.''

''ரமணன் எப்படி இருக்கான்?'' என்று அம்மா பேரனைப் பற்றி விசாரித்தாள்.

''ப்ச், இருக்கான். என்னைப் போலவே பொண்டாட்டி முந்தானையைப் பிடிச்சுண்டு...!'' என்று சூள் கொட்டினேன்.

அம்மா என்னைக் கூர்ந்து கவனித்தாள்.

''இன்னிக்கு என்ன சமைக்கட்டும்? உனக்குப் பிடிச்ச கத்திரிக்காய் கறி செய்யட்டுமா? உன் ருசி மாறலியே?'' என்றவளை, குற்றமுள்ள நெஞ்சுடன் பார்த்தேன்.

நடுவில் சில வருடங்கள் மாறித்தான் போய்விட்டது. பெண்டாட்டியின் பேச்சை மீற முடியாமல் எப்படியெல்லாம் என்னை மாற்றிக் கொண்டு விட்டேன் பச்சோந்தியாய்! பாவம் அம்மா!

அப்பா இறந்ததும், அம்மா மட்டும் இந்த கிராமத்தில் இருக்க வேண்டாம் என்று வற்புறுத்தி அழைத்துச் சென்றவனும் நான்தான்; மனைவிக்கும் அம்மாவுக்கும் ஒத்துக் கொள்ளாமல் போனபோது, சாமர்த்தியமாய் பலசாலி பக்கம் என்னை இணைத்துக் கொண்டு, அம்மாவின் மனசைப் புண்படுத்தியவனும் நான்தான். அதெல்லாம் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு. நடுவில் பல நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்! என் வாழ்க்கையில் விளைந்து விட்டது! அதுவும் ஏழு வருடத்துக்கு முன்பு என் மனைவி இறந்து போன பின்தான் உணர ஆரம்பித்தேன். அதிலும் பதவியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஓய்வு பெற்றதும், என் மருமகள் என்னை எனக்குப் புரிய வைத்து விட்டாள்.

கிருஷ்ணா

''ரொம்ப நாளாச்சம்மா இப்படிக் காப்பி சாப்பிட்டு!'' என்றேன் தழுதழுப்பாய்.

''ஏன்டா? பட்டணத்துல காப்பிப் பொடியிலுமா கலப்படம்?''

''அதில்லேம்மா. காசை விட்டெறிஞ்சா நல்ல பவுடராகவே கிடைக்கும். காப்பியோட ருசி அதனோட பொடியிலோ, பாலிலோ மட்டும் இல்லைம்மா. கொடுக்கறவங்களைப் பொறுத்தும் இருக்கு'' என்றேன்.


''போய் குளிச்சுட்டு வா. சூடாய் இட்லி சாப்பிடலாம்'' என்றாள், தலையை வருடிக் கொடுத்தபடி. அம்மாவின் அந்த வார்த்தை இதமாயிருந்தது. எத்தனை வயதானால் என்ன, அம்மாவின் முன் குழந்தையாகி விடுகிறோம் என்பது எத்தனை உண்மை?



டிபன் சாப்பிட்ட பிறகு வீட்டைச் சுற்றி வந்தேன். வீட்டின் கதவு, ஜன்னல் எல்லாம் பர்மாத் தேக்கால் ஆனது. எனது தாத்தா பார்த்துப் பார்த்துக் கட்டிய வீடு இது என்று அப்பா சொல்லுவார். வீட்டின் உட்புறச் சுவரெல்லாம் மழ மழ என்றிருக்கும்.

இந்த வீட்டைப் பற்றிய சர்ச்சையினால் தானே அம்மா என்னை விட்டுப் பிரிந்து கிராமத்துக்கே திரும்பினாள்?

பட்டணத்தில் அப்போது ஒரு வீடு கட்டிக் கொண்டிருந்தேன். இதனோடு ஒப்பிடும் போது, அது நீப்பெட்டி சைஸ்தான்.



"உங்க நாலு பையன்களை டாக்டர், வக்கீல், ஆடிட்டர்னு படிக்க வைச்சீங்க. கடைசிப் பையனை மட்டும் ஏன் அரசியல்வாதி ஆக்கிட்டீங்க?"

"மத்த மூணு பேரு தொழில் நடக்க கடைசிப் பையன்தான் உதவியா இருக்கான்."

- எஸ். ராகவேந்திரா.

அதற்கே கடன் மென்னியை முறித்தது. என் மனைவிதான் ஆலோசனை சொன்னாள்.

"கிராமத்தில் தனியாய் வீடு எதற்கு. விற்று விடலாமே!" என்றாள்.

பத்தாயிரம் ரூபாய் கிடைக்கும் என்ற ஆசையிலும், கடன் தொல்லையிலும் அம்மாவிடம் சொன்னேன்.

அம்மா பதிலே பேசவில்லை. வற்புறுத்தியபோது கிளம்பிவிட்டாள், கிராமத்துக்கு.

"கிராமத்து வீடுகளை விலைக்கு வாங்கறவன் என்ன பண்ணுவான்னு உனக்கே தெரியும். காலச்சக்கரத்தோட சுழற்சி எப்படி இருக்குமோ? முடியாது!" என்று பளிச்சென்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

அம்மா சொன்னது உண்மைதான். நல்ல தேக்கு மரக்கதவு, நிலைகளுக்கு ஆசைப் பட்டு, வீட்டை இடித்து விடுவார்கள். ஆனால் அந்தத் தேக்கு மரச் சாமான்களே நல்ல விலை போகும்.

"அதுக்காக நீ எதுக்கும்மா ஊருக்குக் கிளம்பறே?" என்று கேட்க நினைத்தாலும் மனைவியின் அருகாமையினால் ஊமையாகி விட்டேன்.

இதற்கு மேலும் இங்கிருந்தால் தன் நிலை தாழ்ந்து விடும் என்று சரியாகக் கணக்கிட்டு அம்மா பிரிந்து வந்து விட்டாள்.

அம்மா எப்போதுமே இப்படித்தான். அதிகமாய்ப் பேச மாட்டாள். ஆனால் சரியாக முடிவெடுத்துச் செயலாற்றுவாள்.

அதற்குப் பிறகு என் மனைவி இறந்தபோது ஒருமுறை பட்டணம் வந்ததோடு சரி. அப்பாவின் பென்ஷன் பணத்தைக் கொண்டு தன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறாள் தனியாய்.

வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு கூடத்துக்குத் திரும்பினேன்.

"என்னடா, வீடு எப்படி இருக்கு?"

"அதே மாதிரிதான். நல்ல பராமரிப் போட வைச்சிருக்கே."

"காரணத்தோடதான்!" என்று புன்னகைத்தாள்.

"என்னம்மா?"

"இப்படி உட்காரு!" என்றபடி மடியிலிருந்த புத்தகத்தைப் புரட்டினாள்.

ராமாயணம். அம்மா தினசரி படிப்பாள். பழுப்பேறிய பக்கங்களைக் கவனமாய்ப் புரட்டியபடி படித்தாள்.

"என்னம்மா படிக்கற?"

"கைகேயி வரம் கேட்கற இடத்தைத்தான். புத்திரனைப் பிரியற சோகங்கறது எல்லாக் காலத்துலேயும் நடந்துண்டு வர சங்கதிதான், இல்லையா?"

"அம்மா!"

"என்ன, காரணங்கள்தான் மாறிண்டு வருது. முன்பெல்லாம் பிரிவினால் பெற்றோர், பிள்ளை ரெண்டு பேருக்குமே வருத்தம் இருந்தது. இப்பல்லாம், ஊஹும்...." என்று பெருமூச்சு விட்டாள்.

"எதுக்கும்மா இதெல்லாம் என்னிடம் சொல்ற?"

"பெத்த மகனைப் பிரியறதுங்கறது ஒன்றும் புதுசில்லேன்னு உனக்கு உணர்த்தத்தான். இது நம்ம வாழ்க்கையிலே மட்டும் நடக்கற சங்கதி இல்லேன்னு உன் மனசைப் பக்குவப்படுத்திக்கத்தான்."

காலையில் பெட்டியைத் திறந்தபோது ரமணனின் புகைப்படத்தை ஒரு நிமிடம் நான் எடுத்துப் பார்த்ததை அம்மா கவனித்திருக்க வேண்டும்.

"அம்மா, நான் சின்னப் பையனாய் இருந்தப்ப இந்த கூடத்தையும், முற்றத்தையும் சுற்றிச் சுற்றித்தானே ஓடுவேன்? கையிலே என்னைத் தூக்கோட நீ என்னைத் துரத்துவே. ஒவ்வொரு சனிக்கிழமையும் இதே ஓட்டப் பந்தயம்தான். ஞாபகமிருக்கோ?" என்றேன் பேச்சை மாற்ற எண்ணி.


"பழசையெல்லாம் நான் நினைச்சே பார்க்கறது இல்லேடா!" என்றாள் பட்டென்று.

"ஏன்?" என்றேன் வியப்புடன்.

"பழசை நினைச்சுப் பார்க்கறதுனாலே என்ன லாபம்? மனசுதான் பாரமாகி துக்கப்படும்."

என்னால் அம்மாவுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

"நம்மாலே முடியறப்போ உதவறோம். அன்பு காட்டறோம். பின்னாடி நமக்கு தேவைப்படறப்ப அதே ஆளிடமிருந்து உதவியையோ, அன்பையோ எதிர்பார்க்கறது எதனாலே? அன்னிக்கு நாம அப்படி செஞ்சோமே, இன்னிக்கு இவன்



ஆசிரியர் : நீங்க எழுதிக் கொடுத்த நாவல் சமூக நாவலா? க்ரைம் நாவலா...?
கதாசிரியர் : எனக்கே தெரியல்லே...! வாசகர்களைக் கண்டு பிடிக்கச் சொல்லி ஒரு போட்டி வைச்சுடுங்களேன்!''

– தஞ்சைத் தரணியன்.

இப்படி நடந்துக்கறானேன்னு பழசையும், புதுசையும் போட்டுக் குழப்பிக்கறதுனாலேதானே?''

''ஏன்மா, எதிர் பார்க்கறதுல என்ன தப்பு?'' என்றேன் மெதுவாய்.

''தப்புதான். உதவற நிலையிலோ, அன்பு காட்டற சூழலிலோ அந்த நபர் இருக்கணுமே! காலம் மாறிண்டு வருது வேகமாய். ஒவ்வொருத்தருக்கும் பலவித வேலைகள், கவலைகள். வேர்களைப் பற்றிச் சிந்திக்கக் கூட முடியாத மனோபாவம். இதுல போய் பழசை நினைச்சுக் குழம்பிக்கறதோ, சந்தோஷப்படறதோ மடத்தனமாய்ப் படலே?'' என்றாள்.

அப்போது ஒரு நொடி அம்மாவின் பார்வை என் கண்களைச் சந்தித்துவிட்டு அகன்றது. சட்டென்று பேச்சை மாற்றினேன்.

''என்னம்மா புது ஃபேன், புது பாத்ரூம்னு அமர்க்களப்படுத்தறே!''

''உனக்காகத்தான்.''

''கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய் ஆகியிருக்குமே. ஏன், கூடவே கூட ஆகியிருக்கும். ஏது பணம் உன்னிடம்?''

''நீ வரும்போது கட்டலாம்னு நான் கொஞ்சங் கொஞ்சமாய் இத்தனை வருஷமாய்ச் சேர்த்து வைச்சதுதான்.''

''நான் வருவேன்னு எப்படித் தெரியும்?'' என்றேன் வியப்புடன்.

அம்மா என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

''என்னம்மா சிரிக்கிறே? நான் இங்கேயே வந்துடப் போறேன்னு போன வருஷம் யாராவது சொல்லி இருந்தால் சிரிச்சிருப்பேன் கேலியாய். ஆனால் நீ....''

''காலத்தின் கைவண்ணத்தை யூகிச்சேன். அவ்வளவுதான்.''

''என்னம்மா சொல்றே?''

''இதோ பாருடா, தலை முறைகளின் இடையே ஏற்பட்டுக்கிட்டு வரும் மாற்றத்தை கவனிச்சால் புரியும். எங்க காலத்துலே பெற்றவங்க மேலே மரியாதையும், அன்பும், பணிவும், சமூகத்தை நினைச்சு பயமும் இருந்தது. உன் காலத்துலே சமூகத்திடம் பயம் குறைஞ்சு, சுயநலம் தலை தூக்கினதுனாலே பெரியவர்களிடம் காட்ட வேண்டிய மரியாதையிலும், அன்பிலும் அளவு குறைஞ்சு தேய ஆரம்பிச்சிடுச்சு. உன் மகன் காலத்துல அப்பாவும், பிள்ளையும் ஒரு குறிப்பிட்ட வயசுக்கு மேலே மூன்றாவது மனுஷன் மாதிரி பழக வேண்டிய நிர்ப்பந்தம் வந்தாலும் வந்துடுங்கறதை யூகிச்சேன்.''

''அதனால....?''

''ஆமாம். எப்படியிருந்தாலும் நீ இங்கே திரும்பி வருவேன்னு எதிர் பார்த்தேன். அதன்படியே நடந்துடுச்சு. பாசம், நேசமெல்லாம் குறைஞ்சு போய் லாப, நஷ்டக் கணக்கு பார்க்கற கலிகாலம். அதுவும் பெற்றவங் களிடமே....''

''அம்மா....''

''அதனாலேதான், நீ இங்கு வந்து தங்கறப்ப வசதியாய் இருக்கட்டுமேன்னு ஃபேன் வாங்கி மாட்டினேன். ஆள் எடுக்கற கக்கூஸை, பம்பாய் டைப்புல மாற்றினேன்.'' என்று சொல்லிக் கொண்டே போன அம்மாவைப் பெரும் ஆச்சரியத்துடன் பார்த்தேன்.

எத்தனை துல்லியமான தொலை நோக்குப் பார்வை?

''உனக்கும் கடமை இருக்குடா!''

''என்னம்மா?''

''நீயும் காசை சேமிக்க ஆரம்பி.''

''ஏன்?''

''என் பேரனுக்கு நம்ம நிலைமை வர வேண்டாம்னு ஆண்டவனை வேண்டிப் போம். என் கொள்ளுப் பேரன், பேத்திகளுக்கு விசாலமான மனசையும், கனிவையும் கொடுக்கச் சொல்லிப் பிரார்த்திப் போம். ஆனால் நடக்கறது கலிகாலம் இல்லையா?''

தலையாட்டினேன்.

''இன்னும் ஒரு பத்துப் பதினைஞ்சு வருஷம் கழிச்சு உன் நிலைமையே உன் மகனுக்கும் மருமகளுக்கும் ஏற்படாதுங்கறது என்ன நிச்சயம்?''

''அம்மா!''

''அவங்க உன்னை விட இன்னும் சௌகரியமான வாழ்க்கை வாழ்ந்துக்கிட்டு இருக்கலாம். அவங்க இங்கே அடைக்கலமா வரும்போது அவங்களுக்கு வேண்டிய சௌகரியங்களை செஞ்சு கொடுக்கறது பெத்தவனோட கடமை. புரியறதா?'' என்று கேட்டவளைக் கண்ணில் நீர் மல்க நோக்கினேன்.




''அந்த பலகாரக் கடைக்காரர் மேல் கன்ஸ்யூமர் கோர்ட்லே கேஸ் போட்டிருக்கியே ஏன்?''

''அவர் கடையை நம்பி வாங்கின மைசூர்பாக்கைக் கொடுத்தும் என் மாமியாரோட பல் ஒண்ணு கூட உடையலையே....''



இந்தத் துணுக்கு எழுத்தாளரின் பெயரே ஸ்வீட் ரவி. கும்பகோணத்தில் ஸ்வீட் ஸ்டால் வேறு வைத்திருக்கிறார். ஸ்வீட் ஸ்பெஷலில் இவருடைய ஜோக்ஸை விட்டு விடவா முடியும்!

ஸ்வீட்ரவி ஜோக்ஸ்



''என் மனைவி பலசாலியா, என் அம்மா பலசாலியான்னு தீபாவளிக்கு தெரிஞ்சிடும்!''

''புடவைச் சண்டையா?''

''இல்லே, அன்னிக்கு நான் செய்யப் போற தீபாவளி பட்சணத்தை யார் சாப்பிட்டு சமாளிக்கறாங்கன்னு பார்த்துடலாமே!''


''என்ன டைரக்டர் சார், உங்க படத்துலே அடிக்கடி 'குலோப் ஜாமூனை' காட்டறீங்களே எதுக்கு?''

''கதாநாயகனோட அப்பா நீரிழிவு நோயினாலே அவதிப்படறதை சிம்பாலிக்கா காட்டறோம்!''



''அந்த பலகாரக் கடையிலே நேத்து ரெய்ட் நடந்துச்சாமே, எதுக்கு?''


''இன்றைய ஸ்பெஷல் 'பாதாம் கீர்'னு எழுதறதுக்குப் பதிலா 'பாதாம் பீர்'னு எழுதி வச்சிட்டாங்களாம்!''





''அல்வா''வைக் கண்டு பிடிச்சது யாரு, தெரியுமா?''

''அதுவும் தாமஸ் அல்வா எடிசனாத்தான் இருக்கணும் சார்!''



பிரெட் சமோஸா

தேவை :
பால் - 1/4 லிட்டர்
பால்கோவா - 1/4 கிலோ
சர்க்கரை - 1/4 கிலோ
பிரெட் ஸ்லைஸ்கள் - 10
நெய் - 1/4 ஆழாக்கு
முந்திரி, ஏலக்காய் -
தேவையான அளவு.

செய்முறை :
காய்ச்சின பாலை ஆற விட்டு, அதில் பால்கோவா வைக் கலந்து விடவும். பிரெட்டின் ஓரப் பகுதிகளை நீக்கி, கொஞ்சம் நீர் சேர்த்து ஊறவைக்கவும். பின் பால்-பால்கோவா 'கலக்கலை' இத்துடன் சேர்த்துப் பிசைந்து, நெய் சேர்த்து, அடுப்பில் வைத்துக் கெட்டியாகக் கிளறி இறக்கி விடுங்கள்.

தட்டில் சிறிது நெய் தடவி இதைக் கொட்டி, வில்லைகளாக்கிக் கொள்ளுங்கள். முந்திரி, ஏலக்காய்ப் பொடியை மேலாகத் தூவி, பின் அந்த வில்லைகளை ஒரு ஐந்து நிமிடம் இட்லி தட்டில் வைத்து, ஆவியில் வைத்து எடுத்து விடுங்கள். அந்தே!

காஃபி கேக்

சாதாரண மில்க் கேக் செய்ய என்னென்ன தேவை? அத்துடன் 2-3 ஸ்பூன் இன்ஸ்டன்ட் காப்பி பௌடர் தேவை. அவ்வளவே. மைதா மாவை (1 கப்) சற்று நெய் சேர்த்து, சிவக்க வறுத்துக் கொள்ளுங்கள். இன்னொரு பக்கம், பால் (1கப்), சர்க்கரை (2 கப்) இரண்டையும் சேர்த்துக் கலக்கி அடுப்பில் மிதமான சூட்டில் கொதிக்க விடுங்கள். ஒரு மாதிரி கம்பிப் பதம் வந்ததும் மைதாவைச் சேர்த்துக் கிளறுங்கள். மறக்காமல் மேலே காப்பிப் பொடி தூவுங்கள்! 1/2 அல்லது 1 கப் (உங்கள் சமாளிக்கும் திறனைப் பொறுத்து!) நெய் சேர்த்து, நன்கு கிளறுங்கள். இனி அதிகம் அடுப்பில் இருக்க வேண்டாம். கீழே இறக்கிக் கிளறவும். கேக் பதம் வந்ததும் இறக்கி முந்திரி, மந்திரி என்று வசதிப் படி அலங்கரித்துக் கொள்ளுங்கள். சூப்பர் சுவை!

பொட்டாட்டோ ஸ்வீட் சிப்பி

இதுவரை நீங்கள் கேள்விப்பட்டிராத விஷயம் இது. உப்பு போடாமல் 1/2 கிலோ உருளைக் கிழங்கு சிப்ஸ் வறுத்து எடுத்துக் கொள்ளுங்கள். பின், அதைத் தூள் தூளாக்கி விடுங்கள். 1/2 கப் சர்க்கரையுடன் 1/2 தம்ளர் தண்ணீர் சேர்த்துக் கொதிக்க விடுங்கள். பாகுப் பதம் வந்ததும் நொறுக்கி வைத்துள்ள சிப்ஸை அதில் போட்டு ஒரு ஸ்பூன் நெய், உடைத்த கடலைப் பொடி 100 கிராம், கொஞ்சம் ஏலக்காய் போட்டு ஒரு கிளறு கிளறி இறக்கி விடுங்கள். தட்டில் கொட்டி, ஆறியபின் 'கேக்' ஆக்கலாம்! சாப்பிட்ட பின், ஆயுசுக்கும் அடிமை ஆகி விடுவீர்கள்!

ஸ்வீட் சாம்ராஜ்யம்!



சௌசௌ தில்குஷ் அல்வா

தேவை :
நன்கு முற்றிய சௌசௌ - 1
சர்க்கரை - 1 கப்
நெய் - 1 கப்
முந்திரி - 10



திராட்சை - 20
ஏலக்காய்ப் பொடி - 1 ஸ்பூன்
கேசரி கலர் பொடி - சிறிதளவு.

செய்முறை :

நன்கு முற்றிய சௌசௌவை தோல் சீவி, உள்ளே இருக்கும் பருப்பை நீக்கி விட்டு, தூளாக நறுக்கிக் கொள்ளவும். அல்லது காரட் துருவுவது போல் துருவிக் கொள்ளவும். துருவலை குக்கரில் ஐந்து நிமிடம் வேக வையுங்கள். கரண்டியால் நன்கு மசித்து சர்க்கரை, நெய் விட்டு, மிதமான சூட்டில் அடுப்பில் வைத்துக் கிளறவும். இப்போது ஏலக்காய்ப் பொடி, கேசரிப் பொடி தூவவும். அல்வா, பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வரும் போது இறக்கி, நெய் தடவிய தட்டில் கொட்டிப் பரப்பி முந்திரி, திராட்சைகளால் அலங்கரிக்கவும். சௌசௌ தில்குஷ் அல்வா ரெடி!

சீஸ் பட்டன்ஸ்

தேவை :
ரவை - 1 தம்ளர்
பால் - 5 தம்ளர்
சர்க்கரை - 1 தம்ளர்
நெய் - 1 டேபிள் ஸ்பூன்
ரிபைண்ட் ஆயில் - 250 கிராம்
ஏலக்காய்ப் பொடி - 1 ஸ்பூன்
குங்குமப்பூ - சிறிதளவு
பச்சைக் கற்பூரம் - சிறிதளவு
முந்திரி - 4

செய்முறை :

ரவையில் நெய் விட்டு, சிறிதளவு பாலும் தண்ணீரும் சேர்த்து, கெட்டியாகப் பூரி மாவு போல் பிசைந்து கொள்ளவும். பிசைந்த மாவை மிகச் சிறு உருண்டைகளாக (சுண்டைக்காய் அளவு) உருட்டிக் கொண்டு, பின் இரு விரல்களுக்கிடையில் அழுத்தி, பட்டன் போல் செய்யவும். இந்த பட்டன்களை ஃபேனில் சிறிது நேரம் உலரவிடவும்.

இப்போது, பாலை அடுப்பில் வைத்து 1 லிட்டர் பால், கால் லிட்டராகச் சுண்டும் வரை அடிபிடிக்காமல் கிளறி விட்டு, சுண்டியவுடன் சர்க்கரை, ஏலக்காய்ப் பொடி, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் சேர்த்து இன்னும் சிறிது நேரம் அடுப்பில் வைத்துக் கிளறிய பின் இறக்கவும்.


வாணலியில் எண்ணெய் ஊற்றி, சூடானதும் ரவை பட்டன்களைப் போட்டுப் பொரித்தெடுக்கவும். பொரித்த பட்டன்களைச் சுண்டிய பாலில் போட்டு நன்கு ஊறவிடவும். ஒரு மணி நேரம் கழித்து நன்கு ஆறியவுடன் வசதிப்பட்டால் பிஸ்தா, முந்திரி இவைகளால் அலங்கரிக்கலாம். சுவையான சீஸ் பட்டன்ஸ் ரெடி! ப்ரிஜ் உள்ளவர்கள் நன்கு குளிரவைத்தும் சாப்பிடலாம்.

காரட் பஃப்

தேவை :
காரட் - 200 கிராம்
பால் - 1 கப்
மைதா - 250 கிராம்
சர்க்கரை - 200 கிராம்
நெய் - 1 டேபிள் ஸ்பூன்
ரிபைண்ட் ஆயில் - 250 கிராம்
தேங்காய்த் துருவல் - 1 ஸ்பூன் (வறுத்தது)
முந்திரி - 10
திராட்சை 20
ஏலக்காய்ப் பொடி - 1 ஸ்பூன்

செய்முறை :

காரட்டை தோல் சீவி, பூத் துருவலாகச் செய்து கொள்ளவும். தண்ணீர் விடாமல்,





"இருந்தாலும் நம்ம எம்.எல்.ஏ. ரொம்ப மோசம்டா...!"

"ஏன்ப்பா...?"

"நம்ம தொகுதியில எப்பவாவது பூகம்பம் வந்தா என்ன பண்றதுன்னு இப்பவே நிவாரண நிதி வசூல் பண்ண ஆரம்பிச்சுட்டாரு...!"

- எஸ். ஜெய்குமார்

பாலில் துருவலைக் கொட்டி, குக்கரில் வைத்து வேகவிடவும். பால் சுண்டி, காரட் நன்கு வெந்ததும் சர்க்கரை, தேங்காய்த் துருவல், முந்திரித் துண்டுகள், திராட்சை, ஏலப் பொடி இவற்றைப் போட்டு நெய் விட்டுக் கிளறவும். பூரணம் போல் கெட்டியாக வரும் போது இறக்கி விடவும். நன்கு ஆறிய வுடன் சிறு சிறு (பெரிய நெல்லிக்காய் அளவு) உருண்டைகளாக உருட்டி வைக்க வும்.

பிறகு மைதாவில் ஒரு சிட்டிகை ஆப்ப சோடா, 1 சிட்டிகை உப்பு, 1 ஸ்பூன் வெண் ணெய் அல்லது டால்டா. சிறிதளவே தண் ணீர் விட்டு, கெட்டியாகப் பிசைந்து கொள் ளவும். பிறகு சிறு சிறு அப்பளங்களாக இட்டுக் கொண்டு, நடுவே காரட் உருண் டைகளை வைத்து நன்கு மூடி, பந்து போல் செய்து கொள்ளவும்.

இப்போது அடுப்பில் ரிபைன்ட் ஆயிலை ஊற்றிச் சூடாக்கவும். காரட் பந்து களைப் பொரித்து எடுத்தால் காரட் பஃப்!

பீட்ரூட் போளி

தேவை :

சர்க்கரை - 100 கிராம்
பீட்ரூட் - 250 கிராம்
மைதா - 250 கிராம்
உடைத்த கடலைப் பொடி - 50 கிராம்
தேங்காய்த் துருவல் - 1 மேசைக் கரண்டி
நெய் - 100 கிராம்
ஏலப்பொடி - 1 ஸ்பூன்
பால் - 1/2 கப்

செய்முறை :

பீட்ரூட்டை தோல் சீவி, தேங்காய்த் துருவல் போல துருவிக் கொள்ளவும். துருவ லைப் பாலிலிட்டு நன்கு வேகவிடவும். பால் சுண்டி நன்கு வெந்தவுடன் சர்க்கரை, உடைத்த கடலைப் பொடி, தேங்காய்த் துரு வல், ஏலப்பொடி இவற்றைச் சேர்த்து ஒரு ஸ்பூன் நெய் விட்டுக் கிளறவும். கெட்டி யானவுடன் எடுத்து, சிறு சிறு உருண்டை களாக்கிக் கொள்ளவும். பிறகு மைதாவைச் சிறிதளவு நீர் தெளித்து, ஒரு ஸ்பூன் நெய்யும் விட்டுப் பிசைந்து கொள்ளவும். மாவில் பீட்ரூட் உருண்டைகளை வைத்து மூடி, போளியாகத் தட்டவும். தோசைக் கல்லை அடுப்பில் வைத்து நிதானமாக எரிய விட்டு, போளிகளைச் சுட்டெடுக்கவும். அதிகம் செலவில்லாமல் எளிமையாக, சுலபமாகச் செய்யலாம். வித்தியாசமான பீட்ரூட் போளி - தீபாவளி ஸ்பெஷல் போளி! கடலைப் பருப்பு போளியை விட ஆரோக்கி யமானது!

பி.கு : பீட்ரூட் கசக்காமல் இருக்கிறதா என்று துருவும்போதே ருசி பார்த்து விடுவது நல்லது.

1. டேஸ்டீ ப்ரூட்டி

தேவை :

ஆப்பிள் - 2 (தோல் சீவியது)
பப்பாளி - நறுக்கிய துண்டுகள் 1 கப்
திராட்சை - 1/4 கிலோ
கோவா - 1/4 கிலோ
பால் - 1/2 லிட்டர்
சர்க்கரை (பொடி செய்தது) - 1 கரண்
தண்ணீர் - 1/2 கப்
பச்சைக் கற்பூரம் - சிறிதளவு
ஏலக்காய் - 1.

செய்முறை :

அனைத்துப் பழங்களையும் தண்ணீர், சர்க்கரை சேர்த்து ஆவியில் நன்றாக வேக விட வேண்டும். ஆறியவுடன் மிக்ஸியில் போட்டு நன்கு மசித்துக் கொள்ள வேண் டும். பிறகு பாலை நன்கு காய்ச்சிக் கொண்டு கோவாவைச் சேர்த்து, அதனுடன் பச்சைக் கற்பூரம், ஏலக்காய் போன்ற வற்றை நன்கு கலக்க வேண்டும். கல வையை நெய் தடவிய பாத்திரத்தில் கொட்டி கேக் ஓவனில் வைத்து, கேக் பதம் வந்தவுடன் எடுத்து விடவும். கேக் ஓவன்

பெண்களுக்கு முழுசுதந்திரம் ப்ரீதியினாலே



எல்லா விதமான சமையலுக்கும், கடினமானதையும் அரைக்கவோ, பொடி செய்யவோ, அதி நவீன **550 வாட் மோட்டர், 3 ஸ்டெயன்லஸ் ஸ்டீல் ஜாடிகள்** கொண்டது ப்ரீதி. தோசை மாவு முதல் கொத்துக்கறி வரை அனைத்துக்கும் சிறந்தது ப்ரீதி.

சமையல் தவிர மற்ற வேலைகளையும் கவனிக்க நேரமளிக்கிறது ப்ரீதி.



550 வாட் 30 நிமிடம்

Preethi
XL7

இல்லத்தரசியின் இனிய தோழி

2 வருட உத்திரவாதம் ஆயுட்கால இலவச சர்வீஸ்

TAS Vision ● 232



"என் கேஸ்ல எழுத்தாளரை சாட்சி சொல்ல வச்சது தப்பாப் போச்சு!"

"ஏன்? என்ன செய்தார்...?"

"எனக்குச் சாதகமா எல்லாத்தையும் கோர்ட்டுல சொன்னவர் கடைசியா, 'இதுவரை நான் சொன்னது எல்லாம் என் சொந்தக் கற்பனையே'ன்னு சொல்லி என் கழுத்தை அறுத்திட்டார்!"

– சோம. முத்துக்குமார்

இல்லாதவர்கள் பாத்திரத்தில் வெந்நீர் வைத்து, ஆவியில் வேக விடலாம்.

தாத்தா ஸ்பெஷல் ஸ்வீட்!

தேவை :

பச்சரிசி (அ) புழுங்கலரிசி - 3 ஆழாக்கு,
தேங்காய்ப் பால் - 2 தம்ளர்,
பொடித்த சர்க்கரை - 1½ ஆழாக்கு,
ஏலக்காய் - 3 முதல் 4 வரை,
கேசரிப் பவுடர் - சிறிதளவு.

செய்முறை :

அரிசியை 3 மணி நேரம் நீரில் ஊற வைத்து, களைந்து தேங்காய்ப் பாலை நீருடன் சேர்த்துத் தெளித்து, நைஸாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் பொடித்த சர்க்கரை, ஏலக்காய், கேசரிப் பவுடர் போன்றவற்றைச் சேர்த்து 1/2 மணி நேரம் கழித்து இட்லித் தட்டுகளில் ஊற்றி இட்லியாக வார்த்துக் கொள்ள வேண்டும். சூடாக இருக்கும் இட்லிகளை இடியாப்ப அச்சிலோ அல்லது ஓமப் பொடி அச்சிலோ போட்டுப் பிழிந்து எடுத்துக் கொள்ள வேண்டும். இது பார்ப்பதற்குக் கவர்ச்சியாகவும் பல் இல்லாதவர்கள் கூடச் சாப்பிடும் வகையிலும் அமைந்திருக்கும்.

மல்டி சிப்ஸ்

தேவை :

வறுத்த வேர்க்கடலை - 25 கிராம் (தோல் நீக்கியது)
உடைத்த கடலை - 25 கிராம்
முந்திரிப் பருப்பு - 25 கிராம்
சோடா உப்பு - சிறிதளவு
கோதுமை மாவு (வறுத்தது) - 100 கிராம்
சர்க்கரை - 50 கிராம் (பொடி செய்தது)
உப்பு - சிறிதளவு.

செய்முறை :

வேர்க்கடலை, உடைத்த கடலை, முந்திரிப் பருப்பு (வறுத்தது) ஆகியவற்றை மிக்ஸியில் நன்றாக நைஸாக பொடித்துக் கொள்ள வேண்டும். பிறகு இக் கலவையுடன் சற்று நீர் சேர்த்து சோடா உப்பு, சர்க்கரையைக் கலந்து, நன்றாக அழுந்தப் பிசைய வேண்டும். பிறகு இந்த மாவை சிறுசிறு உருண்டைகளாக்கி, சப்பாத்தி போல் இட்டுக் கொள்ள வேண்டும். இவற்றைப் பிறகு வட்டமாக, முக்கோணமாக, டைமண்ட் வடிவமாக, சதுரமாகப் பல வடிவங்களில் வெட்டிக் கொள்ளவும். பின் இதனை, கொஞ்சம் கொஞ்சமாகக் கேக் ஓவனில் வைத்து, பிஸ்கெட் பதத்தில் வந்தவுடன் எடுக்கலாம். கேக் ஓவன் இல்லாதவர்கள் வாணலியில் மணல் பரப்பி அதன் மேல் தட்டு வைத்தும் வேகவைத்து எடுக்கலாம். கலவை தவிர சத்துமிக்க சமாசாரம்!

கலர்ஃபுல் கட்லெட்

தேவை :

தேங்காய்த் துருவல் - 1 கப்
கடலைப் பருப்பு - 1/4 கிலோ
வெல்லம் - 150 கிராம்
நெய் - 1/2 கப்
கேசரிப் பவுடர் - சிட்டிகை
கோகோ பவுடர் - சிட்டிகை
பச்சை கலர் (எஸன்ஸ்) - சிறிதளவு
ஏலக்காய் - 3.

செய்முறை :

கடலைப் பருப்பை நன்றாக வேக வைத்து, வெல்லம் சேர்த்து நைஸாக அரைக்க வேண்டும். பிறகு இதனுடன் தேங்காய்த் துருவலை சேர்த்து, ரொட்டி மாவு பதத்தில் வைக்க வேண்டும். கலவை சிறிது தளர காணப்பட்டால், அடுப்பில் வைத்துக் கிளறலாம். கெட்டியானதும் இறக்கி, மூன்றாகப் பிரித்து கோகோ, பச்சை, கேசரி பௌடர் என்று பாகத்துக்கு ஒரு கலர் கொடுத்து சிறிய சிறிய பிஸ்கெட்டுகளாகத் தட்டி, அடுப்பில் தோசைக் கல் போட்டு, நெய் ஊற்றி, சப்பாத்தி போட்டெடுப்பது போல் போட்டெடுக்கவும்.

– பி. ரமாமணி, ஜெயஸ்ரீ
மாடல் : ஸ்ரீவித்யா, வித்யா
புகைப்படங்கள் : கோபிநாத்

அமரர் கல்கி

முன்கதை

சம்பு சாஸ்திரி – நெடுங்கரை கிராமத்தின் அந்தஸ்து மிக்க பிராமணர். சித்தி கொடுமையால் அவதியுறும் தம் மகள் சாவித்ரிக்கு, அலைந்து திரிந்து ஸ்ரீதரன் என்ற பையனை நிச்சயிக்கிறார்.

நாகரிக இளைஞனான ஸ்ரீதரனுக்குச் சாவித்ரியைத் துளியும் பிடிக்கவில்லை. நெடுங்கரை கிராமத்தின் 'பொழுது போகாத' பெரிய மனிதர்களான தீக்ஷிதர் முதலானோர், சம்பு சாஸ்திரி மீது கொண்ட பொறாமையினால் கல்யாணத்தையே நிறுத்தப் பார்க்கிறார்கள்.

எப்படியோ அமளி துமளியாகக் கல்யாணம் நடந்து முடிகிறது. சம்பு சாஸ்திரியின் பணியாள் நல்லான் அதற்குப் பெரிதும் உதவுகிறான். ஸ்ரீதரன் குடும்பம் ஊர் திரும்ப, கணவன் வீடு எப்போது செல்வோம் என சாவித்ரி ஏங்குகிறாள்.

இதற்கிடையில் கன மழை பெய்ததால் நெடுங்கரையில் பெரு வெள்ளம் ஏற்படுகிறது. சம்பு சாஸ்திரிகள், வெள்ளத்தில் விழுந்த சேரி மக்களுக்குத் தம் வீட்டில் அடைக்கலம் கொடுக்கிறார்.

ஊராரோ, அவரை ஜாதிப் பிரஷ்டம் செய்கிறார்கள். 'இவ்விஷயத்தை சாவித்ரியின் கணவன் வீட்டாருக்கும் எழுதிப் போட்டு, அவளைத் தள்ளி வைக்கச் செய்வேன்' என்று சபதம் செய்கிறார் தீக்ஷிதர்.

தலை தீபாவளிக்கு வர வேண்டிய புது மாப்பிள்ளையை சாவித்ரி எதிர்பார்த்திருக்க, அவனோ தன்னுடன் பணிபுரியும் மிஸ் லூஸியுடன் சல்லாபம் செய்து கொண்டிருக்கிறான், கல்கத்தாவில். 'நானும் தலை தீபாவளிக்கு நெடுங்கரை வருவேன்' என்று அடம் பிடிக்கிறாள் லூஸி. அதுவும் ஆண் வேடத்தில்!





18. சாதிப் பிரஷ்டம்

நெடுங்கரையில் பெருமழை நின்றது. ஆனால், மழை அடியோடு நிற்கவில்லை. சில நாள் காலையிலும், சில நாள் மாலையிலும், இன்னும் சில நாள் இரவிலுமாக விட்டு விட்டுப் பெய்து கொண்டிருந்தது.

குடமுருட்டியில் வெள்ளமும் குறைந்து, அதிகாரிகளும் பெரு முயற்சி செய்ததன் பேரில் ஒரு வாரத்தில் உடைப்பு அடைபட்டது.

சம்பு சாஸ்திரியின் மாட்டுக் கொட்டகையில் அடைக்கலம் பெற்ற சேரி ஜனங்கள், இரண்டு நாளைக்குள் களத்துத் திடலில் கொட்டகை போட்டுக் கொண்டு, அங்கே போய் விட்டார்கள். உடைப்பு அடைபட்டதும், சேரியில் மறுபடியும் குடிசைகள் போடத் தொடங்கினார்கள். இதற்கு வேண்டிய மூங்கிற் கழி, கீத்து எல்லாம் பெரும்பாலும் சாஸ்திரியார்தான் அவர்களுக்குக் கொடுத்தார்.

உடைப்பினால் சேரி ஜனங்களுக்கு மிகவும் துன்பம் ஏற்பட்டதாயினும், அந்தத் துன்பத்தின் மூலமாகக் கடவுள் அவர்களுக்கு ஒரு நன்மையையும் அளித்தார். சேரியின் ஒரு பக்கத்தில் உடைப்பு வெள்ளம் பாய்ந்த வேகத்தினால், ஒரு பெரிய பள்ளம் ஏற்பட்டு, அதில் ஜலம் தேங்கி நின்றது. அந்தப் பள்ளம் ஒரு பெரிய மூங்கில் கழி ஆழம் இருந்தபடியால், சேரி ஜனங்களுக்கு என்றும் ஜலம் வற்றாத ஒரு குளம் ஏற்பட்டது!

இதனாலும், பழைய குடிசைகளுக்குப் பதில் புதிய குடிசைகள் கிடைத்தபடியாலும் சேரி ஜனங்களுக்கு மொத்தத்தில் உடைப்பினால் நன்மை ஏற்பட்டதென்றே சொல்லலாம். இரண்டு மூன்று நாள் பட்ட கஷ்டங்களையெல்லாம் அவர்கள் அடியோடு மறந்து, வாழ்க்கையைப் புதிய குதூகலத்துடன் தொடங்கினார்கள்.

குடமுருட்டி உடைப்பு சேரி ஜனங்களுக்குக் குளம் பறித்துத் தந்ததல்லவா? அப்படிப் பறித்தெடுத்த மண்ணையெல்லாம் வெள்ளம் என்ன செய்தது என்று கேட்டால், சேரிக்கு அருகிலிருந்த சம்பு சாஸ்திரியின் வயல்களில் கொண்டு போய்த் தள்ளிற்று. சாஸ்திரியின் நன்செய் நிலத்தில் ரொம்பவும் உயர்தரமான இரண்டு வேலி நிலம் இதனால் பாழாய்ப் போயிற்று!

ஊரிலே வேறு யாருக்கும் இவ்வளவு அதிக சேதம் கிடையாது. சாஸ்திரிக்கு மட்டும் இம்மாதிரி நேரவே ஊரார், "பார்! இவன் செய்த காரியம் பகவானுக்கே பொறுக்கவில்லை. வாயிலே மண்ணைப் போட்டுவிட்டார்!" என்றார்கள்.

இந்த உலகத்தில் பகவான் தம்முடைய அந்தியந்த பக்தர்களைத்தான் அதிகமாய்ச் சோதிப்பதைக் காண்கிறோம். இது ஓர் அதிசயம் என்றால், இதைவிடப் பெரிய அதிசயம் இன்னொன்று இருக்கிறது. உலகில் ரொம்பவும் நல்ல மனிதர்களுக்கே கொடுமையான விரோதிகள் ஏற்படுகிறார்கள்! சம்பு சாஸ்திரியின் நிலைமை இப்படித்தான் இருந்தது. அந்தப் பரம பக்தரைப் பகவான் பலவிதத்திலும் சோதனை செய்தார். அந்த நல்ல மனுஷருக்குத்தான் ஊரில் விரோதிகளும் அதிகமாயிருந்தார்கள். அவருடைய நல்ல குணமும், தயாள சுபாவமுமே அக்கிரகாரத்தில் ரொம்பப் பேரை அவருக்கு விரோதிகள் ஆக்கியிருந்தன. இந்த வருஷத்தில் குடியானவர்கள் தகராறு காரணமாக அந்த விரோதம் முற்றிப் போயிருந்தது. ஆகவே, வெள்ளத்தின்போது சேரி ஜனங்களுக்கு மாட்டுக் கொட்டகையில் இடம் கொடுத்ததை வியாஜமாக வைத்துக்



கொண்டு, ஊரார் அவரைச் சாதிப் பிரஷ்டம் செய்தார்கள். அவர் வீட்டுக்கு நீர் நெருப்புக் கொடுக்கக் கூடாதென்றும், அவர் வீட்டில் நடக்கும் சுபாசுப காரியங்களுக்குப் போகக் கூடாதென்றும் கட்டுப்பாடு செய்தார்கள்.

அக்கிரகாரத்தில் எல்லாருமே இந்த நடவடிக்கைகளை விரும்பினார்கள் என்பதில்லை. பாதிப்பேருக்கு மனத்திற்குள் சம்பு சாஸ்திரியின் பேரில் அன்பும் அநுதாபமும் உண்டு. ஆனால் அப்படிப்பட்டவர்கள் சாதுக்களாயும், பயந்த சுபாவமுடையவர்களாயும் இருந்தார்கள். தீக்ஷிதர், சாமாவய்யர், முத்துசாமி அய்யர் முதலியவர்களை எதிர்த்து நின்று சண்டை போட அவர்களுக்குத் தைரியமில்லை. ''ஊரோடு ஒக்க'' என்று அவர்கள் வாயை மூடிக் கொண்டு பேசாதிருந்தார்கள்.

சம்பு சாஸ்திரி தமது நிலம் மண்ணடித்துப் போனதை அவ்வளவாய்ப் பொருட்படுத்தவில்லை. அந்தச் செய்தி தெரிந்த அன்று இரவு அவர், ''என் செயலாலாவது யாதொன்றுமில்லை, இனித் தெய்வமே, உன் செயலேயென்றுணரப் பெற்றேன்'' என்பதாகப் பாடி மனத்தை நிம்மதி செய்து கொண்டார். ஆனால், ஊரார் தம்மைச் சாதிப் பிரஷ்டம் செய்தது குறித்து அவருடைய மனம் சிறிது புண்பட்டது. அதுவும் தம்மைப்பற்றியல்ல; 'ஐயோ! இவர்கள் இவ்வளவு தயாளமற்றவர்களாயும் ஞானமற்றவர்களாயும் இருக்கிறார்களே!' என்றுதான். இந்த எண்ணங்களுக்கிடையில், ''நல்ல வேளையாய், குழந்தைக்குக் கல்யாணம் ஆகிவிட்டதே! இதெல்லாம் போன வருஷம் நடந்திருந்தால் எவ்வளவு தொல்லையாயிருந்திருக்கும்?'' என்று நினைத்து அவர் ஆறுதல் அடைந்தார்.

சாவித்திரிக்கோ கோபம் கோபமாய் வந்து கொண்டிருந்தது. கதையில் வரும் கண்ணகிக்கு இருந்த சாப சக்தி சாவித்திரிக்கு இருந்திருக்குமானால், நெடுங்கரையில் அப்போது மண்மாரி பொழிந்து ஊரே நாசமாகியிருக்கும்! அப்படிப்பட்ட சக்தி தனக்கு இல்லையே என்று அவள் பொருமினாள். 'நல்ல வேளை! இந்தச் சனியன் பிடித்த ஊரைவிட்டுச் சீக்கிரம் போய்விடப் போகிறோம்' என்று எண்ணியபோது அவளுக்குக் குதூகலம் உண்டாயிற்று. தீபாவளிக்கு ஸ்ரீதரன் வரும்போது எப்படியாவது இரண்டு நிமிஷம் தனியாகப் பார்த்துப் பேச வேண்டும்; அப்போது, தன்னைச் சீக்கிரம் அழைத்துக் கொண்டு போகும்படி சொல்ல வேண்டும் என்று அவள் அடிக்கடி எண்ணமிட்டாள். ஸ்ரீதரனைத் தனியாகப் பார்த்துப் பேசுவதற்கு நேர யுக்திகளை அவளுடைய உள்ளம் ஓயாமல் கண்டு பிடித்துக் கொண்டிருந்தது.

ஒரு நாள் சாவித்திரி மேற்கண்டவாறு எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோது, வாசலில் வண்டி நின்ற சப்தம் கேட்டது. தீபாவளிக்கு இன்னும் இரண்டு மூன்று நாள் இருந்தது. தீபாவளிக்கு முதல் நாள்தான் மாப்பிள்ளை வருவார் என்று சாவித்திரிக்குத் தெரியும். ஆனாலும், ஆசைக்கு அளவில்லையல்லவா? ஒரு வேளை இவர்தான் கொஞ்சம் முன்னாலேயே வந்திருக்கலாமோ என்று எண்ணி, பரபரப்புடன் எழுந்து சென்று வாசற் கதவைத் திறந்தாள். மங்களத்தின் தாயார் சொர்ணம்மாள் வண்டியிலிருந்து இறங்கி, மூட்டை முடிச்சுகளுடன் வந்து கொண்டிருந்தாள்!

பகவான் பிரத்தியட்சமாவார் என்று எதிர்பார்த்தவனுக்கு முன்னால், கோரமான பிசாசு தோன்றினால் எப்படியிருக்கும்? சாவித்திரிக்கு அவ்வளவு ஏமாற்றமாயும் அருவருப்பாயும் இருந்தது. ஆனாலும் புத்திசாலிப் பெண்ணாகையால், அந்த ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. சொர்ணம்மாள் வாசற்படி தாண்டி உள்ளே வந்ததும், ''வாங்கோ, பாட்டி!'' என்று சொல்லி, நமஸ்காரம் பண்ணினாள். எழுந்திருந்து, பாட்டி எடுத்துக் கொண்டு வந்த கூடையையும் மூட்டையையும் வாங்கிக் கொண்டு உள்ளே வைக்கப் போனாள்.

இதற்குள் மங்களமும் வந்து தாயாரைச் சமையலறைக்கு அழைத்துச் சென்றாள். சமையலறைக்குள் போய் உட்கார்ந்தாளோ, இல்லையோ சொர்ணம்மாள், ''ஏண்டி பொண்ணே! இதென்னடி நான் கேள்விப்படறது? உங்களைச் சாதியை விட்டுத் தள்ளி வச்சிருக்காமே?'' என்றாள்.

''ஆமாண்டி, அம்மா! ஆமாம். உன் மாப்பிள்ளை இன்னும் என்னெல்லாம் பண்ணி என்னைச் சந்தியிலே நிறுத்தப் போறாரோ, அந்தப் பகவானுக்குத்தான் தெரியும்'' என்றாள் மங்களம்.

''யாராவது தீண்டாதவாளை அக்கிரகாரத்துக்குள்ளே வரச் சொல்லுவாளா? அதிசயமாயிருக்கே? இந்தப் பிராமணனுக்கு ஏண்டி இப்படிப் புத்தி கெட்டுப் போச்சு!'' என்றாள் தாயார்.

இந்தச் சமயத்தில், காமரா உள்ளில் மூட்டையைக் கொண்டு வைக்கப்போன சாவித்திரி, திரும்பிச் சமையலறைக்கு வந்தாள். சொர்ணம்மாள் சொன்னது அவள் காதில் விழுந்தது.

"நாம எடுக்கற ஆர்ட் படத்துக்கு இவரை எப்படி ஹீரோவா செலக்ட் பண்ணினீங்க?"

"கன்னத்தை சொறிஞ்சு காட்டச் சொன்னேன். மனுசன் அரை மணி நேரமா நிதானமா சொறியறார்!"

- அம்பை தேவா.

அப்பாவுக்குப் புத்தி கெட்டுப் போச்சு என்று பாட்டி சொன்னது சாவித்திரிக்குச் சகிக்கவில்லை. அவளுக்குத் தன்னையறியாமல் கோபம் வந்தது. வழக்கத்தைவிட உரத்த குரலில் சொன்னாள்:

"எங்க அப்பாவுக்கு ஒண்ணும் புத்தி கெட்டுப் போகலை, பாட்டி! ஊரிலே இருக்கிறவாளுக்குத்தான் புத்தி கெட்டுப் போச்சு! வீடு வாசல்லாம் வெள்ளத்திலே போய், மழையிலே நனைஞ்சுண்டிருந்தவாளுக்கு இருக்க இடங்கொடுத்தால், அது ஒரு குத்தமா? சித்தி! ஊரார்தான் இப்படியெல்லாம் சொல்றான்னா, நீகூட இப்படிப் பேசறது நன்னாவேயில்லை."

இவ்வாறு சொல்லிவிட்டுச் சாவித்திரி சட்டென்று வெளியே சென்றாள்.

சொர்ணம், இரண்டு கையையும் ஒரு தடவை தட்டி, மோவாய்க் கட்டையில் ஒரு கையை வைத்துக் கொண்டு, "ஏண்டி, மங்களம்! இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு வாயும் கையும் எப்போடி வந்தது?" என்றாள்.

"ஏற்கெனவே, வாய்த் துடுக்கு ஜாஸ்தி. கல்யாணம் ஆனதிலிருந்து தலைகீழாய்த் தான் நிக்கறது" என்றாள் மங்களம்.

"முதல்லே புக்காத்துக்குப் போகணுமேடி, அம்மா! அதைச் சொல்லு! ஊரிலே யாரோ சம்பந்தியாத்துக்குக் கடிதாசி எழுதிப் போட்டிருக்கான்னு சொல்றா. என்ன நடக்கப் போகிறதோ, என்னமோ?"

இந்த மாதிரி இவர்கள் பேசிக் கொண்டிருந்த போது, சாவித்திரி பூஜை அறைக்குள் போய் அம்பிகைக்கு நமஸ்காரம் செய்தாள். பிறகு, தலை நிமிர்ந்து, கைகூப்பிக் கொண்டு, "அம்பிகே! தாயே! அப்பாவை ஊரார்தான் கரிக்கிறார்கள் என்றால், உற்றாரும் கரிக்கவேண்டுமா? ஐயோ! நான் கூடச் சீக்கிரத்தில் கல்கத்தாவுக்குப் போய் விடுவேனே? அப்புறம், அப்பாவுக்கு யார் இருக்கிறார்கள்? அம்பிகே! சித்தியையும், பாட்டியையும், நல்லவாளாய் ஆக்கிவிடக் கூடாதா? எங்க அப்பாவை இப்படிக் கரிக்காமல் செய்யக் கூடாதா?" என்று பிரார்த்தித்தாள்.


19. பிரயாணம் நின்றது

ராஜாராமய்யரின் ஆவி உலகச் சோதனைகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவரும், மிஸ்டர் பீடர்ஸன் துரையும், "ஸ்பிரிட் ஓர்ல்ட்" பத்திரிகாசிரியர் சியாம் பாபுவும், இன்னும் நாலைந்து பேரும் வாரத்தில் ஒரு நாள் இரவில் சந்தித்து, இறந்தவர்களுடைய ஆவிகளை வரவழைத்துப் பேச முயன்று கொண்டிருந்தார்கள். ஒரு நீளமான மேஜையைச் சுற்றி இவர்கள் உட்காருவார்கள். விளக்கை அணைத்து விடுவார்கள். பிறகு, ஒவ்வொருவரும் தமது இறந்து போன உறவினர் யாரையேனும் மனத்தில் நினைத்து, 'அவருடைய ஆவி வரவேண்டும்' என்று தியானிப்பார்கள்.

ஆவி உலகம் சம்பந்தமாக அப்போது வெளியாகியிருந்த புத்தகங்களில் மேற்கண்ட முறைதான் கூறப்பட்டிருந்தது. இந்த மாதிரி தொடர்ந்து செய்து வந்தால், சில நாளைக்கெல்லாம் குறிப்பிட்ட ஆவி, அல்லது ஆவிகள் அருவமாக அந்த அறைக்குள் வரும். வந்து, தியானம் செய்பவர்கள் தொட்டுக் கொண்டிருக்கும் மேஜையை மெள்ள மெள்ள உயரத் தூக்கும். அப்புறம் சில விசேஷ சப்தங்கள் எல்லாம் உண்டாகும். நாளடைவில் ஆவி, புகை போன்ற உருவம் எடுத்துக் கண்ணுக்குப் புலனாகத் தொடங்கும். கடைசியாக,. அது பேசத் தொடங்கி, கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லும். இம்மாதிரி, மேற்படி புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருந்தது.

இப்போது ராஜாராமய்யரும், அவருடைய சகாக்களும் செய்த சோதனையில், மேஜையானது உயரக் கிளம்ப ஆரம்பித்திருந்தது. முதலில் ஓர் அங்குலம், அப்புறம் இரண்டு அங்குலம் - இப்படியாக அபிவிருத்தியடைந்து இப்போது ஒரு முழ உயரம் வரை கிளம்பிக் கொண்டிருந்தது. உண்மையில், அங்கே தியானத்தில் அமர்ந்தவர்கள் ஒவ்வொருவரும், ஆவிகளுக்கு ஒத்தாசை செய்யும் நோக்கத்துடன் கொஞ்சம் கொஞ்சம் இலேசாக மேஜையைத் தூக்கி விட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஒருவருக்காவது மற்றவர்களும் அப்படிச் செய்கிறார்கள் என்பது தெரியாதாகையால், அருமையான ஆவிகள்தான் வந்து மேஜையைத் தூக்குகின்றன என்று மனப்பூர்வமாய் நம்பினார்கள்.

அம்மாதிரி பரிபூரண நம்பிக்கை கொண்டிருந்தவர்களில் ராஜாராமய்யரும் ஒருவர். தமது வாழ்நாளெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்த காரியம் இப்போது உண்மையிலேயே நிறைவேறப் போகிறதென்று எண்ணி அவர் அளவிலாத உற்சாகத்தில் ஆழ்ந்திருந்தார். உலக விஷயங்கள் ஒன்றுமே அவருக்கு இலட்சியமாயில்லை. தீபாவளிக்குத் தம் மனைவியும் பிள்ளையும் நெடுங்கரைக்குப் போகும்



தீபாவளிக்கு நிறையப் பலகாரங்கள் செய்வோம். அதில் உப்புப் பக்ஷணங்கள், கரகரப்பாக, நமுக்காமல் இருக்க, அந்த டப்பாவில் ஒரு சிறு துணியில் உப்பைக் கட்டி வைக்கலாம்.

- பி.எஸ். சித்ரா.

விஷயம் அவருக்கு மிகவும் திருப்தியளித்தது. 'அப்பா! ஒரு பத்து நாளைக்காவது இவர்களுடைய தொல்லையில்லாமல் இருக்கலாம்' என்று அவர் எண்ணினார். அத்துடன், இப்போது அவர்கள் சோதனை நடத்திக் கொண்டிருந்த இடம் அவ்வளவு வசதியில்லாமலிருந்தபடியால், தங்கம்மாளும் ஸ்ரீதரனும் ஊருக்குப் போனால் தமது வீட்டிலேயே ஒருநாள் நடத்திப்பார்க்கலாம் என்ற எண்ணமும் அவருக்கு இருந்தது. சோதனை நடக்கும்போது நம்பிக்கையற்றவர்கள் யாரும் அருகில் இருக்கக் கூடாதாதலால், தங்கம்மாளும் ஸ்ரீதரனும் இருக்கும்போது வீட்டில் அந்தச் சோதனை நடத்த அவர் விரும்பவில்லை.

இப்படியாக, ராஜாராமய்யர் தம் மனைவியும் புதல்வனும் தீபாவளிக்கு ஊருக்குப் போவதை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், நெடுங்ரையிலிருந்து அவர் பேருக்கு ஒரு தபால் வந்தது. அதைப் பிரித்துப் படித்துப் பார்த்ததும் அவர் ஒரே கலவரமடைந்து போனார். அப்போது அவர் 'ஸ்பிரிட் ஒர்ல்ட்' பத்திரிகைக்குத் தமது ஆவி உலக அநுபவங்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தாராயினும், அதை அப்படியே விட்டு விட்டுத் தங்கம்மாளைத் தேடிக் கொண்டு போனார்.

அன்று இரவுதான் நெடுங்கரைக்குப் பயணப்படுவதாக உத்தேசித்திருந்தபடியால், தங்கம்மாள் பெட்டியில் சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டு, வேலைக்காரனைப் படுக்கை கட்டச் சொல்லிக் கொண்டு இருந்தாள். அப்போது ராஜாராமய்யர், கையில் பிரித்த கடிதத்துடன், ''தங்கம்! தங்கம்! கேட்டாயா சமாசாரம்?'' என்று கேட்டுக் கொண்டு வந்தார்.

''என்ன பிரமாதமான சமாசாரம்? எள்ளுக்குள் எண்ணெய் இருக்குன்னு எனக்குத் தெரியுமே?'' என்றாள் தங்கம்.

''இல்லேடி! உன் பிள்ளையாண்டான், தீபாவளிக்கு மாமனார் ஆத்துக்குப் போக மாட்டேன்னு மூக்கால் அழுதுண்டிருந்தானோல்லியோ? அங்கேயும் அதுக்குத் தகுந்தாப்பலே ஒரே ரகளையா இருக்கு. சம்பு சாஸ்திரிக்குத் திடீர்னு பைத்தியம் பிடிச்சுடுத்தாம்....''

''இது என்ன கூத்து?''

''பைத்தியம்னா, நிஜப் பைத்தியமில்லை! ஒரு நாளைக்குத் தீண்டாதவன்களையெல்லாம் அக்ரகாரத்துக்குள்ளே அழைச்சுண்டு வந்துட்டாராம். அதுக்காக, ஊரார் அவரை 'பாய்காட்' பண்ணி வச்சிருக்காளாம்....''

''அடப்பாவிப் பிராமணா! இப்படிப் பெரிய கல்லாத் தூக்கிப் போட்டுட்டாரே! ஆடி, ஆறாம் மாதம் ஒன்றுக்குந்தான் போகலை - தீபாவளிக்காவது போய்த் துணிமணி, பாத்திரம், பண்டம் வாங்கி நகத்திண்டு வரலாம்னு ஆசைப்பட்டுண்டு இருந்தேனே? என்னா? நெஜமாத்தான் அப்படி எழுதியிருக்கா? நீங்களா வெறுமனைக் கோசரம் சொல்றயளா?''

''சரியாப் போச்சு! எனக்கு வேறே வேலை கிடையாதாக்கும்! தீக்ஷிதரும், இன்னும் நாலைஞ்சு பேரும் கையெழுத்துப் போட்டுக் கடுதாசி எழுதியிருக்கா. ஒரு நாளைக்குப் பலமா மழை பேஞ்சபோது, சேரியிலே வெள்ளம் புகுந்துடுத்துன்னு, சேரி ஜனங்கள் எல்லாரையும் அக்கிரகாரத்துக்கு அழைச்சுண்டு வந்து இரண்டு நாள் வச்சிருந்தாராம். ஊரார், வேண்டாம்னு எவ்வளவோ சொல்லியும் கேக்கலையாம். ரொம்ப ரஸாபாஸமாய்ப் போச்சாம். அதுக்கு மேலேதான், அவாத்துக்கு யாரும் போகக்கூடாது, நீர் நெருப்புக் கொடுக்கக் கூடாதுன்னு கட்டுப்பாடு பண்ணியிருக்காளாம். இந்தச் சமயத்திலே நாம் அங்கே தீபாவளிக்கு வரக்கூடாதுன்னு ஊரார் கேட்டுக்கறாளாம். 'அப்புறம் உங்க இஷ்டம்; நாங்க இதுக்கு மேலே சொல்றதுக்கில்லை'ன்னு லெட்டர் முடியறது. நீ என்ன சொல்றே?''

''நான் என்னத்தைச் சொல்றது? பார்த்தா வைதிகமா, விபூதியும் துளசி மாலையுமா இருக்காரேன்னு நினைச்சேன். உங்களைப் போலேயெல்லாம் கிராப்புத் தலையும், பாழும் தெத்தியுமா இல்லையேன்னு சந்தோஷப்பட்டுண்டு இருந்தேன். இப்படிப் பைத்தியம் பிடிச்சுப் பாயைப் புரண்டப் போறார்னு நான் கண்டேனா?''

''அதைக் கேக்கலை, நான் இப்போ! தீபாவளிக்குப் போறயா, இல்லையான்னு தான் கேக்கறேன்.''

''அது எப்படிப் போறது? நன்னாயிருக்கே! இன்னிக்கு நாம்ப புடைவைக்கும் வேஷ்டிக்கும் ஆசைப்பட்டுண்டு போய்ட்டா, நாளைக்கு நம்ப பொண்களைக் கொடுத்திருக்கிற இடத்திலே சும்மா இருப்பாளா? - அதெல்லாம் யோசனை பண்ணித்தான் செய்யணும்'' என்றாள் தங்கம்மாள்.


(தொடரும்)

உங்கள் சமையல் அறையில்,
எல்பிஜி-யின் 30% வீணாகிப் போகிறதா?




அப்படியானால்!
கீழ்க்கண்ட எல்பிஜி
மிச்சப்படுத்துவதான
உத்திகளைக் கடைப்பிடிக்கவும்.

கொதி வந்தவுடனேயே,
நெருப்பின் ஜுவாலையை
குறைத்து, 35% வாயுவை
மிச்சப்படுத்துங்கள்.







சமையல் வாயுவை
மிச்சப்படுத்துவதற்கு,
எப்போதுமே பிரஷர் குக்கர்
ஒன்றைப் பயன்படுத்தவும்:
இது நேரத்தையும் மிச்சப்படுத்தும்.



அரிசி, பருப்பு முதலியவற்றை
சமைப்பதற்கு முன்னர் ஊற
வைத்திடுங்கள்: அதனால் 22%
எரிபொருள் மிச்சமாகும்.



பர்னரை சுத்தமாக
வைத்திருக்கவும். பளிச்சென்ற
நீல நிறத்தில் எரியும்
ஜுவாலையாக இருந்தால்தான்,
சமையல் வாயு, நன்கு
நிரம்பட்ட வகையில்
எரிவதாகும்.




சமையலுக்குத் தேவையான
அளவே தண்ணீரைப்
பயன்படுத்தவும். அளவுக்கு
அதிகமான நீர் கூடுதலாக
சமையல் வாயுவை உறிஞ்சிவிடும்.

பெயர்: ....
விலாசம்: ....
....
மாநிலம்: .... பின்கோட்: ....

பெட்ரோலியம் கன்சர்வேஷன்
ரிசர்ச் அசோசியேஷன்

பாரதத்தின் நன்மைக்கு, எண்ணெயை மிச்சப்படுத்துங்கள்.

பிரித்திஷ் நந்தி : பத்திரிகையாளரா? பரபரப்பாளரா?



* நந்தி : மேத்தாவுடன் சேர்ந்து சதி?

பரபரப்பூட்டும் பேட்டிகள் கொண்ட 'பிரித்திஷ் நந்தி ஷோ' பார்க்க, கடிகாரத்தில் நிமிஷங்களை எண்ணியவர்கள் லட்சக் கணக்கில். இன்று அவர்களுக்கு ஏமாற்றம்....

கல்கத்தாவில், பஞ்சாபி தாபா (சிறு ஓட்டல்) ஒன்றில் டீக்கடைப் பையனாக வாழ்க்கையைத் தொடங்கிய பிரித்திஷ் நந்தியின் வேறு சில முகங்கள் : கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாளர். அனைத்திலும் இவர் பதித்திருப்பது தனி முத்திரை.

பதினாறு வயதில் எழுத்தாளரானார் நந்தி. பதினெட்டாவது வயதில் முதல் கவிதைப் புத்தகம் வெளியாகி விட்டது. இதுவரை பிரசுரமானவை நாற்பத்தேழு புத்தகங்கள். இருபத்தாறு வயதிலேயே ஈ.எம். ஃபாஸ்டர் இலக்கிய விருது பெற்றவர். இருபத்தெட்டில் பத்மஸ்ரீ! இவரது கவிதைத் தொகுப்பை ஹெச். எம். வி. இசைத் தட்டாகவும் வெளியிட்டது!


விற்பனைப் பிரதிநிதியாகப் பணியாற்றிய காலத்தில் பயணத்திலேயே பெரும் நேரத்தைச் செலவிட்டார். விளம்பரத்துறை அனுபவங்களைத் தொடர்ந்து, பத்திரிகையாளரானார். இரண்டாண்டுகளுக்குக் கார்ட்டூனிஸ்டாய் வேறு இருந்திருக்கிறார்! ''இருப்பது ஒரே ஒரு வாழ்க்கை. அது முடிவதற்குள் எத்தனை புதிய விஷயங்களில் சாதனை படைக்க முடியுமோ, படைத்து விடுவது'' என்பது அவரது குறிக்கோள்.

பத்திரிகையாளர் என்ற முறையில் இவர் பரபரப்பூட்டியது இல்லஸ்டிரேடட் வீக்லியின் ஆசிரியராக இருந்த போதுதான். தீவிரவாதிகளுக்குப் பயிற்சியளிக்கும் பள்ளியொன்றை அமெரிக்காவில் நடத்தி வந்த ஃப்ராங்க் கேம்பரை, பிரித்திஷ் நந்தி பேட்டி கண்டு எழுதியது அன்றைய தினம் இந்தியப் பத்திரிகையுலகின் ஸூப்பர் ஸ்கூப். கேம்பரை, மறைவிடத்தில் சென்று சந்திக்க ஹெலிகாப்டரில் போனார் நந்தி. இதற்குண்டான பில்லை, இல்லஸ்டிரேடட் வீக்லியின் நிர்வாகம், ''ரொம்ப அதிகம்; கட்டுப்படியாகாது'' என்று சொல்லி, திருப்பி அனுப்பிவிட்டது. ''ரகசியமான தனிவிடத்தில் தொழில் நடத்தும் ஆசாமியைச் சந்திக்க ஹெலிகாப்டரில் போகாமல், கட்டை வண்டியிலா போக முடியும்?'' என்று பிரித்திஷ் நந்தி கேட்க, நிர்வாகம் பணத்தைக் கொடுத்துவிட்டது!


நாற்பத்திநாலு வயதாகும் நந்திக்கு ஓவியத்திறனும் உண்டு. இப்போது, ஒரு சமஸ்கிருதப் புத்தகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொண்டிருக்கிறார். மனைவி பெயர் ரீனா. இவரும் ஒரு மொழி பெயர்ப்பாளர்.

தூர்தர்ஷன் நிகழ்ச்சியில் அமைச்சர் பரத்வாஜுடனான இவரது பேட்டி, சமீபத்தில் பரபரப்பானது. சக காங்கிரஸ்காரர்களைப் பற்றிய அமைச்சரின் காரசாரமான விமர்சனம் பெரிய சர்ச்சை கிளப்பியது. தூர்தர்ஷனில் உள்ள அதிகாரிகள் தயவில், சர்ச்சைக்குரிய பகுதிகள் ''சென்சார்'' செய்யப்பட்டுவிட்டாலும், எடிட் செய்யப் படாத பேட்டி கொண்ட டேப், ஹர்ஷத் மேத்தாவின் கையில் கிடைத்துவிட்டது. பத்திரிகையாளர்களுக்குப் போட்டுக் காட்டப்பட்ட போது, பிரித்திஷ் நந்தியும் உடன் இருந்தார். ''மேத்தாவுடன் சேர்ந்து கொண்டு, நரசிம்மராவுக்கு எதிரான சதி'' என்று நந்தி மீது குற்றம் சாட்டினார்கள் காங்கிரஸ்காரர்கள். விளைவு : தூர்தர்ஷன், 'பிரித்திஷ் நந்தி ஷோ'வுக்குக் குட்பை சொல்லிவிட்டது. நந்தி இப்போது கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்.


– எஸ். சந்திரமௌலி



மாமனார் வீட்டில் தீபாவளி!
ஆஹா! மாமனார் வீடு 'லைட்டட்'. 2 கட்டம் தாண்டிக்குதி.
என்னடா கருப்புப் பூனை கிராஸிங்?
சம்திங் ராங்!
மயக்கம் போட்டுச் சாய்ந்து அடு!
வாங்க மாப்பிள்ளை! உங்ககிட்ட நான் ரூ 2000/- வாங்கி தீபாவளிச் செலவை சமாளிக்கலாம்னு இருக்கேன்!
வை கோ
வை கோ
WHY GO
வை. கோ. ஆதரவாளர் ஊர்வலம் - 2 கட்டம் பின் வாங்கு!
தெருமுனையில் நாய் துரத்த....
34க்கு ஓடு!
அப்பாடா மாமனார் வீடு நெருங்கிடுச்சி!
என்ன?! திருச்சியா? ஸ்ரீரங்கம் போயிருச்சே! பஸ் ஸ்டாண்டில் போ!



ரயில் ஸ்பீட் எடுக்கிறது.
4 கட்டம் முன்னேறு
சார்! இது எங்க வீட். எதிர்த்து 16க்குப் போங்க!
"மாமனார் என்ன வாங்கித் தருவார்?" -பகலில் கனவு!..
ரயில் போய்விட்டது. அடுத்த வண்டிக்குக் காத்திரு. உ ஆட்டம் இழப்பு!
'ஜெ' வருகிறார். சாலைத் தடை. ரூட் மாறு
..மோதிரமா, ஸ்கூட்டரா, V.C.R. ஆ?
மாமனார் வீடு நோக்கிக் கிளம்பு~
ஸ்டேஷன் போக 'டக்' கென்று ஆட்டோ கிடைத்து விட்டதே! 6 கட்டம் முன்னேறு
செருப்பை எலி குதறி விட்டது. ஒரு கட்டம் பின் வாங்கு
நீ சரியாப் பூட்டினாயா? சந்தேகம். தொடக்கத்துக்குத் திரும்பிப் போ!



கதிர் வீச்சுப் பேழை விழுந்த கூவமாக டாக்டர் கோபாலனின் கோழை மனம் குழம்பியிருந்தது. தீபாவளிப் பட்டாடையோ, பட்டாசோ, பட்சணமோ, பட்டி மன்றமோ எதிலும் பதியாமல் படபடத்தது.

''அப்ப நீங்க லேகியமே சாப்பிடலையே?'' என்றபடி அவர் மனைவி சரோஜா கையில் உருட்டிக் கொண்டு வந்த நெய் ஒழுகும் தீபாவளி லேகியத்தைப் பார்த்ததும் மெய் முழுதும் திகில் பரவியது.

இந்நேரம் இடிமுழக்கம் இன்பராசனுக்கு என்ன நேர்ந்திருக்குமோ தெரியவில்லையே... எந்த நேரத்தில் அவர் வந்து தன்னைப் பிடித்து உலுக்கப்போகிறாரோ? ஆண்டவா! எப்போதும் போல் என்னைக் காப்பாற்றப்பா. என்று மனம் உருக, குல தெய்வத்தை வேண்டிக் கொண்டவர், தம் கையில் இருப்பது விபூதி என எண்ணி நெற்றி நிறைய தீபாவளி லேகியத்தை அப்பிக் கொண்டு நின்றார்.

''இதென்ன கூத்து... லேகியத்தை திங்கக் கொடுத்தா நெத்தியிலே பத்துப் போட்டா மாதிரி அப்பிண்டு நிக்கறீங்களே... இப்படி ஏதோ ஞாபகத்திலே எதையோ செய்ற புத்தி என்னிக்குத்தான் ஒழியப் போறதோ தெரியலே!'' என்று சரோஜா மாமி அங்கலாய்த்துக் கொண்டாள்.

கோபாலனின் மறதி மகா பிரசித்தம். அந்தக் காலத்திலேயே இஞ்சினியரிங் அப்ளிகேஷன் வாங்கப் போனவர், மறந்துபோய் மருத்துவப் படிப்புக்கு விண்ணப்பம் வாங்கி வந்ததன் வினைதான் இன்று அவர் சர்ஜன்! ஏன், சில நாட்களில் தம் பாலிகிளினிக்குக்குப் போவதாக எண்ணிக் கொண்டு உள்ளூர் பாலிடெக்னிக் சென்று பிரின்ஸிபால் அறையில் பேஷண்ட்டைத் தேடிவிட்டுப் பேந்தப் பேந்தத் திரும்புவதும் உண்டு!

ஆபரேஷன் செய்யும் போது சின்னச் சின்ன சமாசாரங்களை வைத்துத் தைத்து விட்டு தவித்த தருணங்களும் ஏராளம். ஊசி முதல் உள்ளங்கையுறை வரை எதையாவது உரிக்கப்பட்ட தேகத்தின் பாகத்தில் விட்டு விட்டு, வெற்றிகரமாக சிகிச்சையை முடித்து விடுவார். உபாதை தாங்காமல் திரும்பவும் வரும் அதே பேஷண்டுக்கு இன்னொரு ஆபரேஷன் இனாமாகச் செய்து வைப்பவர், தான் ஏற்கெனவே விட்ட பொருளை எடுத்துவிட்டு, அதே மறதியோடு வேறொரு சமாசாரத்தை வைத்துத் தைத்துவிடும் சம்பவங்களும் உண்டு!

இதே ரீதியில் தன்னிடம் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு, முகஜாடையை முன்னேற்றிக் கொள்ள வந்த நடிகைக்கு, ஏதோ ஞாபகத்தில் தன் மனைவி சரோஜாவின் சாயலில் முகமாற்றம் செய்துவிட, கொஞ்ச நஞ்சமிருந்த மார்க்கெட்டையும் இழந்த நடிகை, இவர் அஷ்ட கோணலாக்கிய முகத்துக்கு நாற்பது லட்சம் நஷ்ட ஈடாகக் கேட்டு கேஸ் போட்டிருக்கிறாள்.

இப்படிப்பட்ட ஒரு மாபெரும் மறதி மருத்துவர் தீபாவளி ஒரு நாளிலாவது நிம்மதியாக இருக்க நினைத்து, உடம்பு முழுவதும் சொத சொதவென இதயம் மணக்க 'மெட்ரோ' ஸ்நானத்திற்காக அன்று காலை



அகிலா கார்த்திகேயன்

காத்திருந்தார்.

வாசலில் ஒரு கார் வந்து நிற்க, அதிலிருந்து அரசியல் புள்ளி இடிமுழக்கம் இன்பராசன் அள்ளித் தெளித்த அமில முகத்துடன் வந்து இறங்க, டாக்டரின் ஸ்நானம் தடைப்பட்டது. இன்பராசனுக்கு வாய்த் துடுக்கு, போஸ்டர் துடுக்கெல்லாம் அதிகம். ஏதோ தன் தலைவர் அரசியல் துறவறம் என்று அறிவித்ததும், நீக்குளிப்புக்கு நாலு ஆட்களை ஏற்பாடு செய்து, அவர் அன்பைப் பெறத் தெரியாமல், ஊர் முழுக்க 'துறவறம் போகும் தலைவருக்கு இருகரம் கூப்பி நன்றி சொல்கிறோம்' என்று போஸ்டர் உபயம் செய்யப்போய், அவர் முகத்தில் யாரோ தீபாவளியும் அதுவுமாக திராவகம் தெளித்து விட்டிருத்தார்கள்.





● விரல்கள் துணையுடன்....

தேங்காய் வீரர் தயானந்தன்!

தமது பத்து விரல்களிலும் உள்ள நகத்தைக் கொண்டே மட்டைத் தேங்காயை மூன்றே நிமிடங்களுக்குள் உரித்துக் காட்டினார் தயானந்தன்!

இந்த இளைஞருக்கு சிறு வயது முதலே வித்தியாசமாக ஏதேனும் செய்ய வேண்டும் என்ற ஆசை. திருவனந்தபுரம் டெலிகாம் ஊழியரான தயானந்தன், கண்ணனூரையடுத்துள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர். கொச்சியில் தமது சாதனையை நிகழ்த்திக் காட்டினார். கின்னஸ் புத்தகத்தில்

''முகமெல்லாம் ரொம்ப எரியுது டாக்டர்... சீக்கிரம் எதையாவது தடவுங்க ளேன்!'' என்று ஏகப்பட்ட வேதனையோடு இன்பராசன் அலறியது இவரை உலுக்கியது. எண்ணெய் ஊறிக் கொண்டிருந்த கையும் காலும் ஓடவில்லை.

பிரபுதேவா பாணியில் துள்ளி, மருந்து வைத்திருக்கும் அறைக்கு ஓட நினைத்தவர், இடுப்பில் கட்டியிருந்த துண்டு நழுவி ஒரு டேஞ்சரஸ் மூவ் செய்ய, கண நேரம் ஞாபகம் பிசகி சமையலறையில் நுழைந்து களிம்பு என்று நினைத்து சமையல் மேடை விளிம்பிலிருந்த தீபாவளி மருந்தை எடுத்துக் கொண்டு திரும்பினார்.

சுக்கு, மிளகு காரம் கலந்த லேகியக் களிம்பை இன்பராசன் முகத்தில் அமிலம் தெளிக்கப்பட்ட இடங்களில் தடவும்போது எரிச்சல் தாங்காமல் ஒரு சட்டசபை உதை கிடைத்ததன் மர்மம் டாக்டருக்கு அப்போது புரியவில்லை.

''ரொம்ப ஸ்ட்ராங்கான ஆயின்மெண்ட்டா போட்டிருக்கீங்களா டாக்டர்...? ரொம்ப எரியுதே... முகம் பழைய நிலைக்கு வர வாய்ப்பிருக்கா டாக்டர்?'' என்று மிக வருத்தத்தோடு இன்பராசன் சொல்லி விட்டுப் போய் விட்டார். கோபாலனுக்கு குழப்பமாய்ப் போய் விட்டது. களிம்பு போட்டால் ஜில்லென்று தானே இருக்க வேண்டும்? எரிகிறது என்கிறாரே... புரிகிற மாதிரியில்லையே என்று பல்வேறு எண்ணத்தோடு எண்ணெய் ஸ்நானம் முடித்துவிட்டுத் திரும்பினார். சரோஜா மாமி தன் அறையிலிருந்து எதையோ எடுத்துக் கொண்டு வந்து,

''ஏன்னா.... எங்கேயெல்லாம் தேடிட்டு இருக்கேன்... குழந்தைகளுக்கு ஸ்நானம் பண்ணினவுடனே கொடுக்கலாம்னு லேகியத்தைத் தேடினா, சமையல் ரூமிலே வைச்ச இடத்திலே காணாம, உங்க ரூமிலே யாரோ கொண்டு வைச்சிருக்கா... ஒரு வேளை நீங்க டேஸ்ட் பண்ணிப்பார்க்க எடுத்துண்டு போனீங்களோ என்னவோ... உங்களுக்கு ஞாபகமா இருக்கப் போறது?'' படபடத்தாள்.

அப்படியே நிலைகொத்தி நின்று விட்ட கோபாலனுக்கு அவர் இருந்த இடத்தில் மட்டும் மகாராஷ்டிரா நடுக்கம் ஏற்பட்ட தாகப்பட்டது. அப்படியென்றால் இடி முழக்கத்தின் முகத்தில் தான் தடவி அனுப்பிய வஸ்து தீபாவளி லேகியமா? விஷயம் வெளிப்பட்டால் ஏற்படப் போகும் விளைவு என்னவாயிருக்கும் என்று எண்ணிய போது அவர் மனம் திரி பற்ற வைத்த வெடியாக பக்பக்கென்று அடித்துக் கொண்டது.

அந்த அகராதி பிடித்த அரசியல் புள்ளி தன்னை என்ன பாடுபடுத்தப் போகிறாரோ... ஏற்கெனவே கரடுமுரடான அவர் முகம் மலையும் மடுவுமாய் மாறி விகாரமடைந்து, தன்னை என்ன விவகாரத்துக்கு இழுக்கப் போகிறதோ என்று பீதியோடு தீபாவளியின் பாதிநாளை ஓட்டினார். மீதி நாளில் அவருடைய மறதி செய்த உபயத்தால் சிறப்பு ஒலியும் ஒளியும் பார்த்து, கிலி இல்லாமல் கழித்தார்.

இருந்தாலும் குலதெய்வத்தைத் தீவிர

இதுவரை இப்படி ஒரு சாதனை பதிவு செய்யப்படவில்லையாம்.

முதலில் மெலிசாக நார் மாதிரிதான் உரித்தார். முதல் நிமிடத்தில் ஒரு பகுதி மட்டை உரிக்கப்பட்டிருந்தது. பிறகு அடுத்த நிமிடம் கிட்டத்தட்ட முக்கால் மட்டை. பரபரவென்று விரல்கள் இயங்க, மூன்றாவது நிமிட முடிவுக்குள் தேங்காய் முழுதும் உரிக்கப்பட்டு, உயர்த்திப் பிடித்துக் காண்பித்தார் தயானந்தன்.

"ஒரு மணி நேரத்தில் 24 தேங்காய்கள் உரிக்க வேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறேன்" என்றார். 24 மணி நேரம் தொடர்ந்து நடந்து 150 முதல் 200 கி.மீ. தூரத்தைக் கடக்க வேண்டும் என்பது தயானந்தனின் இன்னொரு ஆசை!

– சித்தார்த்

புகைப்படங்கள் : யோகா



* உரித்த தேங்காய்!

மாக வேண்டிக் கொண்டார்.

அடுத்த நாள் பேப்பரில் அமிலவீச்சு பற்றி அதிகமாகச் செய்திகள் அடிபட்டது. வீசியவர் பற்றியும், இதற்கு முன் அவர் யார் முகத்தில் வீசியிருக்கிறார், அவர்கள் முகம் எவ்வெவ்வாறு விகாரமடைந்துள்ளன என்பதைப் பற்றி விரிவாக அலசப்பட்டு, மேற்படி இன்பராசனின் முகம் எப்படி மாறலாம் என்பதற்குப் போட்டி வேறு வைத்திருந்தார்கள்.

பெட்டிச் செய்தியாய் இன்பராசன் யாரிடம் சிகிச்சை பெற்றார் என கோபாலனைப் பற்றி வேறு, சிறு குறிப்பு போட்டுத் தொலைத்திருந்தனர். தன் போதாத காலத்தைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த கோபாலனை அவர் வீட்டு முன் இன்றும் வந்து நின்ற இன்பராசன் கார் கலக்கியது. பின்னால் லாரியில் தொண்டர்கள் வேறு.

திறந்த காரிலிருந்து முதலில் வெளியே வந்த ஆளுயரமாலை, கோபாலனை அசத்தியதென்றால், பட்டு வேட்டி, பட்டு சட்டையுடன் அதைத் தாங்கி வந்த இன்பராசனின் பட்டான முகம் அதிர்ச்சியூட்டியது.

"டாக்டர்! என்னைக் காப்பாத்திட்டீங்க... நேத்து நீங்க பூசின களிம்பு வெரி எஃபக்டிவ். சாயங்காலம் முகத்தை ரொம்ப எரியுதேன்னு கழுவினேன் பாருங்க... அமிலம் விழுந்த தடயமே இல்லாம பளபளன்னு முகம் அப்படியே இருக்குன்னா பாருங்களேன்! நீங்க எங்கேயோ போயிட்டீங்க டாக்டர்! இதுக்கு முன்னால திராவகம் பட்ட மூஞ்சியெல்லாம் திராட்சைப் பழமாட்டம் காய்ச்சித் தொங்கிட்டு இருக்கும்... எப்படி டாக்டர் ஒரு தடயமே இல்லாம இப்படி ஒரு ட்ரீட்மெண்ட் கொடுத்தீங்க? ரொம்ப கிரேட் சார்!" என்று உருக்கமாகப் பேசி, நெருக்கமாக வந்து மாலையை கோபாலனுக்குப் போட, லாரி தொண்டர்கள் "டாக்டர் கோபாலன் வாழ்க, வாழ்க" என்று கோஷமிட, கோபாலன் திக்குமுக்காடினார்.


இருந்தாலும் டாக்டருக்கு அதிகமாக சந்தோஷப்பட முடியாமலிருந்தது. இதில் ஏதோ விபரீதம் இருப்பதாக உதைத்துக் கொண்டிருந்தது.

"தீவிளியன்னிக்குக் கூட அந்த சிறுக்கி வூட்டிலேதான் படுக்கணுமாய்யா.... எனக்கு வந்த கோவத்திலே தூங்கிட்டுக் கிடந்த உன் மூஞ்சிமேலே மெய்யாலுமே எதனாச்சும் ஆசிட்டை வாங்கி ஊத்தியிருக்கணும்... ஏதோ கறிக்கு அரைச்ச வைச்ச மசாலாத் தண்ணியை ஊத்திட்டு வந்தேன்னு சந்தோஷப்படு.... அடுத்த வாட்டி ஆசிட்தான், ஜாக்கிரதை!"

இன்பராசனின் 'பெரிய வீடு' அவரை எச்சரித்துக் கொண்டிருந்தது உங்கள் காதில் விழுந்திருக்கலாம்.... மறந்தும் யாரிடமும் சொல்லி வைக்கப் போகிறீர்கள்... மறதி மருத்துவருக்கு 'டாக்டரா' பட்டம் கிடைத்தாலும் கிடைக்கலாம்... நாம் ஏன் கெடுக்க வேண்டும்?



— காரை எஸ். அருண்





— எஸ். கோவிந்தன்



— வி. ரேவதி

— ஏ.பி. குணராஜு



— அம்பை தேவா


— கே. விஸ்வநாதன்

— இ. அருணாசலம்


— எஸ். கோவிந்தன்



சோலை நடுவே சர்க்கரை ஆலை!



● கரும்பு லோடுடன் லாரி...



● தரணி சுகர்ஸ்....

● அமெரிக்கா வாழ் தமிழர்கள், பழனி ஜி. பெரியசாமி தலைமையில் தொடங்கியுள்ள சர்க்கரை ஆலை என்பதால்தானோ என்னவோ, தரணி சர்க்கரை ஆலையில், எல்லாம் அமெரிக்கப் பெயர்கள்! 'அமெரிக்க அவென்யூ' என்று சாலை. 'கொலம்பியா', 'மேரிலாண்ட்' என்றெல்லாம் ஆலை வளாகப் பகுதிகள்.

ஆனால் சக்கையாகப் பிழியப் படும் கரும்பு மட்டும் என்னவோ தமிழக மண்ணில் விளைந்ததுதான். ஆலை வளாகத்தின் வெளியே சாரி சாரியாகக் கரும்பு லோடு ஏற்றிய லாரிகள், தங்கள் முறை வரக் 'கியூ'வில் காத்திருக்கின்றன.

''தாள் கணக்கிலா?''

''இல்லை'' என்கிறார் கரும்பு மேலாளர் கிருஷ்ணமூர்த்தி. ''ஆலை சுற்று வட்டாரத்தில் கரும்பு விளையும் பகுதிகளுக்கும் எங்களுக்கும் தொடர்பு வசதி உண்டு. அதனால் தேக்கம் ஏற்படாமல் கவனித்துக் கொள்ள முடியும்.''

லாரியில் இரும்புக் கம்பி போட்ட பிறகுதான் கரும்பு லோடு ஏற்றுகிறார்கள். அதனால் குறிப்பிட்ட இடத்தில் லாரி வந்து நின்றதும், 'கிரேன்' கொக்கி போட்டு இரும்புக் கம்பியோடு சேர்த்துக் கரும்பு லோடை அலாக்காகத் தூக்கி பிளாட்பாரத்தில் வைக்க, எடை கணக்கிடப்பட்டுப் பதிவாகிறது.

அப்புறம் கன்வேயர் பெல்ட்டில் கரும்பு நகர, தாலியங்கு இயந்திரங்களின் இடையில் சிக்கி, நார் நாராகப் பிழியப்படுகிறது.

சக்கையுடன் நீர் கலந்து அடுத்த கட்டத்துக்கு வர, வெளியே வருவது பகாஸ். மஞ்சள் நிறத்தில் பிசிறு பிசிறாக உள்ள இது, காகித மாக உருவாகப் பேப்பர் தொழிற் சாலைகளுக்கு அனுப்பப்பட்டு விடுகிறது.

சாறு என்ன ஆகிறது? 95 சதவீதத்துக்கும் அதிகமான சர்க்கரை கரும்பிலிருந்து பிழியப் பட்டு விட்டது. (வெல்லம் உற்பத்தியில் 65 சதம்தான்.) கரும்புச் சாறு பாய் லர்களில் சூடேற்றப்பட்டு, சுண்ணாம்பு நீரும், சல்ஃபர்-டை-ஆக்ஸைடும் கலக்கப்பட்டு, அசுத்தங்கள் நீக்கப்பட்டு.... எட்ஸெட்ரா, எட்ஸெட்ரா.

கிடைக்கும் சிரப்பிலிருந்து சர்க்கரை பிரித்தெடுக்கப்படுவது

''செண்ட்ரிஃபியூகல்'' முறையில். ''அப்படியென்றால் என்ன?'' என்பது, கைகோத்துத் தட்டாமாலை சுற்றும் சிறுமிகளுக்குத் தெரியும். சுழல் வேகத்தில் சர்க்கரை தனியே பிரிந்து வருகிறது. ஒரு தடவை, இரண்டு தடவை என்று மிச்சம் மீதி வைக்காமல் பிரித்தெடுக்கப்படும் சர்க்கரை, ஓர் அகன்ற குழாய் வாயிலிருந்து கொட்ட, அதில் சாக்குப் பை பொருத்தினால், நூறு நூறு கிலோவாகச் சர்க்கரை மூட்டைகள் தயார்! கிடங்கிலே கொண்டு போய் அடுக்க வேண்டியதுதான்!

எல்லாம் தானியங்கு முறையில் ''ஜீம் பூம்பா'' மந்திரத்துக்குக் கட்டுப்பட்டது போல் நடக்கிறதேயொழிய, கண்ணால் உருமாற்றங்களை நாம் பார்ப்பதென்பது மிகக் குறைவு. மொத்த வேலையும் முடிந்து, ஆறடிக் கரும்பு வெள்ளை வெளேர் சர்க்கரைத் துகள்களாக மாற எடுத்துக் கொள்ளும் காலம் சரியாக ஒருநாள் - இருபத்தி நாலு மணி நேரம்!

வருஷத்தில் ஆறு முதல் எட்டு மாதங்கள் வரைதான் சர்க்கரை ஆலைகள் இயங்கும். மற்ற மாதங்களை, இயந்திரங்களைச் சுத்தம் செய்து, பழுது பார்த்துச் சீரான நிலையில் வைத்திருக்கப் பயன்படுத்துகிறார்கள். சீசன் ஆரம்பமாகி விட்டால் இயந்திரங்கள் நிற்கா மல் 24 மணி நேரமும் இயங்க வேண்டியதுதான். 6 மாதமோ, 8 மாதமோ ஓய்ச்சல் ஒழிவின்றிச் சுழல வேண்டியதுதான்.

''மூலதனம் எவ்வளவு தேவை?''

''ஒரு நாளைக்கு 2500 டன் கரும்பு பிழியும் திறனுடைய ஓர் ஆலை நிறுவ 50 கோடி ரூபாய்! உற்பத்தியில் அறுபது சதத்தை அரசு நிர்ணயித்துள்ள விலையில் (லெவி) அதற்கே தந்துவிட வேண்டும். நாற்பது சதத்தைத்தான் வெளி மார்க்கெட்டில் விற்கலாம். ஆனால் ஆலையின் ஆரம்பக் கட்டத்தில் - ஆறேழு ஆண்டுகள் வரை இதில் நிறையச் சலுகைகள் உண்டு.''

''சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பெரும் பிரச்னையாகிறதே?''

''அதுதான் இல்லை. கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு அதுவும் கரும்பு வயல்களுக்கே பாய்ந்து விடுகிறது!''

''மின்சாரம்? மின்வெட்டு?''

''முழுக்க முழுக்க மின்வாரியத்தையே நம்புவதில்லை. எங்களுக்குத் தேவையான மின்சாரத்தை நாங்களே உற்பத்தி செய்து கொள்கிறோம். கரும்புச் சக்கையை பாய்லரில் எரித்து, நீராவி உற்பத்தி செய்து அதனால் டர்பைனை இயக்கி... இந்த வளாகத்துக்குள்ளேயே அனல் மின் நிலையமும் உள்ளது.''

''பாய்லர் - அனல்'' என்றெல்லாம் சொல்கிறார்களே தவிர, சுற்றுச்சூழல் முழுவதும் பசுமை, பசுமை! மனதுக்குக் குளுமை, குளுமை!

கிழங்குச் சர்க்கரை!

● இந்தியா முழுக்க 392 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இவற்றில் ராஜஸ்தானில் கங்கா நகரில் உள்ள சர்க்கரை ஆலை கரும்பிலிருந்து மட்டுமின்றி, சர்க்கரைக் கிழங்கி(ஷுகர்பீட்)லிருந்தும் சர்க்கரை உற்பத்தி செய்கிறது. பூமிக்கடியில் விளையும் இந்தக் கிழங்கு இரண்டு கிலோ வரை எடை இருக்கும். ஐரோப்பிய நாடுகளில் சர்க்கரைக் கிழங்கிலிருந்து கணிசமான அளவு சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது.

கரும்புக்குச் சலுகை!

● கரும்பு விவசாயியின் காட்டில் சலுகை மழைதான். கரும்புக்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச விலை, அதற்கு மேல் மாநில அரசு அறிவிக்கும் பரிந்துரை விலை. இதுதவிர, கரும்பைப் பயி



● ரேஷனில் சர்க்கரை : க்...ர்ர்!



ரிட்ட இடத்திலிருந்து, ஆலைக்குக் கொண்டுவரப் போக்குவரத்து மானியம், அப்புறம் பயிரிடப்படும் கரும்பு ரகத்திற்கேற்ப ரக மானியம். கிணற்றில் ஆயில் இஞ்சின் மட்டும் பொருத்தி, ஆண்டு முழுவதும் நீர்ப்பாசனம் செய்யும் விவசாயிகளுக்குச் செலவை ஈடுகட்டச் சிறு மானியம் என இன்ன பிற மானியங்களையும் சேர்த்தால் ஒரு டன் கரும்புக்கு ரூ. 465 முதல் 520 வரை கிடைக்கும்!

● முழுமையான கரும்புச் சாகுபடி செய்வது தவிர, தென்னங்கன்றுகளுக்கு இடையே ஊடுபயிராகக் கரும்பு பயிரிடுவது சமீபகால உபரி வருமான டெக்னிக்.

நல்ல மகசூல் தரும் கரும்பு வகைகள் கோ. க. 671, கோ 8021, கோ. க. 8001, கோ. க. 8002 ஆகியவை.

● கரும்பின் கணுத்துண்டுகளை, உரமிட்ட மண் கொண்ட பாலிதீன் பைகளில் வைத்து நீர் தெளித்தால் கிடைக்கும் கன்றுகளுக்கு (நாற்றுகள் என்றும் குறிப்பிடுகின்றனர்.) இன்று ஏகப்பட்ட டிமாண்ட். வேலையில்லாத பி.எஸ்ஸி அக்ரி'கள் கவனிக்க.

● கரும்பு அறுவடை முடிந்தபின், அதன் தோகைகளைக் கொண்டு, கம்போஸ்ட் உரம் தயாரிக்க முடியும்.

● செங்கரும்பு மென்மையானது; பொங்கல் சமயத்தில் தின்பதற்கு மட்டுமே இது பயன்படுகிறது. வெண் கரும்புதான் சர்க்கரைக்கு ஜீவாதாரம்.

ரேஷன் சர்க்கரை!

● சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் சர்க்கரையில் அறுபது சதவீதம் லெவி சர்க்கரையாக அரசு எடுத்துக் கொண்டு, ரேஷன் கடைகள் மூலமாகக் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

மத்திய அரசு தமிழ்நாட்டுக்கென்று மாதம்தோறும் சுமார் 23 ஆயிரம் மெட்ரிக் டன் சர்க்கரையை ஒதுக்குகிறது. இதைத் தவிர, பண்டிகைக் காலங்களில் மூவாயிரத்து நானூறு டன் சர்க்கரையைக் கூடுதலாக ஒதுக்குகிறது. ஆயினும் என்ன? எந்த ரேஷன் கடையில் மாதாந்திரக் கோட்டாவை ஒழுங்காகக் கொடுக்கிறார்கள்?

தவிர, சர்க்கரை விலை வேறு அவ்வப்போது ஏறிக் கொண்டு இருக்கிறது.

1978 இல் கிலோ சர்க்கரை விலை ரூ. 2.30; இன்று ரூ. 8.30!

– எஸ். சந்திரமௌலி

முன்கதைச் சுருக்கம் :

குலோத்துங்கன் பட்டமேற்றதும் சாளுக்கியப் போரைத் தொடரச் சென்று விட்டதால் துணிவு பெற்ற பாண்டிய மார்த்தாண்டன், மதுரையை மீட்கவும் மாறவர்மனை மன்னனாக்கவும் பல சூழ்ச்சிகள் செய்து, முதற்படியாக மேலைமங்கலத்தைக் கைப்பற்றுகிறான். சோழ இளவரசி அம்மங்கை தேவியைக் கடத்திச் செல்லும் மாறவர்மனிடமிருந்து அவளை மீட்கும் அரையன் மதுராந்தகன், மேலைமங்கலத்தையும் மீட்டு, இளவரசியின் காதலையும் இளவல் விக்கிரமச் சோழனின் நட்பையும் பெறுகிறான். பின் பொதிகைக் கூற்றத்திலிருந்து பாண்டியன் மகள் கார்குழலியை மீட்டு, மாறவர்மனுக்குப் போட்டியாக மதுரை அரியணை உரிமைக்கு அவளை உருவாக்குகிறான். மாறுவேடத்தில் சேர நாடு சென்று பாண்டியருக்கு உதவ முற்படும் சேரனையும் ஈழத்தவரையும் தயங்கி, தாமதிக்க வைக்கிறான். கார்குழலியைக் கொல்ல ஈழத்திலிருந்து வரும் மார்க்கியனையும் சிக்கவைக்கிறான். கார்குழலிக்கும் சோழ இளவரசன் விக்கிரமனுக்கும் இடையே காதல் மலர்கிறது.

பின்னர் அரையன், சாளுக்கிய எல்லைக்குச் சென்று ஜெயதுங்கனிடமிருந்து சோழ ராஜ ராஜனை மீட்டு, நவிலைக் கோட்டையையும் ஆயிரம் போர்க் களிறுகளையும் சோழர் படைகளிடம் சிக்க வைக்கிறான். சாளுக்கியப் போரில் வெற்றி பெற்ற சோழர் படை தெற்கே திரும்புகிறது.

ஈழத்து இளவரசன் பராக்கிரமபாகு, கொங்குப் பாண்டிய இளவல் குலசேகரனை, மாறவர்மனுக்குப் பதிலாக மதுரை அரியணையில் அமரலாம் என ஆசை காட்டி ஈழத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் இறங்குகிறான். ஈழத்து இளவரசி அஞ்சனாதேவியிடம் குலசேகரன் மயங்குகிறான். பாண்டியரிடையே இந்த மித்ரபேதத்துக்கெல்லாம் மாறுவேடத்தில் உள்ள அரையன் மதுராந்தகனே காரணமாகிறான். பாண்டியரின் முயற்சிகள் பலவீனப்பட்டுப் போகின்றன.

கோட்டாற்றின் கரையில் சோழர் - பாண்டியர் போர் துவங்கி, முதல் நாள் போரில் கொங்கு மன்னன் வீர மரணமடைகிறான். கொற்கை, சோழர் கடற்படைத் தலைவன் வசமாக, கொங்கு இளவல் குலசேகரன், அஞ்சனாதேவியுடன் ஈழத்துக்குத் தப்புகிறான்.

சோழர் படை விக்கிரமன் தலைமையில் கோட்டாற்றிலும், குலோத்துங்கன், காலிங்கராயன் அரையன் ஆகியோர் தலைமையில் சேர நாட்டிலும் எதிரிகளைச் சந்திக்கிறது.

பாண்டியன்

44. சேரன் தளம், சோழன் களம்

'ஹோ' வென்ற பேரிரைச்சலுடன் எழுந்து தாக்கிய மேலைக் கடலின் பெரும் அலைகள் சேரநாட்டின் கரையில் மோதி மோதி எச்சரிக்க முயன்று கொண்டிருந்தன. கருக்கல் நேரத்தில் மங்கலான ஒளியை வீசிய நிலவையும் குறுக்கே பாய்ந்த மேகங்கள் மறைத்து விட்டதால் விழிஞத்தின் அந்த கடற்கரைப் பகுதியில் இருள் மண்டிக் கிடந்தது. கடல் நீரை உள்ளே புகவிட்டு நீபகற்பமாக நீண்டு வளைந்திருந்த அந்தப் பகுதியில் நெருக்கமாக நின்றிருந்த தென்னைகள் அந்த இருளை இன்னும் அதிகப்படுத்தியிருந்தன. ஒருசில, வளைந்து நீண்டு நீர்ப் பரப்பை எட்டிப் பார்க்கவும் முயன்று கொண்டிருந்தன.





மகள்

ஆங்காங்கு ஒன்றிரண்டு சேர வீரர்கள் மரங்களின் அடிவாரத்தில் சாய்ந்து, அரை உறக்கத்தில் கிடந்தனர். இருளில் நிதானமாக நடந்த அரையன், அலைவீசிய இடத்திற்குச் சற்றுத் தள்ளியிருந்த மரம் ஒன்றின் அருகே நின்றான். அவன் கையிலிருந்த நீண்ட கழியின் நுனியில் எண்ணெயில் நனைக்கப்பட்ட துணியொன்று சுற்றப்பட்டுத் தயாராக இருந்தது. வானத்தையும் கடற் பரப்பையும் மாறி மாறிப் பார்த்தவன், குறிப்பிட்ட நேரம் நெருங்கி விட்டதை உணர்ந்தான். அவன் விழிகள் கடற்பரப்பில் திடீரென மிதக்க ஆரம்பித்த விளக்கொன்றைக் கண்டதும் மலர்ந்தன. அந்த விளக்கும் கரைப் பகுதியை நோக்கி வேகமாக நகரத் தொடங்கியது. தொடர்ந்து, ஒன்று இரண்டு என்று ஆரம்பித்து வரிசையாகப் பல விளக்குகள் வரத் தொடங்கின.

அவை சற்று நெருங்கும் வரை நிதானித்த அரையன், தயாராக வைத்திருந்த வன்னி மரத் துண்டுகளைக் கொண்டு கழியின் நுனியிலிருந்த துணியைப் பற்றவைத்தான். திகுதிகுவென்று பெரும் பந்தமாக எரிந்த அதனை அசைத்தவன், எதிரே கடலில் தெரிந்த ஒரு விளக்கும் சங்கேதமொழியில் பதிலுக்கு அசையவே, திருப்தியுடன் திரும்பினான். விழித்தெழுந்து பந்தத்தைக் கண்டு ஓடி வந்த இரு காவலர்களை அந்தக் கழியினாலேயே சமாளித்து வீழ்த்தினான்.

பந்தத்தை மணலில் தேய்த்து அணைத்தவன், மரத்தில் சாய்ந்து நின்றான். விளக்கொளிகள் அருகே நெருங்க நெருங்க பெரும் போர்க்கலங்களின் வடிவங்கள் மெல்லப்

இஷ்வக்சேனன்

அருள்வாக்கு



சீர்ப்பமாக நாம் தாயாரிடம் வைக் கப்படுவதிலிருந்து கடைசியில் தகனமா கிறவரையில் நம்மைச் சுத்தப்படுத்த, சாஸ்திரங்களில் நாற்பது ஸம்ஸ்காரங்கள் சொல்லி இருக்கிறது. அவற்றோடு அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், சௌ சம், இந்திரிய நிக்ரஹம், இவையும் நம்மால் அநுஷ்டிக்கப்பட்டால் நம் அழுக்குகள் எல்லாம் போய், 'நாம் உண் மையில் யார்? ஸ்வாமி என்பவர் யார்?

புலப்பட ஆரம்பித்தன. கரைக்குச் சற்றுத் தூரத்தில் நின்ற கலங்களிலிருந்து, பெரும் படகுகள் இறக்கப்பட்டு, தளத்திலிருந்த வீரர்கள் அதில் குதித்தனர். வரிசையாகக் கரையை நோக்கி விரைந்த படகுகள், மண லில் செருகி நின்றன. வீரர்கள் இறங்கிய வுடன் பெரும் உருளைகளும், மரச் சட்டங் களும் சக்கரங்களும் தனித்தனியாக இறக்கப் பட்டு, கரையிலேயே அவை வீரர்களால் பொருத்தப்பட்டன.

முகப்பில் வந்த பெரும் படகிலிருந்து ஆஜானுபாகுவாக இறங்கிய ஸ்ரீவல்லபர், அரையன் நின்றிருந்த இடத்தை நோக்கி நடந்தார். அவர் உறுதியாக எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் சேர நாட்டின் மீது விழுந்த அடி என்பதை விடிந்த பின் அரையன் புரிந்து கொண்டான்.

ஸ்ரீவல்லபரை நெருங்கிய அரையனை அவரது வெண்கலக் குரல் வரவேற்றது.

''வா, வா மதுராந்தகா. எப்படியிருக் கிறாய்?''

''நலமாக இருக்கிறேன் படைத்தலை வரே!'' வணங்கினான் அரையன்.

''சரி. தாக்குதலை எப்போது துவங்க வேண்டும்?''

''கருக்கல் முடியுமுன் தலைவரே.''

''மன்னரிடமிருந்து உத்தரவு வந்து விட்டதா?''

''வந்து விட்டது'' என்ற அரையன், கச்சையிலிருந்து ஓலையொன்றை எடுத்து நீட்டினான். ஓலையைப் பெற்றுக் கொண்ட ஸ்ரீவல்லபர், அந்த அரையிருளிலும் அதை இரண்டே நொடிகளில் படித்து முடித்தார். ஸ்ரீ வல்லபரின் வயதுதான் அதிகமே தவிர, உடலுறுதியும் கண் பார்வையின் கூர்மை யிலும் சற்றும் குறைவில்லையென்பதைப் புரிந்து கொண்டு வியந்தான் அரையன்.

ஸ்ரீ வல்லபர், அவன் வியப்பைக் கவ னியாதவர் போல, ''மதுராந்தகா, காலிங்க ராயருக்குச் செய்தி அனுப்பியாகி விட் டதா?'' என்று கேட்டார்.

''குருதேவர் நேற்று முன்னிரவிலேயே அனைத்தையும் விளக்கியிருப்பார். படைத் தலைவர் இத்தனை நேரம் மலைச் சரிவு துவங்கும் கிழக்கெல்லையில் காத்திருப் பார்.''

''ஆகா, பட்டரும் போரில் கலந்து கொள்கிறாரா?'' - ஸ்ரீ வல்லபரின் முகத்தில் அதீதமான மகிழ்ச்சி தெரிந்தது.

''ஆம் தலைவரே. ஆனால் அவர் விழிஞத்திற்கு வரவில்லை.''

ஸ்ரீ வல்லபரின் முகம் சற்றுச் சுருங்கி யது. ''ஏன்?'' - கேள்வியொன்றும் எழுந்தது அவரிடமிருந்து.

''அவர் இந்நேரம் சேரன் தலைநகரை நெருங்கியிருப்பார்'' என்றான் அரையன்.

''ஆகா, ஆகா!'' உற்சாக மிகுதியில் அரையனின் முதுகில் பேயறை கொடுத்து சிலாகித்தார் ஸ்ரீ வல்லபர். 'இவரது இந்தப் பழக்கம் தெரிந்திருந்தும் நகர்ந்து நிற்காமல் போனோமே' என்று புன்னகையுடன் எண் ணிய அரையன், ''தலைவரே, இனி நாம் கிளம்பலாமல்லவா?'' என்று கேட்டான்.

''தாராளமாக'' என்ற ஸ்ரீவல்லபர், வீரர் களின் பக்கம் திரும்பி மடமடவென்று உத்தரவுகள் பிறப்பித்தார்.

முன்னணியில் வேவு பார்க்கும் பிரிவைத் தொடர்ந்து, உருளைகளில் எரி யம்புகளை வீசும் பொறிகள், மணலில் உருண்டன. மரங்களுக்கிடையே சென்ற வீரர்கள் கரங்களில், கட்டுக் கட்டாக வேல் களும் விற்களும் நீண்ட அம்புகளும் இடை யில் வாட்களும் மின்னின.

சேரனின் கலங்களிருந்த பகுதியை ஸ்ரீ வல்லபர் அடையவும் கிழக்கு வெளுக்கவும் சரியாயிருந்தது. கடல் வளைந்து உட்புகுந்து நின்ற அப்பகுதியில் வரிசையாக நின்ற சேர வின் போர்க் கலங்களில் காவலிருந்த மாலு மிகள், திடீரென்று இக்கரையில் ஒலித்த ஆர வாரத்தையும் பனிச்சென்று முகப்பில் தெரிந்த புலிக்கொடியையும் வீரர்களையும் கண்டு திகைத்தனர். மேல்தளத்திலிருந்த அம்பு வீசும் பொறிகளைக் கரையை நோக்கித் திருப்பவும் செய்தனர்.

கரையில் சற்று இடைவெளி விட்டு வரி சையாக நிறுத்தப்பட்ட பொறிகளிலிருந்து, சோழ வீரர்கள் எரியம்புகளைக் கலங்களின் பாய் மரங்களைக் குறிவைத்து வீசத் தொடங்

பரம சத்தியம் என்பது என்ன?' என்பதை எல்லாம் அறிகிற பக்குவம் உண்டாகும். பிறர் பொருள் மீது ஆசைப்படாமலிருப்பது அஸ்தேயம். 'சௌசம்' என்பது 'சுசி' என்பதிலிருந்து வந்தது. 'சுசி' என்றால் சுத்தம். வெளியிலே சுத்தமாக, தூய்மையாக, ஆசாரமாக இருந்தால் அதுவே உள் தூய்மைக்கு உபகாரம் செய்யும். நீராடுவது, மற்ற மடி ஆசாரங்கள் சௌசத்தின் கீழ்வரும். இந்திரிய நிக்ரஹம் என்பது ரொம்பவும் முக்கியம். சரீர சந்தோஷத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்து எதை வேண்டுமானாலும் பார்ப்பது, எதை வேண்டுமானாலும் கேட்பது, எதை வேண்டுமானாலும் தின்னுவது, எதை வேண்டுமானாலும் பேசுவது என்றில்லாமல், இவற்றையெல்லாம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது இந்திரிய நிக்கிரகம் - புலனடக்கம். அதாவது யாராக இருந்தாலும் ஆசையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஆசை போகாமல் எந்த ஆத்மசம்பத்தும் உண்டாகாது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

கவே, முதலில் நின்ற கலம் பற்றி எரியத் தொடங்கியது. தளத்தில் அங்குமிங்கும் ஓடிய வீரர்கள் நெருப்பை அணைக்கவும் தாக்குதலைச் சமாளிக்கவும் இரு பிரிவுகளாகப் பிரிந்தனர். தளத்தின் மீதிருந்த பொறிகளை இயக்க வந்த சேர வீரர்களைக் குறிவைத்து மரங்களின் மறைவுகளிலிருந்து எய்யப்பட்ட அம்புகள், அவர்களைச் சாய்த்துக் கொண்டே இருந்தன.

கரையோரமாகவே பொறிகளை இயக்கி நகர்த்திய சோழ வீரர்கள், எரியம்புகளை அடுத்த வரிசையில் நின்ற கலங்கள் மீதும் வீசவே, எல்லாக் கலங்களும் பற்றி எரியத் தொடங்கின. பெரும் சப்தத்துடன் வெடித்துச் சிதறிய பாய்மரங்கள் நீரிலும், பக்கத்தில் நின்ற கலங்களின் மீதும் எரிந்து கொண்டே விழுந்ததால் துறைமுகப் பகுதியையே நெருப்பின் ஜ்வாலைகள் விழுங்கத் தொடங்கி விட்டது போலாயிற்று.

சேரர் கலத்திலிருந்த உபதலைவன், நங்கூரத்தை எடுத்து கலங்களை நீர்ப்பரப்பின் நடுப்பகுதிக்குச் செலுத்த உத்தரவிட்டான். தனது கலத்துடன் இன்னும் தீப்பிடிக்காத மற்ற கலங்களையும் நகர்த்தி, தீபகற்பத்தின் வாயிலை அடைய எண்ணிய அவன், எதிரே நோக்கியதும் திகைத்தான். கடல்நீர் உட்புகும் வழியில் சோழரின் பெரும் போர்க் கலங்கள் நான்கு வழியை முழுதுமாக அடைத்து நின்றிருந்தன!

அந்தக் கலங்களைக் கடந்து இனி கடலை அடைவதோ, அந்த சேரர் கடற்படைப் பிரிவைக் காப்பாற்ற முயற்சி செய்வதோ சாத்தியமில்லை என்பதைப் பூரணமாக உணர்ந்த உபதலைவன், நேருக்கு நேர் நின்று போராடத் தீர்மானித்தான். அவன் கலம் சற்றுத் தயங்கியதையும் பின் வேகமாகத் தங்களை நோக்கி வந்ததையும் கவனித்து, அவன் உத்தேசத்தைப் புரிந்து கொண்ட சோழர் கலங்கள் இரண்டு, முன்னால் சென்று அவனை எதிர்கொண்டன. சற்று நெருங்கியதும் இடைவெளி கொடுத்து சேரன் கலத்தை உட்புகவிட்ட சோழப் போர்க் கலங்கள், வந்த வேகத்தில் நன்றாக நடுவில் புகுந்து விட்ட சேரர் கலத்தை இருபுறங்களிலும் தாக்கத் தொடங்கின.

இனி தப்புவதோ உயிர் பிழைப்பதோ துர்லபமென்று உணர்ந்த சேரர் உபதலைவனும் அவன் வீரர்களும் ஆவேசமாகத் தாக்குதல்களை எதிர்க்கத் தொடங்கினர்.

நீரில் நின்ற கலங்களை சோழப் போர்க்கலங்கள் கவனித்துக் கொள்ளும் என்பதைப் புரிந்து கொண்ட ஸ்ரீவல்லபர், தமது படை வீரர்களை அணிவகுத்து துறைமுகத்தின் உள்ளே விரிந்த கரைப் பகுதியில் உட்புக உத்தரவிட்டார்.

பொறிகளை முன்னால் தள்ளிக் கொண்டு சென்ற வீரர்கள் சேரர் புரவிப் படையை முதலில் எதிர்கொண்டனர். ஐந்தடி உயரத்திற்கு மேலேயே அம்புகளை விசிறுமாறு பொறிகளை இயக்கிய வீரர்கள் புரவிகளை விடுத்து அவற்றில் வந்த வீரர்களை மளமளவெனச் சாய்க்கவே, அந்த புரவிகள் சோழ வீரர் கைவசமாயின. போதாக்குறைக்கு கலங்களிலிருந்து இறக்கப்பட்டு, அருகிலிருந்த பட்டிகளில் அடைக்கப்பட்டிருந்த புரவிகளையும் சோழ வீரர்கள் கைப்பற்றினர். அதிகம் பழக்கப்படாத முரட்டு அராபியப் புரவியொன்றும் ஸ்ரீவல்லபரின் பிடியில் சிக்கியது.

கரகரவெனச் சுழன்ற அரையனின் நீண்ட வாள் சேர வீரர்களை மளமளவெனச் சரிய வைத்தது. நாலாபக்கமும் சுழன்ற அந்த வாளின் வீச்சையும் அதன் வேகத்தையும் கண்ட சேர வீரர்கள் திகைத்தனர். வாள் வீச்சில் எத்தனை வகைகளிருக்க முடியும், அது எத்தனை வேகத்தில் உயிர்களைக் குடிக்க முடியும் என்பதைச் சேர வீரர்கள் அன்று கண்டனர்.

சேரர் கடற்படைத் தலைவன் கங்காதரன் தன் புரவியில் விரைந்து வந்து சேர்ந்த போது, ஸ்ரீவல்லபரின் அகரச் சிரிப்பு அவனை வரவேற்றது.

சற்றுத் தொலைவில் இந்திரஜாலம் போல் வாளை வீசிக் கொண்டிருந்த சமுத்திரபந்தன், உரு மாறியிருப்பதையும், விழிஞத்தின் இந்த நிலைக்கு அவன்தான் காரணமென்பதையும் உணர்ந்தான் கங்காதரன். அதோடு, முன்தினம் கணவாய் வழியே சென்ற ரவிசேகரனையும் அவன் வீரர்களை

யும் காலிங்கராயனுக்குப் பலியிட்டவன் இவன்தான் என்று சற்று முன்னால் கிடைத்திருந்த செய்தியும் கங்காதரனது சித்தத்தில் பெரும் ஜ்வாலையைக் கிளப்பி விடவே, அவன் ஸ்ரீ வல்லபரை விடுத்துத் தன் புரவியை நேராக அரையனை நோக்கிச் செலுத்தினான். அரையன் முகத்தில் முறுவலொன்று அரும்பியது.

கங்காதரனின் வலது கரம் வாளை இடது கைக்கு மாற்றிக் கொண்டு, செண்டாயுதத்தை உருவி எடுத்தது. அரையனை நெருங்குமுன்பாகவே கடற்படைத் தலைவன் கன வேகத்தில் வீசிய அந்தச் செண்டு, அரையனின் நீண்ட வாளின் சுழற்சியில் பட்டு, இரண்டாக உடைந்து சிதறியது. ஸ்ரீ வல்லபரின் பெரும் நகைப்பு சுற்றி நின்ற, வீரர்களின் ரத்தத்தை உறைய வைத்தது. அவர் 'ஆகா! ஆகா!' என்று சிலாகித்து வீசிய வாள், சேரரிடையே பெரும் சேதத்தை விளைவித்தது.

தன் செண்டு இதுவரை கண்டறியாதபடி பயனற்றுப் போனதைக் கண்ட கங்காதரன், நிதானத்தை அறவே இழந்து வாளுடன் அரையன் மீது பாய்ந்தான்.

அடுத்த அரை நாழிகையில் தன் வாள் வீச்சும் செண்டாயுதத்தைப் போலவே பயனற்றுப் போவதைக் கண்டு கங்காதரன் வாழ்வில் முதல் முறையாக அச்சத்தின் வசப்பட்டான்.

எப்படியும் வட எல்லையிலிருக்கும் படைப் பிரிவு வந்து சேர்ந்து விட்டால் சோழரின் இந்தச் சிறிய படை அதிக நேரம் தாக்குப்பிடிக்க இயலாது எனத் தீர்மானித்த கங்காதரன், உக்கிரமாகத் தாக்க ஆரம்பித்தான்.

அவன் எண்ணியபடி வட எல்லையிலிருந்த படைகள் துறைமுகத்தை நோக்கி விரையத்தான் செய்தன. ஆனால் கிழக்கு எல்லைப்புற மலைச் சரிவிலிருந்து அதிவேகமாக இறங்கிய சோழர் படைத்தலைவன் காலிங்கராயனின் படை அதை இடைமறித்துத் தாக்கத் தொடங்கியது. வாளை வீசியபடியே துறைமுகப் பாதையை நோக்கிய கங்காதரன், அந்தப் பாதையின் முகப்பிலும் போர் மும்முரமாக நடப்பதைக் கண்டு திகைத்தான். அரையனின் வாளுடன் உரசிய தன் வாளை உருவி விடுவித்துக் கொண்டவன், தன் புரவியைத் திருப்பி, துறைமுகப் பாதையை நோக்கி விரைந்தான்.

பாதையின் முகப்பை அடைந்தவன் பிரமித்தான். சாளுக்கிய விக்கிரமாதித்தனை ஓட ஓட விரட்டியடித்தவனும், தன் உப தலைவனையும் அவனுடன் சென்ற வீரர்களையும் ஒன்றரை ஜாமப் போரில் அழித்தவனுமான சோழர் படைத்தலைவன் காலிங்கராயன், தன்னை நோக்கி வருவதைக் கண்ட அவன் தலை சுழன்றது!

இனி விழிஞத்தைக் காக்க சேர நாடே கவசம் பூண்டு வந்தாலும் முடியாது என்பது அவன் சித்தத்தில் உறைக்கவே, பெரும் ஆத்திரத்துடன் காலிங்கராயனை எதிர்த்தான்.

> "வேலை கொண்டு விழிஞமழித்ததும்
> சாலை கொண்டதுந் தண்டு
> கொண்டேயன்றோ?"

- எனப் புகழ்மிக்க இரண்டு வரிகளைக் கலிங்கத்துப் பரணியில் சேர்க்கக் காரணமாயிருந்த அந்த சோழர் படை, கடுமையான போருக்குப் பின்னரே விழிஞத்தை வென்றது. பகல் முழுதும் உக்கிரமாகத் தொடர்ந்த போர் மாலையில்தான் முடிந்தது.

சமுத்திரபந்தனாக சேரர் படைத்தலைவனைச் சந்தித்த அதே மாளிகையில், ஸ்ரீவல்லபரின் உற்சாக அறைக்கு அஞ்சி சற்றுத் தள்ளியே நின்றிருந்த அரையன், இந்தப் போரின் வெற்றிக்காகப் பல காலம் முன்பே தான் வகுத்த திட்டத்தையும், உண்மையைக் கூறியே கங்காதரனைக் குழப்பியதையும் விவரித்துக் கொண்டிருந்தான்.

வாயிலில் நின்ற வீரன் உள்ளே நுழைந்து, காலிங்கராயனை வணங்கி, "நம் வீரன் ஒருவன் கோட்டாறிலிருந்து வந்திருக்கிறான் பிரபு" என்றான்.

"வரச் சொல்!"

உள்ளே நுழைந்த வீரனது கரங்களிலும் முகத்திலும் இன்னும் ஆறாத காயங்கள் ஆபரணங்களாகத் தெரிந்தன.

"அரையன் மதுராந்தகரை படைப்பிரிவொன்றுடன் நாளை மலைக் கணவாயில் காத்திருக்குமாறு பணித்தார் இளவரசர்." - செய்தியைக் கூறியவன் ஓலையையும் நீட்டினான்.

ஓலையைப் பிரித்துப் படித்த காலிங்கராயனின் விழிகள் அரையனை ஏறெடுத்து நோக்கின. "மதுராந்தகா! கோட்டாற்றுப் போர் முடிகிறது. அதை முடித்து வைக்க உன்னை அழைத்திருக்கிறார் இளவரசர். சென்று வா." என்றான்.

மாறவர்மனின் இறுதிப் போர் சேர நாட்டுக் கணவாயில் நடக்குமென்பதை உணர்ந்ததால் ஸ்ரீவல்லபர் முன்னிலும் அதிக ஊக்கமடைய, கோட்டாற்றிலிருந்து வந்த சோழ வீரனின் முதுகை அவர் கரம் உற்சாக மிகுதியில் பதம் பார்த்தது!

(தொடரும்)

ஹிட்லர் தான் தற்கொலை செய்து கொள்வதற்குமுன், தன் வளர்ப்புப் புறாக்களை யாரும் சரியாகக் கவனிக்க மாட்டார்கள் என்று எண்ணி, அவைகளைச் சுட்டுக் கொன்று விட்டான்!

'சிந்தனை விருந்து ஆயிரம்' என்ற நூலிலிருந்து.

தகவல் : ந. க. பரமசிவம்



சக்கரவர்த்தித் திருமகன்

59. தாரையின் துயரம்

வில்லேந்திய ஒருவனால் வாலி கொன்று வீழ்த்தப்பட்டான் என்கிற சமாசாரம் கிஷ்கிந்தையிலுள்ள வானரர்களுக்குத் தெரிந்ததும் அவர்கள் இங்குமங்கும் பயந்து ஓடினதைப் பார்த்தாள் தாரை.

''யுத்தம் என்றால் எப்போதும் அரசன் வாலிக்கும் முன்னதாக இது வரையில் புறப்பட்டுப் போய் வந்தீர்களே! ஏன் இப்போது இப்படி பயந்து ஓடுகிறீர்கள்? உங்களுக்கு ஒன்றும் ஆபத்து இல்லை. சுக்ரீவனை அரசனாக்குவதற்காக வாலியைக் கொன்றான் ராமன். அவ்வளவே. நீங்கள் அனாவசியமாகப் பயந்து ஓடாதீர்கள்! உங்களுக்கு ஒரு ஆபத்தும் இல்லை.'' என்று அரசிக்குரிய முறையில் தன் துக்கத்தைத் தள்ளி விட்டு வானரர்களுக்குத் தைரியம் ஊட்டினாள்.

பிறகு தன் புருஷன் இறந்து கிடக்கும் இடத்துக்குப் போகப் புறப்பட்டாள். வானரர்கள் தடுத்தார்கள்.

''அங்கதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வோம். கோட்டையைப் பத்திரப் படுத்துவோம். நம்முடைய பகைவன் சுக்ரீவனும் அவனுடைய துணைவர்களும் வராமல் ஊரைக் காப்போம்!'' என்று தாரையைப் போக விடாமல் தடுக்கப் பார்த்தார்கள்.

அவளோ, ''என் வீர புருஷன் இறந்த பிறகு எனக்கு ஒன்றும் வேண்டியிருக்கவில்லை!'' என்று சொல்லி, நிர்ப்பயமாக ராம லக்ஷ்மணர்கள் இருந்த இடத்துக்கு நேராகச் சென்றாள்.

தரையில் விழுந்து கிடந்த தன் புருஷனைக் கண்டதும் துக்கத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. கதறி அழுதாள்.

''ஹா என் வீரனே! எத்தனை சூரர்களை நீ வீழ்த்தினாய், இப்போது மாண்டு கிடக்கிறாயே! என்னை விட்டுப் போய் விட்டாயே!'' என்று குத்துப் பட்டுக் கிடந்த வாலியை ஆலிங்கனம் செய்து கொண்டு அழுதாள்.

வாலியின் குமாரன் அங்கதனும் அங்கே வந்து சேர்ந்தான். இந்தக் காட்சியைக் கண்டபின் சுக்ரீவன் தன் பொருட்டு இவ்வளவு துயரம் ஏற்பட்டதே என்று துக்கப்பட ஆரம்பித்தான்.

இது வேஷமல்ல. இவ்வாறே உலகத்தில் துவேஷமும் பழி தீர்க்கும் காரியங்களும் ஆசைகளும் முடிவில் ஒரு நற்பயனும் சந்தோஷமுமின்றித் துக்கத்தில் முடிகின்றன. நேரில் கண்டு அனுபவித்த பின்னரே துவேஷத்தின் அற்பத்தனம் விளக்கமாகிறது. அறிவு அடைகிறோம். அதுவரையில் மோகத்தில் மூழ்கி, உண்மையைக் காண்பதில்லை.

''அன்புக்குரிய அங்கதனை அநாதையாக விட்டு விட்டு என்னையும் திக்கின்றிவிட்டு விட்டுத் திரும்பி வராத பிரயாணத்தில் போய் விட்டாயே! என் வீரனே!'' என்று தாரை அழுது புரண்டு அங்கேயே உயிர் நீப்பேன் என்றாள்.

ஹநுமான் ஆறுதல் சொல்லிப் பார்த்தான். ''இறந்தவர்கள் தங்களுக்குரிய மேல் உலகங்களை அடைவார்கள். வாலியைப் பற்றி துக்கப்பட

வேண்டாம். அங்கதனுக்குப் பட்டாபிஷேகம் ஆகும். அதைக் கண்டு மகிழ்வோம். இப்போது வாலிக்குச் செய்ய வேண்டிய உத்தரகிரியைகளை நடத்துவதில் புத்தி செலுத்துவோம். அங்கதனைச் சரியாகப் பாதுகாப்பது நம்முடைய கடமையாகும்'' என்றெல்லாம் சொல்லிப் பார்த்தான்.

''எனக்கு ஒன்றும் வேண்டியிருக்கவில்லை. உத்தரகிரியை செய்வதும் அங்கதனை ரக்ஷிப்பதும் எல்லாம் சுக்ரீவன் பார்த்துக் கொள்வான். என்னால் என்ன செய்ய முடியும்? ஆயிரம் அங்கதர்கள் இருந்தாலும் அது என் புருஷனுக்குச் சமானம் ஆகுமா? என் வீரனுடன் நானும் யமாலயம் செல்வேன். அதுதான் எனக்கு சந்தோஷம்'' என்றாள் தாரை.

நினைவிழந்து மரணத் தறுவாயிலிருந்த வாலி, அச்சமயம் கண்ணைத் திறந்து சுக்ரீவனைப் பார்த்து மெதுவாகச் சில வார்த்தைகள் பேசினான்:

''தம்பி! நாம் இருவரும் ஒன்றாக இருந்து சந்தோஷமாக ராஜ்யத்தை ஆண்டு அனுபவித்திருக்கலாம். அதற்குக் கொடுத்து வைத்திருக்கவில்லை. என்னுடைய தவறே அதிகம். அதைப் பற்றி இப்போது பேசிப் பயனில்லை. நீ இனி இந்த ராஜ்யத்தை ஆள்வாயாக. எனக்கும் தாரைக்கும் உயிரை விடப் பிரியமான குமாரன் அங்கதனை உன்னிடம் ஒப்புவித்தேன். அவன் உன்னைப் போன்ற வீரன். எனக்குப் பதிலாக நீயே அவனுக்குத் தந்தையாக இருந்து அவனை அன்புடன் பார்த்து வா. இதுதான் உன்னை நான் கேட்டுக் கொள்ளுவது.

''என் மனைவி தாரை மிகுந்த அறிவாளி. சூக்ஷ்மமான விஷயங்களை அறியும் சக்தி பெற்றவள். இவ்விதம் நடக்கும் என்று அவள் ஒன்றைக் கூறினாளானால் அது அப்படியே நிகழும், சந்தேகமில்லை. அவள் யோசனையை எந்த விஷயத்திலும் தட்டாதே.

''இதோ இந்திரன் எனக்குத் தந்த மாலையைஎன் கையிலிருந்து பெற்றுக் கொண்டு அதன் சக்தியை நீ பெற்று விளங்குவாயாக. என் வாழ்க்கை முடிந்தது. உன் மேல் இப்போது எனக்குக் கோபம் தணிந்து விட்டது.

ராஜாஜி

உனக்கு மங்களம் ஆகுக!'' என்று தம்பி சுக்ரீவனை மிகப் பெருந்தன்மையோடு ஆசீர்வதித்தான்.


''அங்கதா, அரசனாகிய சுக்ரீவனிடத்தில் சரியாக நடந்து கொள். பொறுமையுடன் நடந்து கொள். அன்போடு நடந்து கொள்.'' என்று குமாரனுக்கும் சொல்ல வேண்டியதைச் சொன்னான்.

காட்டு விருக்ஷம் வெட்டப்பட்டுக் கீழே விழுந்தால் அதைத் தழுவி ஏறிய இளங்கொடியும் அதை ஒட்டிக் கிடப்பது போல் வாலியைக் கட்டித் தழுவிக் கொண்டு கிடந்தாள் மலர்பூத்த கொடியைப் போன்ற தாரை.

நீலன், வாலியின் மார்பில் குத்தி நின்ற பாணத்தை மெள்ள எடுத்து அகற்றினான். உடனே காயத்திலிருந்து மலையருவி போல் ரத்தம் பொங்கி எங்கும் பரவிற்று. வாலியின் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. ''ஐயோ!'' என்று தாரை அழுதாள்.

''அங்கதா! உன் தகப்பனைக் கடைசித் தடவையாக வணங்குவாய்'' என்றாள்.

''உங்களுடைய பிரிய மகன் வணங்கி நிற்கிறானே! அவனுக்கு



ஒன்றும் சொல்ல மாட்டீர்களா? நான் விதவையானேன். மகனும் திக்கற்றுப் போனான்!'' என்று இதயம் உடைந்த தாரை பிரலாபித்தாள்.

இதையெல்லாம் கண்டு சுக்ரீவனுடைய உள்ளம் பதைத்தது. தன் குற்றத்தை இப்போது நன்றாக அறிந்தான். 'எனக்குள் மறைந்து நின்று உள்ளே வேலை செய்து வந்த ஆசை, என் புத்தியைக் கெடுத்து விட்டபடியால் அல்லவோ நன்றாக ஆலோசியாமல் வாலி புகுந்த குகையின் வாயிலை மூடிவிட்டு அண்ணனுடைய சம்பத்தை அபகரித்துக் கொண்டு ஆனந்தமாக அனுபவித்தேன்!' என்று தனக்குள் சிந்திக்கலானான்.

நம்மையும் அறியாமல் உள்ளே இருந்து வரும் ஆசை விவேகத்தைக் கெடுத்து விடுகிறது. தவறான முடிவுகளுக்கு வந்து விடுகிறோம். பாவங்களில் சிக்கிக் கொள்கிறோம். சுக்ரீவன் இப்போது கண்டான். தன் விவேகத்தைக் கெடுத்து உள்ளே மறைந்து நின்று வேலை செய்தது, தன்னுடைய ஆசை என்பதைக் கண்டான்.

காமம் என்கிற பொதுப் பெயர் வடமொழியில் எல்லா வகை ஆசைகளையும் குறிக்கும். காமமே மனிதனுக்கு உட்பகை. அந்தச் சத்துருவை ஜயிக்க வேண்டும். இதுவே கீதையில் மூன்றாவது அத்தியாயம் கடைசி ஏழு சுலோகங்களில் செய்யப்படும் உபதேசம். ஜஹி சத்ரும் காமரூபம் துராஸதம் என்று முடிக்கிறான் கண்ணபிரான்.

சுக்ரீவனைக் கெடுத்தது ஆசை. வாலியின் விவேகத்தைக் கெடுத்தது கோபம். சுக்ரீவன் குகையின் வாயிலை மூடி விட்டதைக் கண்டதும் ராஜ்யத்தை அபகரிப்பதற்காகவே சுக்ரீவன் தன் கூட வந்து இப்படிச் செய்தான் என்று வாலி எண்ணி விட்டான். அரக்கனுக்குத் தன்னைப் பலி கொடுத்து விட்டு, தன்னுடைய பதவியை அபகரித்துக் கொள்ளப் பார்த்தானே என்று மனத்தில் சுக்ரீவனைப் பற்றி முடிவு செய்து கொண்டு, பொங்கிய கடுங் கோபத்துக்கு இரையானான். உடன் பிறந்த தம்பியை அவமானப்படுத்தி, ஊரை விட்டுத் துரத்திவிட்டு சினத்தை வளர்த்துக் கொண்டே போனான். கோபம் - 'மன்யு' என்று கோபத்தின் மூலத்திற்கு வடமொழியில் பெயர் - இது வாலியை ஏமாற்றி அவனைப் பாவத்தில் தள்ளிற்று.

'காமம்' - 'மன்யு' இவை இரண்டும் எல்லாக் குற்றங்களுக்கும் காரணம். இவற்றை உள்ளம் என்கிற கோட்டைக்குள் விடாமல் மனத்தைக் காப்பாற்றினாலேதான் தப்புவோம்.

சுக்ரீவன் பிரலாபிக்கலானான்: ''நான் எவ்வளவு பெரிய குற்றம் செய்தாலும் என்னைக் கொல்லாமல் 'ஓடிப்போ. உயிர் தப்பிப் பிழை!' என்று சொல்லி அண்ணன் என்னைத் துரத்தினான், அவ்வளவே! நானோ அவனைக் கொல்லச் சதி செய்து அவனைக் கொன்றும் விட்டேனே! என்னைப் போன்ற பாதகன் உலகத்தில் இல்லை. சாகும் தறுவாயில் 'ராஜ்யத்தை நீ எடுத்துக் கொள்' என்று சொல்லி எனக்குத் தன்னுடைய ராஜ்யத்தையும் இந்திரன் தந்த சக்தி மாலையையும் தன் கையால் தந்தானே! இவனல்லவோ மகான்! நீசனாகிய நான் உயிர் வைத்துக் கொண்டு பிழைப்பதில் என்ன பயன்? உலகத்துக்கு ஒரு சூரனாக இருந்த என் அண்ணனைக் கொன்றேனே!'' என்று தன் பெருங்குற்றத்தை உணர்ந்து அழுதான்.

(தொடரும்)




''பெண் பார்க்கப் போகிற இடத்துல, அதைக் கேட்கணும், இதைக் கேட்கணும்னு போயிருந்த நான், அப்படியே வாயடைச்சுப் போயிட்டேன்.''

''பெண்ணோட அழகைப் பார்த்தா...?''

''ஊஹூம்; அவுங்க வீட்ல கொடுத்த அல்வாவைச் சாப்பிட்டு!''

– சீர்காழி வி. ரேவதி.



எத்தனையோ புத்தகங்களை வாங்கிப் படித்தும்,
இங்கிலீஷில் பேச பயமாக இருக்கிறதே ஏன்?

☐ புத்தகங்களில் இடம்பெற்றுள்ள கற்பனை உரையாடல்களைப் படிப்பதால் மட்டுமே ஆங்கிலத்தில் பேசும் ஆற்றலைப் பெற்றுவிட முடியாது.

☐ தவறாகப் பேசிவிடுவோமோ என்ற தயக்கம் நீங்கி, சகஜமாகப் பேச முறையான பயிற்சி மிகவும் அவசியம்.

☐ நமது அன்றாட உரையாடலில் இடம் பெறும் முக்கியமான ஆங்கில வார்த்தைகள் என்னென்ன.

☐ அவைகளின் தமிழ் அர்த்தம் என்ன.

☐ ஒவ்வொரு வார்த்தையையும் எப்படி உச்சரிக்க வேண்டும்.

☐ அவ்வார்த்தைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை எப்படி அமைக்க வேண்டும்.

☐ எந்தெந்த வாக்கியங்களை, எந்தெந்தச் சூழ்நிலைகளில் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பவைகளைப்

படிப்படியாக, பல உதாரணங்கள் மூலம் உங்களுக்குப் புரியும் வண்ணம் எளிய முறையில் சொல்லித்தந்து, தயக்கம் சிறிதுமின்றி நீங்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, இலக்கணப் பிழை ஏற்பட்டு விடுமோ என்ற பயமின்றி, கடிதங்கள், கட்டுரைகள் எழுத,

விவேகானந்தா கல்வி நிலையம் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறது.

இதுவரை இரண்டுலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இப்பயிற்சியில் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.

வீட்டிலிருந்தபடியே, ஓய்வு நேரத்தில் தபால் மூலம் நீங்களும் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

ஒரு போஸ்ட் கார்டில் உங்களது முகவரியைத் தெளிவாக எழுதி இன்றே எங்களுக்கு அனுப்புங்கள்.
பயிற்சி பற்றிய விபரங்களை உங்களுக்கு உடனே அனுப்பிவைக்கிறோம்.

விவேகானந்தா கல்வி நிலையம்

9, நடேசன் தெரு, தி. நகர்,
சென்னை — 600 017.

NAGA



மைக்கேலின் இசை நிகழ்ச்சிகள் ஆறு மாதத்துக்கு முன்பாகவே திட்டமிடப்

மைக்கேல் ஜாக்ஸனிடம்

மைக்கேல் ஜாக்ஸன், நவம்பர் 23-ஆம் தேதி இந்தியா வருகிறார். புதுடில்லி இப்போதே களைகட்ட ஆரம்பித்து விட்டது. பெப்ஸிகோலா நிறுவனம் 'ஸ்பான்ஸர்' செய்யும் இந்த நிகழ்ச்சி, சரித்திரம் படைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். 80,000 பேர் கண்டுகளிக்க, ஜவாஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியில் லாபமாகக் கிடைக்கும் தொகை, ராஜீவ் காந்தி அறக்கட்டளைக்குப் போகும். பெப்ஸி தவிர, தாஜ் ஹோட்டல் நிறுவனத்தினரும், ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்தினரும் நிகழ்ச்சியை ''ஸ்பான்ஸர்' செய்வதில் பங்கேற்கிறார்கள். மைக்கேல் ஜாக்ஸனுக்குக் கட்டணம் எவ்வளவு என்பது ரகசியமாக வைக்கப்பட்டிருந்தாலும் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்று பேசப்படுகிறது. பெப்ஸி நிறுவனம், தனது பாட்டில்களில் மைக்கேல் படத்தைப் பொறிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறது. ஜெட் ஏர்வேஸ் அன்றைய பம்பாய், டில்லி பயணிகளுக்கு இசை நிகழ்ச்சிக்கு இலவச பாஸ் வழங்கப் போகிறது.

படும். ஸ்பான்ஸர்களின் பிரதிநிதியுடன் மைக்கேலின் நிபுணர் குழு நிகழ்ச்சி நடக்கவிருக்கும் நாட்டுக்கு விஜயம் செய்து முக்கிய நகரங்களில் உள்ள ஸ்டேடியங்களைப் பார்த்துத் தேர்வு செய்கிறார்கள். இந்தியாவில் டில்லியை மட்டுமே இக்குழு தேர்ந்தெடுத்தது. முக்கியமான காரணம், விமான நிலையத்திலிருந்து நிகழ்ச்சி நடக்கும் ஸ்டேடியத்துக்கான நேரடிப் பாதை மற்றும் டில்லியின் நவம்பர் மாத இதமான சீதோஷ்ண நிலை.

நவம்பர் 18-ம் தேதி தமது சொந்த போயிங் 737 விமானத்தில் டில்லி வரப் போகும் மைக்கேல் ஜாக்ஸன், நிகழ்ச்சிக்கு முன் அன்னை தெரஸாவையும் சத்யசாயி பாபாவையும் சந்திக்க இருக்கிறாராம்.

ஐந்து நாட்களுக்கு முன்னதாகவே இவரது தொழில்நுட்பக் குழு 300 டன் சாதனங்களுடன் இரண்டு தனி விமானங்களில் டில்லிக்கு வரும். 170 பேர் கொண்ட இந்தக் குழு, உள்ளூர் தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் 270 அடி உயரம், 90 அடி அக

என்ன வசியம்?

லத்தில் ஒரு ராக்ஷஸ மேடையை உருவாக்கும். 2,40,000 வாட் சக்தி வாய்ந்த பல ஸ்பீக்கர்களைக் கிட்டத்தட்ட 17 கி.மீ. வயர்களால் இணைத்து கம்ப்யூட்டரால் இயங்கும் லேசர் விளக்குகளை அமைத்து ஒத்திகை பார்த்து, மைக்கேல் ஜாக்ஸனின் வரவுக்காகக் காத்திருப்பார்கள். இவர்களது சாதனங்களில் முக்கியமானது நான்கு சக்தி வாய்ந்த ஜெனரேட்டர்கள். ஒரு சின்ன நகரத்துக்கே மின்சாரம் சப்ளை செய்யக்கூடிய இத்தகைய ஜெனரேட்டர்களை ''இந்தியாவின் மின்சார வசதி பற்றிக் கேள்விப்பட்டதனால் கொண்டு வருகிறோம்'' என்கிறார் நிகழ்ச்சியைத் தயாரிக்கும் காலின்ஸ்!

''மைக்கேலின் உடல்நிலை பாதிக்கப்பட்டதாலும், அமெரிக்காவில் போடப்பட்டிருக்கும் வழக்கினால் மனநிலை சரியில்லாததாலும் பாங்காக் நிகழ்ச்சி அத்தனை சிறப்பாக அமையவில்லை என்று ஒரு கருத்து நிலவுகிறதே?''

''இது உண்மையில்லை. மைக்கேலின் பாங்காக் நிகழ்ச்சி மகத்தான வெற்றி. டில்லியிலும் அவ்வாறே நடக்கும். கண்கூடாகப் பார்க்கப் போகிறீர்கள்'' என்கிறார் காலின்ஸ்.

மைக்கேல் ஜாக்ஸனுக்கும் அவரது கலைஞர் குழுவுக்கும் தாஜ் பாலஸ் ஹோட்டலில் 250 ரூம்கள் ரிசர்வ் செய்யப்பட்டுள்ளன. இவரது குழுவில் இசை, நடனக் கலைஞர்கள், உடை, ஒப்பனைக் கலைஞர்கள், வீடியோகிராஃபர்கள் தவிர, மைக்கேலின் மெய்க்காப்பாளர்களும் அடக்கம்.

ஆர்ப்பாட்டமான விளம்பரங்களுடன் நடைபெறும் இவரது இசை நிகழ்ச்சியில் அப்படி என்னதான் இருக்கிறது?

இரவு 8 மணி சுமாருக்குத் துவங்கும் நிகழ்ச்சியில் முதலில், பலத்த வெடிகுண்டு ஓசையுடன் எங்கிருந்தோ மேடையில் துள்ளி வந்து விழுகிறார் மைக்கேல். இதற்கென்றே மேடையின் கீழே ஒரு விசேஷ அமைப்பு. புகை மண்டலத்தில், பளபளக்கும் உடையில் அசையாது நிற்கும் இவரைப் பார்த்ததும் விசிறிகளின் கரகோஷம் வானைப் பிளக்கிறது.




பின்னர், பல ஆயிரக்கணக்கான லேசர் விளக்குகள் ஒளிபாய்ச்ச, ஸ்டீரியோவில் இசை முழங்க, பாட்டுடன் நடனத்தைத் தொடங்குகிறார். பலமுறை டீ.வி.யில் பார்த்த, கேட்ட அறிமுகமான பாடல்கள் என்பதால் ரசிகர்களும் கூடவே பாடி, ஆடுகிறார்கள். சில பாடல்களை இப்படிப் பாடி முடிப்பதற்குள், கூட்டத்தின் ஒரு பகுதியினர் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் போல இயங்குகிறார்கள். கடைசிப் பாடலின் முடிவில் ''ஸ்பேஸ் ஷட்டில்'' பாணியில் அமைக்கப்பட்டிருக்கும் விண்கலத்தில் ஏறி ஸ்டேஜின் மேல்பகுதிக்குப் ''பறந்து'' மறைந்து போகிறார்! அப்போது வாண வேடிக்கைகள் நடக்கிறது. குறைந்த அளவே பட்டாசுகள் வெடிக்கப்பட்டாலும் ஸ்டீரியோ அமைப்பினாலும், ராக்ஷஸ வீடியோ ஸ்கிரீன்களில் தெரியும் படங்களினாலும் மிக அதிக அளவு வெடிக்கப்படும் பிரமை உண்டாகிறது.

இவரை, நேரில் - இசைக்கும்போதே - பார்க்கும் வாய்ப்பை இந்த வாழ்க்கையில் கிடைக்கும் மிகப் பெரிய பாக்கியம் என்று கருதும் ரசிகர்கள் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள்!

– ரமணன்

வீட் அல்வாவுக்கு வோட்டுப் போடலாம்!





• நடராஜன்

விளம்பரம் செய்வதில் வர்த்தக நோக்கம் ஒன்றை மட்டுமே நிறைவேற்றிக் கொள்ளாமல் வாழ்க்கைக்கும், நம்முடைய பழமையான பண்பாட்டுச் சிறப்புக்கும் தொடர்பேற்படுத்துகிறவர்கள் வெகு சிலர்தாம். அந்த வகையில் அடையாறு 'கிராண்ட் ஸ்வீட்ஸ்' அமைப்பின் விளம்பரங்களும் சிறப் பிடம் பெறுகின்றன.

''துளசி எது, வில்வம் எது என்று தெரியாதவர்களும், முருகனுக்கும் குமரனுக்கும் வேறுபாடு புரியாதவர்களும் நம் நாட்டில் மிகப் பெரும்பான்மையானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயன்படட்டுமே என்றுதான் இம் மாதிரியான விஷயங்களை விளம்பரங்களில் சேர்த்துக் கொள்ளத் தோன்றியது'' என்கிறார் பெரியவர் நடராஜன். கிராண்ட் ஸ்வீட்ஸ் நிறுவன அதிபர்.

'உங்களுக்குப் பிடித்தமான ஸ்வீட் எது?' என்று கேட்கத்தான் போனோம். ஆனால் அது தவிரவும் பல பயனுள்ள, தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் கிடைத்தன.

''பல நிறுவனங்களுக்கான பொருள்களை வண்டிகளில் ஏற்றி அனுப்புகிற வேலைதான் முதலில் நான் பார்த்தது. அப்புறம் ஐ.வி.ஐ. நிறுவனத்தின் பர்ஸனல் மானேஜர் ராமமூர்த்தி ஆலோசனையின் படி, காண்டீன் நடத்தினேன். அவர் அப்படி ஆலோசனை தந்த போது, 'எனக்கு அந்தச் சமாசாரம் தெரியாதே' என்றுதான் சொன்னேன். அவர் 'செய்... எல்லாம் பழகி விடலாம்' என்று தூண்டினார்.'' என்று நினைவு கூர்கிறார் நடராஜன்.

''எந்தத் தொழிலையும் அனுபவத்தில் கற்றுக் கொண்டு விடலாம். ஆனால் மனத் தூய்மை வேண்டும். எண்ணங்கள் தூய்மையானவையாக இருக்க வேண்டும். இதனால் கிடைக்கும் ஆனந்தம், தொழில் வெற்றியை விடப் பல மடங்கு அதிகம்'' என்கிறார். 'கிராண்ட் ஸ்வீட்ஸ்' விற்பனை நிலையத்துக்கு ஒருமுறை போய் வந்தவர்கள், சுற்றுப்புறத் தூய்மையும் எவ்வளவு சிறப்பாக இருக்கிறது என்று வியந்து போவார்கள்.

''ஜாங்கிரி என்கிற இனிப்புப் பொருள், சாஸ்திரங்களிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பெயர் 'அமுர்தி'. வேத மந்திரங்களையெல்லாம் கம்பீரமாகச் சொல்கிறவர்களுக்குக் கடலை மாவு நல்ல சக்தியைத் தருகிற பொருள். கன்னியாகுமரி முதல் காசி வரை - பாரதம் முழுவதும் கடலை, கடலை மாவு சம்பந்தப்பட்ட தின்பண்டங்கள் கடவுளுக்கு நிவேதனப் பொருட்களாக உள்ளன. உளுந்தும் பருப்பின் சத்து, உடல் வளர்ச்சிக்கு மிக அவசியமானது. எல்லாத் தித்திப்புப் பண்டங்களுமே நம்முடைய தேசத்தில் ரிஷிகளால் கண்டறியப்பட்டவைதாம். நூறு சதவிகிதம் விஞ்ஞானபூர்வமாகச் சிந்தித்து, உடல், மன வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் இவற்றை அவர்கள் சொன்னார்கள்.

''இந்து மதத்தில் பிரசாதம் என்பது சிறப்பாக இடம்பெறுகிறது. பிறருக்கு உணவளிப்பதே பக்திமானின் சிறப்பான குணம்'' என்றெல்லாம் நிறையச் சொல்கிறார் நடராஜன்.

நடராஜனுக்கு என்ன பிடிக்கும் என்று கேட்டோம். சிறு வயதில் இவர் மிகவும் விரும்பிச் சாப்பிட்டது பாயஸம், சர்க்கரைப் பொங்கல், தயிர் சாதம்தான்! எனினும் விதம்விதமான ஸ்வீட் வகைகளில், இன்று நடராஜனின் வோட்டு 'வீட் அல்வா'வுக்குத்தான்! •

– சுப்ர. பாலன்

புகைப்படம் : கோபிநாத்

மகிழ்ச்சி, புன்னகை, விழாக் கொண்டாட்டம்,
ஆசிகள், நல்வாழ்த்துக்கள், உல்லாசம், பூரிப்பு...

7,05,887 காரணங்கள் ஸ்ரீராம் சிட்ஸ் உங்களுக்கு "தீபாவளி நல்வாழ்த்துக்கள்" தெரிவிக்க.



மகிழ்ச்சி நிறைந்த விழாக் காலம் இது. எங்கும் கொண்டாட்டம். கோலாகலம். ஸ்ரீராம் சிட்ஸ் அளிக்கும் மகிழ்ச்சியையும் பாதுகாப்பையும் இரண்டு தலைமுறையினரும் பங்கிட்டுப் பயனடைகின்றனர்.

இந்த விழாக் காலத்தை ஸ்ரீராம் சிட்ஸ் உற்சாகத்தோடு கொண்டாட இப்போது மேலும் 61,396 காரணங்கள். ஆமாம். ஸ்ரீராம் விஜயதசமி சீட்டு விழாவின் போது 61,396 புதிய சந்தாதாரர்கள் சேர்ந்துள்ளனர். அவர்கள் ஸ்ரீராமின் மீது வைத்துள்ள நம்பிக்கையின் பிரதிபலிப்பு இது. 20 வயது நிரம்பியுள்ள இந்த மகத்தான மக்கள் இயக்கத்தில் இப்போது 7,05,887 உறுப்பினர்கள்!

நவராத்திரியிலிருந்து தீபாவளி வரை தொடரும் இந்தப் பண்டிகை காலத்தில் ஸ்ரீராம் சிட்ஸ் உங்கள் ஒவ்வொருவருக்கும் தன் உளமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ் — மேலும் பலருக்கும் பல வகையிலும் பலன்.

ஸ்ரீராம் சிட்ஸ் &
இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்.
நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்",
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 8274431/8275336/8270400/8273932.

ADWAVE/SCI/4636 TAM A



* இன்னொரு எம்.ஜி.ஆர்.?

வை. கோ. இன்னொரு எம்.ஜி. ஆர். ஆவாரா?

● ஏ. ஜஃபர் காதர், அரியநாயகிபுரம்.

? காஷ்மீர் பிரச்னை பற்றி அன்று மூதறிஞர் ராஜாஜியின் கருத்து என்னவாக இருந்தது?

! அவரைக் (முந்நாள் கவர்னர் ஜெனரலை) கைது செய்ய வேண்டும் என்று காங்கிரஸார் ஆர்ப்பாட்டம் பண்ணும் அளவுக்குத் தெளிவாக இருந்தது: எந்த ஒரு பகுதி மக்களையும் அவர்களது விருப்பத்துக்கு விரோதமாக யாரும் ஆள முடியாது; எனவே காஷ்மீர மக்களின் விருப்பம் என்ன என்பது அறியப்பட வேண்டும்.

● ப. இராம்முருகன், சிவகங்கை.

? 'ஒரு காலத்தில் கிரிமினல்களாக இருந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு எம்.எல்.ஏ. அல்லது எம்.பிக்களாக இருக்கிறார்கள்' என்று திண்டிவனம் கூறுகிறாரே?

! இட்டிலியைத்தான் திருப்பிப் போட முடியாது; இது தோசை. திருப்பிப் போடவும் செய்யலாம்!

● கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? "வாரிசுப் போர் இல்லாத இயக்கம் அ.இ.மு.க.தான்" என்கிறாரே கு.ப. கிருஷ்ணன்?

! ஜெ. அரசியலின் ஆரம்பமே அதுதானே, சுவாமி!

● மூ. இரவிச்சந்திரன், சேலம் – 9.

? வை.கோவுக்கு ஆதரவாகத் தீக்குளித்த தொண்டருக்கும் தி.மு.க.வின் தலைமை நிதி அளித்துள்ளது. இது தெரியாமல் நாக்கை நீட்டலாமா?

! இது உண்மையானால், தி.மு.க. தலைமைக்கு என் ஸாரி, இரவிச்சந்திரனுக்கு தாங்க்ஸ்.

● எம். கே. சக்திவேல், சேலம்.

? பள்ளி மாணவிகள் கடத்தல் விவகாரத்தில் ஈடுபட்டால், மனநல ரீதியான ஆய்வு தேவை என்று கூறும் நீங்கள், ஆண்கள் செய்யும் குற்றங்களை மட்டும் குற்றமாக எடுத்துக் கொள்வது ஏன்?

! அப்படியில்லை; பள்ளிப் பிள்ளைகள் எனில், ஆண்களுக்கும் நான் கூறியது பொருந்தும்.

● ஆர். இளமாறன், சீர்காழி.

? பள்ளிக்கூட விழாவில் நடிகை பரிசு வழங்குவது ஏற்கக்கூடியதா?

! ஆட்சிப் பொறுப்பையே ஜெ.விடம் ஒப்படைத்து விட்டு, இது என்னங்க கேள்வி!

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.

? நேற்றைய தி.மு.க., இன்றைய தி.மு.க., நாளைய தி.மு.க. எப்படி இருக்கும்?

! மழை, புயல், பூகம்பம்.

● அ. ராஜா ரஹ்மான், திருப்பரங்குன்றம்.

? வை. கோ., தி.மு.க.விலிருந்து வெளியேறிய (யேற்றப்பட்ட) பிறகு இன்னொரு எம்.ஜி.ஆர். ஆவாரா?

! இன்னொரு நாஞ்சிலாராக மாறாமல் இருந்தாலே பெரிய காரியம்.

● பி. ராஜன், தாராபுரம்.

? அண்மையில் உங்களைச் சிரிக்க வைத்த ஜோக்?

! "பதில் சொல்ல வேண்டியதில்லை என்று சொல்வதே ஒரு பதில்தான்" என்று பிரதமர் கூறி நழுவியது.

● வி.சிவா, அரசரடி.

? பழம்பெரும் பத்திரிகையாளர் ஆஞ்சநேயலுவுக்கு முதல்வர் ஜெ ரூ. 30,000 நிதி உதவி அளித்தது பற்றி...?


! நிதி உதவி பெறுவதை ஒரு பத்திரிகையாளர் 'சரி' என்று எண்ணினால் நாம் குறுக்கே நிற்கத் தேவையில்லை. ஆயினும், உதவி என்று இல்லாமல் அவரது எழுத்துப் பணிக்கு ஒரு விருதுடன் கூடிய சன்மானம் என்று செய்திருந்தால் கௌரவமாக இருந்திருக்கும்.



* வள்ளல் புதிர்!



* நழுவிய விதம்



* ஆரம்பமே அதுதானே!

நீங்கள் கேட்டவை - தராசு

● சி. சீனிவாசன், திருத்துறைப்பூண்டி.
? வை.கோ. இல்லாத தி.மு.க. - கலைஞர் இல் லாத தி.மு.க. - ஒப்பிடுக.
! முன்னது உப்பில்லாத தயிர்சாதம்; பின் னது தயிர் இல்லாத தயிர்சாதம்.

● ஈ. டி. விஜயகுமார், ஈரோடு.
? திராவிடத் தலைவர்கள் சமாதிக்கு அஞ்சலி செலுத்தி, பயணத்தைத் தொடங்கக் காரணம்?
! அஞ்சலிக்கு அஞ்சலி; பப்ளிசிடிக்குப் பப்ளிசிடி!


● பரீதா பேகம், திண்டுக்கல்.
? நீண்ட இடைவெளிக்குப் பிறகு தங்களைச் சந்திக்கும் வாசகியின் நல் இதய தீபாவளி வாழ்த்துக்கள்!
! நன்றி, சகோதரியே நன்றி.

● இரா. மாதவராமன், கிருஷ்ணகிரி.
? "மாறன், அழகிரி, ஸ்டாலின் ஆகியோரை அண்ணாசாலையில் நிறுத்தி கொளுத்தி விடலாமா?" என்ற கலைஞரின் சொற்கள் எதைக் காட்டுகிறது?
! பாசம். அதன் விளைவான ஆசை; பற்றுதல். எண்ணம் நிறைவேறாத போது கோபம். அது மனசை பாதிக்க புத்தி நாசம். (கீதை)

● ஆர். ரமேஷ்பாபு, விருத்தாசலம்.
? பாண்டியராஜன் தனது அடுத்த படத்துக்கு "சுப்பிரமணிய சுவாமி" என்று பெயர் வைத்திருக்கிறாரே?
! ரிலீஸுக்குத் தேதிக் கெடு வைத்து பிறகு ஒத்திப் போட்டுக் கொண்டே போகாம லிருந்தால் சரி!

● ரஞ்சனி ப்ரியன், பள்ளிபாளையம். ❑
? பாராளுமன்றத் துணை சபாநாயகர் பதவியை அ.இ.அ.தி.மு.க.வுக்குத் தர இ. காங்கிரஸ் மறுத்தது ஏன்?
! அன்றைய தோழமைக் கட்சியாக இருந்த அ. தி. மு. க. வுக்குக் கொடுப்பதை விட, இன்னும் ஒரு படி மேலே சென்று எதிர்க்கட்சியான பா. ஜ. க. வுக்குக் கொடுத்தது பெரிய விஷயமில் லையா?

● எல். ஆர். விஜயகுமார், சென்னை.
? முதல்வர் 'ஜெ' தமது சொந்தப் பணத்தி லிருந்து கூட தாராளமாக நிதியுதவி வழங்கு வது குறித்து?
! '1992-ல் தமக்கு வருமானமில்லை என்று வருமான வரி அதிகாரிகளிடம் அறிவித் தவர், முதல்வர் என்ற முறையில் ரூ 1/- சம்பளம் பெறுகிறவர், வள்ளலாக வாரி வழங்கு வது எப்படி?' என்பது வாழப் பாடியார் போலவே நமக்கும் புதிராகத்தான் இருக்கிறது.




✱ நிதி உதவி

● ஆர். பாலு, திருச்சி.
? 'பஞ்சர் ஆன டயரைத் தூக்கி எறிவோம்' என்று வை.கோ. பற்றி கருணாநிதி கூறியது...?
! 'பஞ்சர் ஆகும் வரை தலைவரைத் தாங்கியது இந்த டயர்தானே' என்று திருப்பிக் கேட்டு அனுதாபம் சம்பாதிக்க வை.கோ வுக்கு வாய்ப்பு அளித்து விட்டாரே!




✱ அறிக்கை மன்னர்

● என். ஆர். சுப்பிரமணியம், பூனாம்பாளையம்.
? வாழப்பாடி ராமமூர்த்தி யின் அறிக்கைகளைப் படிக் கும் போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?
! கருணாநிதியும் உட் கட்சிப் பூசலில் சிக்கி யிருக்க, ஆ ட் சி யை த் துணிந்து விமர்சிக்க இந்த ஆள் ஒருவர்தானே இன்று இருக்கிறார், இவரையும் 'டின்னர் டிப்ளமாட்டுகள்' ஒன்று சேர்ந்து ஓரம்கட்டி விட்டால் எ ன் ன ா வ து என்றுதான். உதாரணமாக மதுசூதனன், கண்ணப்பன், ரகுபதி ஆகியோர் தலா ரூ. 20, 25, 20 என்று லட்சங்களைக் கட்சிக் கட்டட நிதிக்கு என்று ஜெ. விடம் அளித்ததை வாழப் பாடி விமர்சித்த விதம் சிந்தனைக்குரியது.



✱ திருப்பிப் போடவும்



✱ பஞ்சர் ஆன உவமை!

● எம். ராஜேந்திரன், லால்குடி.
? சிரிக்க வைத்த செய்தி...?
! சென்னையில் இப்போது பீக் அவர் டிராஃபிக் சிண்டைப் பிய்த்துக் கொள்கிற மாதிரிதான் உள்ளது. எனவே, பாங்காங்கில் ஒரு டிராஃபிக் போலீஸ்காரர் என்ன பண்ணு வது, எப்படிச் சமாளிப்பது என்று புரியா மல், "எப்படியாவது போங்கடா" என்ற எண்ணத்தில், எல்லா விளக்குகளையும் பச்சை காட்ட வைத்து விட்டு ஆனந்தக் கூத் தாடினார் என்று படித்த போது குபீர்!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
கே. ரஞ்சனி ப்ரியன்,
2/270, கானத்தங்காடு,
ஆலாம்பாளையம் அஞ்சல்,
ஈரோடு - 638 008.

விண்முகட்டில் வேணுகோபாலர்!





✱ வேணுகோபால சுவாமி ஆலயம்...

படவேடு - பட்டணத்து வாசனை படாத இக் குக்கிராமம் எப்படி இத்தனை நாட்கள் நம் சினிமாக்காரர்கள் கண்ணில் படாது போயிற்று?

லொக்கேஷன் அறிய விரும்புவோர் கவனத்திற்கு. திருவண்ணாமலை சம்புவ ராயர் மாவட்டம். ஆரணி - திருவண்ணா மலை ரூட்டில் உள்ள சந்தை வாசலிலிருந்து ஒரு சில கிலோமீட்டர் தொலைவு. ஆரணியி லிருந்து நாம் கிளம்பிய நேரம் வருண பகவான், தனது கும்பகர்ணத் தூக்கத்தி லிருந்து விடுபட ஆரம்பித்திருந்தார். பஸ் வேகம் பிடிக்கப் பிடிக்க, அவரும் 'பிடிக்க' ஆரம்பித்தார். படவேடு போய் இறங்கிய சமயம், கேமரா சகிதம் First Class 'திரு மஞ்சனம்'. மெட்ராஸில் தம்ளரில் குளித்த சோகம் தீர. இரவெல்லாம் 'வெடவெட வெட.'

சேர்வராயன் மலைத்தொடர் அடிவாரத் தில் இருக்கிற படவேடு கிராமத்தில் மூன்று விசேஷங்கள் :

1. ரேணுகாம்பாள் கோவில்
2. ராமர் கோவில்
3. வேணு கோபாலர் கோவில்

மேலும் ஒரு விசேஷம், அந்த ஊரின் அழகு.


தார் பார்க்காத மண் சாலை. பார்க்கும் இடமெல்லாம் வயல்கள், தோப்பு, தோட்டம், ஆறு, ஓடை, குளம், பூக்கள், புல், தும்பி, பட்டாம்பூச்சி, சில நூறு வீடுகள், காவல் தெய்வம்... டிபிகல் சினிமா கிராமம்!

'குன்று மேல்' கிருஷ்ணர் கோவிலைப் பற்றி ரேணுகாம்பாள் ஆலய நிர்வாக அதி காரி கஸ்தூரிரங்கனிடம் விசாரித்த போது, ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

''காலைல ஆறு மணிக்குக் கிளம்பிட லாம். பன்னண்டு மணி, ஒரு மணி வாக்குல மலை ஏறிடலாம். தரிசனம் முடிச்சி, எப்படி யும் மூணு மணிக்குள்ள இறங்கிடலாம்'' என்றார்.

குன்று என்றதும் நம் மனக்கண்ணில் குமரன் குன்றம், திருநீர்மலைக் குன்றுகள் விரிய - கஸ்தூரிரங்கன் சொன்னது குன்று

அல்ல; **குன்று!** ''யார் சொன்னாங்க குன்றுன்னு? மலை சார்! ஜவ்வாது மலை - கேள்விப்பட்டிருப்பீங்களே! 2050 அடி உயரம். பஸ் எதுவும் கிடையாது. இங்கி ருந்து ஏழு கிலோ மீட்டர் டிராக்டர்ல போகணும். முழுக்க மலைப்பாதை. அதுக்கப்புறம் டிராக்டர் கூடப் போகாது. நடந்துதான் போகணும்!''



* சம்புவராயர் கால நெற்களஞ்சியம்...

ஒரு மாதிரி டென்சிங், ஹில்லாரி, பச்சேந்திரிப் பால் மனநிலையில் அன் றிரவைக் கழித்தோம்.

'சொட்டு நீலம் டோய்' என்று விடிந்த நேரம் - கிராமம் குளித்து மினுமினுத்து நின் றது.

''மலையடிவாரம் வரைக்கும் கார்ல போயிடலாம்'' என்றார்கள். வழியில் பலர் நடந்து போய்க் கொண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது. விசாரித்ததில், ''கும்பாபிஷேகம் முடிந்து 48வது நாள் 'பூர்ணாஹுதி' இன்று'' என்றார்கள்.

வாழைத் தோப்புகளும், கரும்புக் கொல்லைகளும், வழிமுழுக்க எழில் அள்ளி வீச, வந்ததே மலையடிவாரம். நிமிர்ந்து பார்ப்பதற்கு முன்னால் ஒரு பாட்டில் அயோடக்ஸ் வாங்கி வைத்துக் கொண் டிருக்க வேண்டும். செங்குத்தோ செங்குத் தாக அத்தனை உயரம்!

''படிக்கட்டு இருக்குதுங்களா?''

''பார்க்கத்தானே போறீங்க?''

பூச்சி மருந்து, ரசாயன உர விளம்ப ரங்களில் மட்டுமே அதுவரை பார்த்தி ருந்த டிராக்டரில் முதல் முறையாக ஏறி நின்றதும் மலைப்பாதையில் வண்டி புறப் பட்டது.



* முழுமையான மலை ஏற்றம்...

அதிகபட்சம் ஆறடி அகலம். தடுப்பு ஏதுமில்லை. எட்டிப் பார்த்தால் கபிலர் தவம் செய்து கொண்டிருந்ததாகப் புராணம் சொல்லும் பாதாள லோகம் தெரியும். மருந் துக்குக் கூடச் சமதளம் கிடையாது. ஓரடி நகர்ந்தால் ஒரு கண்டம் தப்பித்தோம். சம யங்களில் செங்குத்தாகக் கூட ஏற வேண்டி யிருக்கிறது. எமன் எமனாகக் குறுக்கே பாறாங்கற்கள்.

''இங்க எப்பனா சிறுத்தைப்புலி, யானைங்க வருங்க...'' என்று கிராமத்துக் காரர் பயமுறுத்த, கண் எட்டும் தூரம் வரை உயரம், காடு, உயரம், காடு, உயரம், காடு. மூலிகை வாசனை. மனிதர் கவடு படாத பச்சைப் பிரதேசங்கள். நடுவே காட்டு ஓடை. முழங்காலுக்கு மூணு இஞ்ச் கீழே வரை சலசல தண்ணீர். எலும்பு தொடும் குளிர்.

''இதுக்கு மேல டிராக்டர் போகா துங்க.''

இன்னும் ஒரு கிலோ மீட்டர் நடந்தாக வேண்டும். ஸாரி, ஏறியாக வேண்டும். மனத்துக்குள் ஒருமுறை டென்ஸிங் போன் றோரை வேண்டிக் கொண்டு ஏற ஆரம்பித் தோம்.

மனம் முழுக்க ஒரே கேள்வி. இந்த இருபத்தோராம் நூற்றாண்டு விளிம்பில் நடக்கக் கூட வசதியில்லாதிருக்கும் இப்படி யொரு மலைப் பிரதேசத்தில், 13 ஆம் நூற் றாண்டுக்காரர்கள் எப்படிக் கோவில் கட்டி னார்கள்? அதுவும் 2050 அடி உயரத் தில்?

கொஞ்ச நேர 'நடத்தலுக்'குப்பின் 'மிதத்தலுக்கான' நேரம் வந்தது. கையைத் தூக்கினால் மேகத்தைத் தடவிப் பார்க்க லாம். ('உளுளுவாக்காட்டிக்கும்' இல்லை; நிஜமாகவே தடவலாம்!) ஒரு மலையின் ஒரு பாறையில் பாதை(?) முடிந்து மறு மலை யின் மறு பாதைக்குப் போயாக வேண்டும். ஒரே வழி மூங்கில் பாலம். அதன் கீழே



● கட்டுமானம் நடக்கிறது...

பாதாள லோகம் சிரிக்கிறது!

கால் ஏற்கெனவே டைப்ரைட்டர் கணக்கில் தடதடக்க, பாலம் தன் பங்குக்குக் கொஞ்சம் பரதம், கொஞ்சம் கதக், கொஞ்சம் டிஸ்கோ என்று கலக்கியடிக்க... 'டைரக்ட் மோட்சமாக்கும்' என்று நினைத்தபடி செ.மீ. செ.மீ. ஆக நகர்ந்து - வர்ணனைகள் உதவாது. அனுபவம் அந்தரங்கமானது.

ஏறி முடித்த போது உயிரில் கால் பாகம் மீதி இருந்தது! கொண்டு போன பிஸ்லேரி பாட்டில், நாக்குவரை கூடக் காணவில்லை.

ஏறி முடித்துவிட்ட பிரமிப்பில் விழி உயர்த்திப் பார்க்க -

வேணுகோபாலர் ஆலயம்! கருங்கல் கட்டுமானம் கம்பீரமாக நிற்கிறது.

ஆறு ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்னால் சம்புவராய மன்னர்கள் இந்த ஏரியாவை ஆண்டு கொண்டிருந்த சமயத்தில் இக்கோவில் கட்டப்பட்டதற்கான சரித்திரச் சான்றுகள் இருக்கின்றன. எப்படி, இப்படி ஓர் இடத்தில் கட்டினார்கள் என்பதற்குச் சான்று எதுவும் இல்லை! அந்த ஊாம் பெரிய மலை உச்சியில் சுமார் ஏழெட்டு ஏக்கர் பரப்பளவுக்குச் சமதளம்! நட்டநடுவே கோவில். ஓரத்திலிருந்து பார்த்தால் கீழே 8 போட்டாற் போல ஒரு நதி ஓடுகிறது. கமண்டல நதி என்கிறார்கள். தண்ணீர் இருக்கிறது!

சம்புவராய மன்னர்கள், வேட்டைக்கு வருகையில் இப்படி ஓர் இடம் கண்டு,

சரித்திரங்களின் பதிவேடு!

● படவேடு ஸ்ரீராமச்சந்திர சுவாமி கோவிலிலுள்ள ராமர் சிலை மிக அபூர்வமானது. பத்மாசனத்தில் அமர்ந்த கோலத்தில் காணப்படும் அகத்து நோக்கிய அத்வைத, அர்த்தமுத்திரை மிக அபூர்வமானது. சாதாரணமாக தட்சிணா மூர்த்தி உருவத்தில் மட்டுமே காணப்படுவது. இதேபோல இராமருக்கு முன்னால் அமர்ந்து கைப்பிரதி ஒன்றை வைத்திருக்கும் அனுமன் சிலையும் வித்தியாசமானது. இதுபோன்ற பாவனையை வேறெங்கும் பார்க்க முடியாது. இவ்விரண்டு தெய்வ உருவங்களுடன் கால்களை மடித்து அமர்ந்த நிலையில் சீதை, வில்லுடன் கரங்கூப்பி நிற்கும் லட்சுமணன், ஆகியோரும் உண்டு. சிலை வடிவங்களின் சற்றே நீண்ட முக, மூக்கு அமைப்பு, ஆடை, ஆபரணங்களில் தெரியும் கலையழகு ஆகியவை விஜயநகரச் சிற்பச் சாயல்கள்.

● ஸ்ரீராமசந்திர சுவாமி கோவிலுக்கு ஒரு கிலோமீட்டர் மேற்கே கோட்டைமேடு என்றழைக்கப்படும் 20 ஏக்கர் பரப்புள்ள பீடபூமி இருக்கிறது. 14 வது நூற்றாண்டில் கட்டப்பட்ட இரு கோட்டைகளின் சிதிலங்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெரிய கோட்டையில் கட்டப்பட்ட அம்மையப்பேஸ்வரர் கோவில் தான் சம்புவராயர்களால் கட்டப்பட்ட முதல் கோவிலாக இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

– நிர்மலா சக்கரவர்த்தி

அங்கு கோவில் எழுப்பியிருப்பார்கள் என்பதாக யூகிக்கிறார்கள். ஆனால் தற்சமயம் கோவில் புனருத்தாரணத்திற்கு நாங்கள் இப்போது வந்த வழி மூலமாகவேதான் எல்லாச் சாமான்களும் (ஜெனரேட்டர், கருங்கல் கொடிமரம், தண்ணீர், சிமெண்ட் மூட்டைகள், இன்ன பிற.) கொண்டுவரப் பட்டுள்ளன!

மன்னர் காலத்தில் இந்த இடம் ஓர் அருமையான பாதுகாப்புப் பிரதேசமாக இருந்திருக்கக் கூடும் என எண்ணுவதற்கான சாட்சியங்கள் இருக்கின்றன. தாராளமாக 1000, 2000 டன் நெல் கொள்ளுமளவுக்கான ஒரு களஞ்சியம் இருக்கிறது. (இன்னும் பாழாகாமல்!) தவிர, அரசிகளுக்கான நீச்சல் குளங்கள், உடை மாற்றும் இடங்கள் எல்லாமும், 'பக்கத்து மலை'யில் இருக்கிறது.

''ராஜாங்க, அங்க தங்கிட்டு இங்க வந்து சாமி கும்புடுவாங்க சார்!'' என்று வெகு கலபமாகச் சொல்கிறார் ஒரு மலைவாசி.

மலைவாசி என்றதும் மரவுரி தரித்து, கழுத்து கொள்ளாத மணி மாலைகளுடன் புரியாத மொழியில் கும்மியடித்துப் பாடும் சினிமா முகங்கள் ஞாபகம் வருகிறதென்றால் -



* மலைகளின் இடையே - தொங்கும் பாலம் வழியே...

ஸாரி -

இது வேறு மாதிரி.

''மலைவாசிப் பெண்கள், நுனி நாக்கு ஆங்கிலத்துடன், சல்வார் கம்மீஸ் போட்டுக் கொண்டு - மிரண்டு விடுவீர்கள்!'' என்கிறார் ஓர் உள்ளூர்வாசி!

கோவிலின் ஆச்சர்யம் - கிருஷ்ணர் புல்லாங்குழல் ஊதுவது போலான மூலவர். வேறெங்கும் பார்க்க முடியாத ஆறடி அழகு.

சனிக்கிழமை தவிர மற்ற நாட்களில் கோவிலுக்கு வர அனுமதி கிடையாது. ரிஸர்வ் ஃபாரஸ்ட் ஏரியா என்பது தவிர, முனிவர்கள் பூஜிக்கிறார்கள் என்கிற புராணக் காரணமும் கூட.

'அநுசரி - சனிக்கிழமை என்றல்ல; எந்தக் கிழமையாயினும் சரி, மக்கள் வரத்தான் முடியுமா - இப்படி ஓர் இடத்திற்கு?' என்று கேட்பவர்கள் ஒரு நடை வந்து பார்க்க வேண்டும்.

நமக்காவது டிராக்டர் பாக்கியம் கிடைத்தது. ஏனையோர் அத்தனை தூரத்தையும், உயரத்தையும் (மொத்தமாக 8 கி. மீ.) நடந்தேதான் கடக்கிறார்கள்! மலைமேல் நிற்க இடமில்லா கும்பல்!

கோவிலுக்குப் பின்பக்கம் சில நூறு அடிச் சரிவில் முனிவர்கள் தவம் செய்த குகைகள் இருக்கின்றனவாம்.

''வர்றீங்களா? கயிறு புடிச்சிட்டு இறங்கிப் பார்த்துட்டு வந்துடலாம்?'' என்கிறார் ஓர் மலைவாசி!

ஹிந்து அறநிலையத் துறையின் கீழ் இவ்வாலயம் வராததால் பாதை முதற் கொண்டு, கோவில் பழுது பார்க்கும் பணி வரைக்கும் அத்தனையும் பொது மக்கள் ஆதரவுடன்தான் நடக்கிறது. டி. வி. எஸ். நிறுவனம் - ஸ்ரீ வேணுகோபால சுவாமி கைங்கர்ய டிரஸ்ட் அமைத்து இவ்வாலயக் குடமுழுக்கைச் செவ்வனே நடத்தி முடித்துள்ளது.

நகர சலசலப்புகள் துளியும் கேட்காது ஓசோன் மண்டலப் புதுக் காற்றைச் சுவாசித்து, அமைதி தவழும் மேக முகட்டில், ஆலயச் சூழலில், கண்ணனின் எழிலில் சில மணி நேரங்கள் லயித்துத் திரும்பியது இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு மறக்க முடியாத அனுபவம்.

முடிந்தால், 'தில்' இருந்தால் ஒரு நடை படவேடு போய் வாருங்கள்!

- பா. ராகவன்

புகைப்படங்கள் : கோபிநாத்

சும்மா ருசித்துப் பாருங்கள், இதுவரை பரிமாறியதை!

கடற்கரை ஓரத்தில் சபரி எனும் உணவு விடுதியை நடத்தும் ரங்கா எனும் கஸ்தூரிரங்கன் இளைஞன். அவனது உணவு விடுதியில் சமைப்பவர்கள் வாழ்க்கையில் ஆதரவற்ற பாட்டிகள். சுறுசுறுப்புடன் பரிமாற பன்னிரெண்டு, பதிமூன்று வயதுச் சிறுவர்கள்.

ரங்காவின் 'சபரி' அதன் தனித்தன்மை பெற்ற உணவுப் பண்டங்களால், கவனிப்பால் புகழ் பெற, அதனால் ஈர்க்கப்பட்டு சபரிக்கு வரும் கவிதா எனும் இளம் பெண், ரங்காவின் ஏழைகளுக்கு இரங்குதல், முதியோருக்கு ஆதரவளித்தல், மற்றவருக்கு உதவுதல் போன்ற குணாதிசயங்களால் ஈர்க்கப்பட்டு, அவனைக் காதலிக்கிறாள். காதலைத் தெரிவிக்கிறாள்.

ரங்கா உள்ளூர கவிதாவை நேசித்தாலும், அவளால் வெளிப்படையாக அவளிடம் சொல்ல முடியாமல் போகிறது. காரணம், அவனது சில மர்ம நடவடிக்கைகள்.

சபரிக்கு வரும் சில இறுக்க முக இளைஞர்களுக்கு ரங்கா ஏதோ ஒரு வகையில் உதவுகிறான். அவனது உதவி, சட்டத்திற்கு உட்பட்டதா இல்லையா என்பது புரிபடவில்லை.

காதலிக்கும் செய்தியை டிபார்ட்மென்ட் ஸ்டோர்ஸ் ஒன்றில் மேனேஜராக இருக்கும் ஒரு நரை விழுந்த மனிதரிடம் சொல்லி அனுமதி கேட்கிறாள். அனுமதி வழங்கப்படுகிறது. கவிதாவிடம் தானும் அவளை நேசிப்பதாகக் கூறுகிறான்.

ஒரு விடியற்காலையில் இருள் பிரியும் முன்பே சவுக்குத் தோப்பு அடர்ந்த ஒரு கடற்கரைக்குச் சென்று, படகில் வரும் மீன்களை ஏதோ சங்கேத வார்த்தைகள் சொல்லிப் பெற்று வருகிறான். துரத்தும் போலீஸ் ஜீப்பிடம் இருந்து தப்பிக்கிறான்.

கவிதாவுடன் முதலைப் பண்ணைக்கு மனமகிழ்விற்காகச் செல்லும் போது, அவனை இரு இளைஞர்கள் ரகசியமாகச் சந்தித்து 'நாளைக் காலை மீன் வருகிறது' என்னும் செய்தியைத் தருகிறார்கள்.

அவனது நடவடிக்கைகள் கவிதாவிற்குச் சந்தேகத்தைக் கொடுக்கின்றன. ஒவ்வொரு முறையும் ரங்கா, அவளது சந்தேகங்களுக்கு - அவள் மனம் சமாதானமாகிற வகையில் பதில்கள் தருகிறான். டிபார்ட்மென்ட் ஸ்டோர்ஸ் போல் எல்லாவற்றிலும் இருந்து விலக அனுமதி கேட்கிறான். அனுமதி மறுக்கப்படுகிறது.

கவிதா, தன் காதலன் பெரும் உத்தமன் என்று நம்பி, தன் தோழிகளிடம் அவனைக் காட்டுகிறாள் - தூரத்தில் இருந்து.

தோழிகளில் ஒருத்தி, 'இவனா உன் காதலன்? இவன் திருவான்மியூர் பீச்சோரம் மீன் வாங்க வருவானே. சைவ ஹோட்டல்காரனுக்கு மீன் எதுக்கு?' என்று கேட்டு, புது சந்தேகத்தைக் கிளப்ப, அந்த நேரம் பார்த்து சபரிக்கு வரும் இளைஞன் ஒருவனுக்கு இரும்பு பீரோ திறந்து, ஸ்பெஷலாக ஒரு சிகரெட்டை எடுத்துத் தருகிறான் ரங்கா.

கவிதாவிற்கு ரங்கா மேல் அசாத்தியக் கோபம் வருகிறது.

இனி...?

மடிமீது தலை வைத்து

16

அவன் மேல் சந்தேகப் பொறி ஒன்று தோன்றியவுடன் கவிதாவால் சும்மா இருக்க முடியவில்லை. பொறி, தன்னிச்சையாகப் பெரிதாகி, அணைக்க முடியாத சொக்கப்பனை நெருப்பாக மாறுவதற்குள் அந்தப் பொறியை அணைத்து விட வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

ஜீப்பில் இருந்து மற்றத் தோழிகளை விலக்கிக் கொண்டு இறங்கினாள்.

''ஏய்... எங்கேடி போறே...?'' என்ற வியப்பான கேள்வியையும், ''ஒன்னாலத் தாண்டி பரி, அவ மூடு அப்செட் ஆற மாதிரி சொல்லிட்டியே!'' என்ற அங்கலாய்ப்பையும் நிராகரித்து விட்டு, அவள் கால்கள் மணலில் புதையப் புதைய வேக வேகமாக நடந்தாள். செருப்பு ஒவ்வொரு மிதிக்கும் ஒரு கொத்து மணலைக் காற்றில் வாரி இறைத்தது.

திடீரென்று தனக்கு முன்னால் முளைத்த கவிதாவைப் பார்த்த 'துர்வாசன்', ரங்காவிற்கு மிக வேண்டப்பட்டவள் என்பதால் சந்தோஷ மிகுதியில் ''அக்கா'' என்று கூச்சலிட்டான்.

கவிதா அவனை வெறுமையாகப் பார்த்தாள். அவன் அழைப்பு, எப்போதும் தரும் மகிழ்ச்சியையும் கிளர்ச்சியையும் இன்று தரவில்லை.

ரங்கா ஒரு மர்ம மனிதன். அவன் அந்தரங்கத்தை இன்றைக்கு அம்பலமாக்கி விட வேண்டும்.

கவிதா கடுமையான முகத்துடன் பதில் எதுவும் தராமல் நடப்பது கண்டு, துர்வாசன் அவளை நெருங்கி, அவள் கையைப் பற்றினான்.

''அக்கா... கோவமாக்கா எம்மேல?''

கவிதா அவன் கையை, மேலே பட்ட சிலந்தியை உதறுவது போல் உதறினாள்.

துர்வாசன் திகைத்துப் போய், கவிதா சென்ற திசையைப் பார்த்தான். அவள் பார்வை சுட்டு விடும் தீப்பார்வையாக ரங்காவைப் பார்த்துக் கொண்டிருக்க, ரங்கா அவளுக்கும் பிடிக்காத ஒரு மரக்கட்டை மூஞ்சிக்காரனுக்கு ஸ்பெஷல் ரூபிங்கம் எடுத்துத் தந்து கொண்டிருந்தான்.

சுபா

கீதாவின் கோபத்திற்கான காரணத்தை அவனால் ஒருவாறு யூகிக்க முடிந்தது. கொஞ்ச நாட்களுக்கு முன்னால் கூட, ரங்கா இப்படிப்பட்ட ஏதோ ஓர் தேவையற்ற கஸ்டமருக்கு முக்கியத்துவம் கொடுத்து விட்டு, அக்காவைக் கவனிக்காமல் விட்டான் என்றுதானே அவள், ரங்காவைக் கோபித்துக் கொண்டாள்?

ரங்கா எவ்வளவோ நல்லவன்தான். தன்னிடம் வேலை செய்யும் பையன்களிடம் அவன் மாறா அன்பு வைத்திருப்பவன். ஒரு தலைவலி, கால்வலி, வயிற்று வலி என்று எந்தப் பையனாவது சொன்னால் பதறிப் போகிறவன். வயிறார உணவளிப்பவன். தங்க, நிழல் கொடுப்பவன். நல்ல தரமான உடையளிப்பவன். பராமரிப்பாளன். முதலாளி. கடவுள். அப்படிப்பட்டவன், தனக்குப் பிடிக்காத முகம் உடையவர்களுக்கு சிறப்பான கவனிப்பைத் தருகிறான் என்பதற்காக, கோபித்துக் கொள்ள முடியுமா? இல்லை, கீதா கோபிக்கிறாள் என்பதற்காக அவள் கோபத்தை நியாயம் என்று ஒத்துக் கொள்ள முடியுமா?

கீதாவை, இப்போது ரங்கனிடம் போக விட்டால் இடியும், மின்னலுமாய் ஒரு கோபப் புயலும் தொடர்ந்து, விடாத கண்ணீர் மழையும் உருவாகும் என்று தோன்றியது.

''அக்கா. ரங்காவை நான் கூட்டி வரேங்க்கா. நீ இங்க உக்காரேன்!'' என்று அவள் வழிமறித்து ஏறக்குறைய கெஞ்சினான். கீதா அவனை மதிக்கிறாற்போல் தோன்றவில்லை. அவனை மீறி நடந்தாள். 'தூர்வாசன்' ஒன்றும் செய்யத் தோன்றாதவனாய்ச் சுற்றிலும் பார்க்க, உள்ளிருந்து வெளியே வந்த 'நடராஜன்' தெரிந்தான்.

நடராஜன் தலையில் உயரமான 'ஷெஃப்' தொப்பியும், வெள்ளை ஏப்ரனுமாய், கையில் பிடித்திருந்த தவாவோடு இருந்தான். தூர்வாசனையும் அவன் பார்வையையும் அதில் இருந்த கெஞ்சலையும் பார்த்து, சூழ்நிலையை உடன் மனதில் வாங்கிக் கொண்டான்.

'ஸ்ஸ்ஸ்' என்ற சப்தத்துடன் புகை ஆவி எழுப்பிக் கொண்டிருந்த தவாவுடன், கீதாவின் வழி மறித்தான்.

''ஹலோ கீதா. வாங்க. வாங்க. உக்காருங்க. நடராஜனோட இன்னிய ஸ்பெஷல் சோயா- காலி சிஸ்லர். சிஸ்லர் எப்பவுமே நான்-வெஜ் ஹோட்டல்லதான் செய்வாங்க. இங்க நாங்க சோயாவோட டேஸ்ட் மேக்கரையும், காலிஃப்ளவரையும் வேக வச்சி, நல்லா மசிச்சி தவால போட்டு கொழுப்பில்லாத எண்ணெய் ஊத்தி ஸ்ஸ்ஸ்... சிஸ்லர். சாப்ட்டுப் பாருங்களேன். ப்ரோட்டீன் தேவைப்படறவங்களுக்குன்னு நாங்க ஸ்பெஷலா பண்ற ஐட்டம். ஒடம்பைக் கெடுக்காது. ரொம்ப நல்லாருக்கும்.''

''நடராஜன்... கொஞ்சம் வழியை விடறீங்களா?''

நடராஜன், அவள் பார்வையில் இருந்த கூர்மையையும், வார்த்தைகளில் இருந்த கண்டிப்பையும் உணர்ந்து, தானாக ஒதுங்கி வழியை விட்டான். தவாவில் இன்னும் சோயாகாலியின் ஸ்ர்ர்ர். தனது கையாலாகாத பார்வையை தூர்வாசன் பக்கம் திருப்பினான். இருவருமாய் உதடுகளைப் பிதுக்கிக் கொண்டார்கள்.

கஸ்தூரிரங்கன் கடைசி வினாடியில் தான் அவளைப் பார்த்தான். உடன் முகத்தில் மலர்ச்சி. மைக்கேல் ஜாக்ஸனை அருகில் நின்று தொட்டுப் பார்த்து விட்ட ரசிகனின் முகத்தில் ஏற்படும் மலர்ச்சி.

''கீதா... வாட் எ சர்ப்ரைஸ்!''

''நான் ஒண்ணும் கொஞ்சிக் குலாவிட்டுப் போக வரலை!''

''போச்சுரா. மறுபடி நீரும் - நெருப்புமா?''

''ரங்கா!''



அவள் குரலில் இருந்த அதட்டலை உணர்ந்து கஸ்தூரிரங்கன் திகைத்தான்.

''என்ன கவிதா?'' என்றான் திகைத்துப் போய்.

''அது என்ன அந்த ஆளுக்கு மட்டும் ஸ்பெஷலா சூயிங்கம்? அப்புறம் கொஞ்சம் முன்னாடி ஒரு தடியனுக்கு அங்கேர்ந்து சிகரெட் எடுத்துத் தந்தீங்களே. எதுக்கு? அதான் சிகரெட் பாக்கெட்டா உங்களுக்கு முன்னால அடுக்கி இருக்கே. என்னவோ பாங்க் லாக்கர்லேர்ந்து எடுத்துத் தர மாதிரி எடுத்துக் குடுத்தீங்களே. ஏன்? டிரக்தானே? போதை மருந்துதானே?''

''ஃப்பூ... இவ்வளவுதானா?'' என்றான் கஸ்தூரிரங்கன்.

''மழுப்பற வேலைல்லாம் வேணாம். எனக்குக் கரெக்டான பதில் தெரியணும்!''

''அது ஃபாரின் சிகரெட். ஃபாரின் சூயிங்கம். வெளில வச்சா சிகரெட்டை நள ராஜன் காலி பண்ணிடுவான். சூயிங்கத்தை பையனுங்க எடுத்து சாப்ட்ருவானுங்க. அத னாலதான் பீரோல வெச்சிப் பூட்டிவிருக் கேன். ஒனக்கு ஒண்ணுதரேன். சாப்பிடேன்'' என்று சொல்லிக் கொண்டே பின்னால் இருந்த ஷெல்ஃபின் கதவைத் திறந்து ஒரு சூயிங்-கம் பாக்கெட்டை எடுத்தான். அவன் சொன்னது போல் அயல்நாட்டு சூயிங்கம் பாக்கெட்தான் அது. பீரோவில் வரிசையாக அதே சூயிங்கம் பாக்கெட்டுகள் இருந்தன. அயல்நாட்டு சிகரெட் பாக்கெட்டுகளும், பத்துப் பதினைந்து கம்பெனிகளின் சிகரெட் கார்ட்டன்களும் இருந்தன. கவிதா பார்த் தாள். அப்பா எப்போதாவது புகைக்கும் டன்-ஹில் பாக்கெட்டும், ராத்மன் பாக்கெட் டும் கூட அவற்றில் இருந்தன.

கஸ்தூரிரங்கன் அவளுடைய உள்ளங் கையில் ஒரு சூயிங்கம் வில்லையை வைத்து மெல்ல அழுத்தினான்.

''சாப்பிடு கவிதா!''

கவிதா வாயில் போட்டாள். மென்றாள். மென்த்தாலின் வாசனை வாயை நிறைத்தது.

''சிகரெட்?'' என்றாள்.

''அது கூட பிடிப்பியா நீ?'' என்று கேட்டுக் கொண்டே ஒரு நான்கைந்து பாக் கெட்டுகள் எடுத்துப் போட்டான் கஸ்தூரி ரங்கன். ''எடுத்துக்கோ. எது வேணும்னா லும் எடுத்துக்கயேன்...''

''ச்சீ. என்னைப் பாத்தா சிகரெட் பிடிக்கறவளாட்டமா இருக்கு?''

''ஒன்னைப் பத்தி என்னால எதுவுமே சொல்ல முடியலப்பா. வெள்ளரி பத்தை மிளகாத்தூள் தடவி சாப்பிடறே. கட்ட சோளம் சாப்பிடறே. சூயிங்கமும் மெல்றே. ஒரு வேளை சிகரெட் பிடிச்சாலும் பிடிப்பி யோன்னு தோணிச்சி...''

''தூ...தூ...தூ...''

''துப்பிட்டேன். எம் மேல ஏதாவது கோவம் இருந்தாக் கூட துப்போட சேர்ந்து வெளில வந்து வுழுந்துடும்!''

''இல்ல ரங்கா. இந்தப் பரி இல்ல பரி...''

''பரின்னா?''

''பரிமளா. என் ஃப்ரெண்டு. ஒங்க ளைத் திருவான்மியூர் பீச்ல காலங்கார்த்தால பாத்திருக்கேன்னு சொன்னா. அதுவும் நீங்க படகோட்டிக்கிட்டு வர்றவங்ககிட்டே செத் துப் போன மீனையெல்லாம் வாங்குவீங் கன்னு ரீல் சுத்தினாளா? நான் நம்பிட்டேன். அப்பப் பாத்து அந்தத் தடியன் வந்தானா? நீங்க அவனுக்குன்னு இந்த பீரோவைத் தொறந்து சிகரெட் எடுத்துக் குடுத்தீங் களா...? உன் உத்தம ஹீரோவுக்கு போதை மருந்து வெவகாரம் கூட இருக்கு போல டின்னாங்களா...''

''ஒடனே கவிதாவுக்கு சந்தேகம் வந்தி ரிச்சா. கொதிக்கக் கொதிக்க வந்தாளா? இப்பக் குளுகுளுன்னு ஆயிட்டாளா! பைத் தியம்னா சரியான பைத்தியம்! நான் திரு வான்மியூர் பீச்ல மீன் வாங்கறது நெஜந் தான். செத்துப் போன மீனு, சாகாத மீனு எல்லாம் வாங்குவேன். ஒன் குதிரை - அதான் பரி பாத்தது ஒண்ணும் தப்பில்லே. கரெக்டாத்தான் பாத்துச் சொல்லியிருக்கா. 'வெஜிடேரியன் ஹோட்டல்காரன் எதுக்கு தான் வெஜிடேரியன் விஷயமெல்லாம் வாங்கறான்? இதுல ஏதோ மர்மம் இருக் கு'ன்னு நீ நெனைச்சிட்டே. கரெக்டா?''

கவிதா அவனைக் குழப்பமான ஒரு பார்வை பார்த்தாள்.

''முழிக்காதே. சொல்லிடறேன். ஆழ் வார்ப்பேட்ல ஒரு டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோருக்குப் போவேனே, தெரியும் இல்ல? நீ கூட என்னை ஃபாலோ பண் ணிட்டு வந்தியே...''

கவிதா வெட்கப்பட்டாள்.

''அந்த டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர் லே°க்கு புது மீன் வேணும்னு கேப்பாங்க. நான்தான் அவங்களுக்கு மீன் ஃப்ரெஷ்ஷா வாங்கித்தரேன். ஸ்டோர்ஸ்ல அதை ட்ரெஸ் பண்ணி, ஃப்ரீஸர்ல வெச்சி வித்துடுவாங்க. அதனால டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ°க்கு ஒரு ஸர்வீஸா பண்றேன். பதிலுக்கு எனக் குக் கொடுக்கற ப்ரொவிஷனைக் கொஞ்சம் டிஸ்கவுண்ட் போட்டுக் குடுப்பாங்க.''

''ஐயய்ய. அதுக்குன்னு மீனையா வாங் கிக் குடுப்பீங்க? உவ்வே!''

''மாமி! பரீட்சைக்கு வெச்சிக்கிட்டு எழுத ஒரு அட்டை இருந்தாக் கொடுங்க!''

''இல்லியேடா!''

''அப்ப நீங்க பண்ற ஒரு சப்பாத்தியைக் கொடுங்க போதும்!'' - கார்த்திக் ராஜா





"நடகள விளையாட்டுகளுக்குத் தலைமை ஏற்க வந்த தலைவர் 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்'னு ஏன் அலறி அடிச்சி ஓடறாரு?"

" 'குண்டு எறியும் போட்டி' நடக்கப் போற துன்னேன். தப்பாப் புரிஞ்சுக்கிட்டார் போலிருக்கு!"

- நெல்லை சிவக

"தொட்டா ஒண்ணும் மீன் வாசனை ஒட்டிக்காது!"

"வாசனையா? நாத்தம்!"

"மீன் சாப்பிடறவங்க கிட்டப் போய் நாத்தம்னு சொல்லிப் பாரு. ஒன் காதை அறுத்துடுவாங்க. இன்னிக்கு சபாரில சில்வர் ஸ்பெஷல் ஜுட்டம். சாப்பிடறியா கதோ?"

"என் ஃப்ரண்ட்ஸுக்கும் சேர்த்து சர்வ் பண்றீங்களா?"

"சந்தோஷமா!"

"சைட் அடிக்கலாம்னு ஐடியாவா?"

"மரத்துக்கு மரம் தாவறதிலே ஒன்னை மாதிரி எக்ஸ்பர்ட்டை நான் பார்த்ததேயில்ல கதோ. நடராஜ்... நடராஜ்... எத்தனை ஃப்ரெண்ட்ஸ் கதோ?"

"ஆறு பேர்."

"ஏழு சில்வர்" என்று காதருகே உள்ளங்கையைக் குறுக்கில் வைத்துக் கத்தினான் கஸ்தூரிரங்கன்.

"வெறும் சில்வர் மட்டும் போதாது."

"வேறென்ன?"

"நாளைக்கு என்னோட முட்டுக்காடு வரணும்!"

"சரி."

"படகுல ரெண்டு பேரும் ஜாலியா சவாரி போகணும்."

"சரி."

"முட்டுக்காடு பாலத்துக்கடியில போய்ப் படகை நிறுத்திட்டுக் கொஞ்ச நேரம் பீச்சுக் காத்து வாங்கணும்!"

"அ வ் வ ள வு தா னா, இன்னும் இருக்கா?"

சிரித்தாள். சிரித்தான்.

முட்டுக்காடு. கடற்காற்று பிய்த்து உதறிக் கொண்டிருந்தது. நல்ல மேகங்கள் அடர்ந்த தங்கம் தோய்த்த வான். சூரியன் மறைந்திருந்தது. காற்றில் இருந்த குளிரும், ஈரத்தன்மையும் ஊட்டியை ஞாபகப்படுத்தின.

கதோ அண்ணாந்து பார்த்து, கண்களைச் சுருக்கிக் கொண்டு சிரித்தாள். இரு கன்னங்களிலும் கைகளைத் தேய்த்து வைத்துக் கொண்டாள்.

கஸ்தூரிரங்கன், அவளை ரசித்துக் கொண்டே, தோள் நரம்புகள் புடைக்க, துடுப்பை நீரில் துழாவித் துழாவிப் படகைச் செலுத்தினான். நீரில் மோதிய துடுப்புகளால் நீர்த்திவலைகள் குளிர்ச்சியாய்க் காற்றில் தெறித்தன. தூரத்தில் தெரிந்த ஒரு மணல் திட்டில், பறந்து விழுந்த வெள்ளைக் காகிதப் பொட்டலங்கள் போல வெண் கொக்குகள்.

எந்த நிலையிலும் வாழ்க்கையை ரசிக்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். கொதிப்பு கூடாது. கொதிப்பை அகற்றா விட்டால் அல்லல் வரும். அது தொடரும். சுகம் மறையும். வாழ்வு கெடும். வாழ்க்கையை வெறுக்கவோ, மறுக்கவோ கூடாது. வாழப் பிறந்தவர்கள் நாம், வாழத்தான் நாம் படைக்கப்பட்டிருக்கிறோம்.

கஸ்தூரிரங்கன், கதோவின் அண்மை கொடுத்த உற்சாகத்தில், மகிழ்ச்சியில் துடுப்பை வேக வேகமாய்த் துழாவினான்.

கதோ கைப்பை திறந்து, சோப்பு நீர் நிறைந்த பாட்டில் ஒன்று எடுத்து, வளைக்கப்பட்ட கம்பியுடன் கூடிய ஒரு விரல் நீள பிளாஸ்டிக் ஊதுகுழல் எடுத்து, சோப்பு நீரில் முக்கி, பூப் பூவாய் ஊத, குமிழ்கள். குமிழ்கள். குமிழ்கள். வெளிச்சம் பட்டு குமிழ்களில் வானவில் நிறங்கள். கதோ சிரித்தாள்.

"சின்னச் சின்ன ஆசை!" என்றாள்.

திடீரென பட்டாக வெடிக்கிற மாதிரி ஒரு சப்தம். அவர்கள் இருந்த படகு அதிர்ந்தது. படகின் உட்புறத்தில் ஒரு ஓட்டை திடீரென முளைத்தது. நீர், திமிறிக் கொண்டு படகில் சளசளவென்று நுழைந்தது.

கஸ்தூரிரங்கன் அதிர்ச்சியில், துடுப்புகளில் ஒன்றை நழுவ விட்டான். கதோ பய அலறலை எழுப்பி, சோப்பு நீர் பாட்டில் எகிற, கம்பி வளைய ஊதுகுழல் சிதற, உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து கஸ்தூரிரங்கனை நோக்கிப் பாய்ந்தாள்.

கஸ்தூரிரங்கன் அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்தான். சற்று தூரத்தில் தெரிந்த பாலத்தின் மீது நின்றிருந்த ஒரு மாருதி கார் மெல்ல நகர்ந்து வேகம் பிடிக்க, அதன் கதவு திறந்து, பாய்ந்து ஏறியவன் கையில் ஒரு ரைஃபிள் இருந்ததைக் கஸ்தூரிரங்கன் கடைசி வினாடியில் கவனித்தான்.

பட்டாக போல் சப்தம், ரைஃபிள் இயக்கப்பட்டதால் எழுந்திருக்கிறது. படகில் விழுந்த ஓட்டை, துப்பாக்கி குண்டால் ஏற்பட்டது. அந்தக் குண்டு தன்னை நோக்கிச் சுடப்பட்டது.

கஸ்தூரிரங்கனின் மூளை சின்னச் சின்ன செய்திகளாய் நடந்ததை உணர்ந்து கொண்டிருந்த போது, படகு மெல்ல மெல்ல நீரில் மூழ்கத் தொடங்கியது.

(தொடரும்)

அப்புசாமியும் ஸ்வீட் ஸிக்ஸ்டீனும்!

பாக்கியம் ராமசாமி

அப்புசாமி உறிஞ்சிப் பார்த்தார், அட்டைப் பெட்டிகளின் மணத்தை. தூக்கிப் பார்த்தார் கனத்தை. நொந்து கொண்டார் தலை எழுத்தை. வெறுத்தார் மனைவியின் அராஜகத்தை. விரும்பவில்லை அவளுடைய சிக்கனத்தை.

ஸ்வீட்டுகளின் நறுமணம் கமகமவென்று அவர் நாசியில் புகுந்து சரவி வாசித்தது. மெட்ரோ வாட்டர் டாங்க் கன்னாபின்னாவென்று கசிவது போல எச்சில் ததும்பி வழிந்தது.

பஞ்ச பாண்டவர்கள் தங்கள் பஞ்ச காலத்தில் கேட்டது போல அவர் யாசித்தது. நேசித்தது ஒரே ஒரு ஸ்வீட் பெட்டியை. ஈவிரக்கமில்லாமல் சீதாப் பாட்டி மறுத்து விட்டாள். "நத்திங் டூயிங்!"

பாட்டிகள் முன்னேற்றக் கழகத்தின் முந்நூறு உறுப்பினர்களுக்கு மட்டும்தானாம் அந்த ஸ்வீட் சிக்ஸ்டீன்கள்! ஒவ்வொரு பெட்டியிலும் பதினாறு வகை ஸ்வீட்டுகள்.

'ஸிங்கிள் ஸ்வீட்டுக்கு அவனவன் ஸிங்கி அடிக்கிற போது கிழவிப் பட்டாளம், கின்னாரம் கொட்டுதே. இது பொறுப்பதில்லை கிழவீ, ஒரு ஸ்வீட்டினை எடுத்து விழுங்கிடுவேன்' என்று உணர்ச்சி வசப்பட்டு அப்புசாமி ஒரு பெட்டியை வன்முறை காட்டித் திறக்க முயன்றார்.

அவருடைய உயிரின் மேல் தோலைப் பிய்த்து விட்டது போலப் பாட்டி அலறியவாறு ஓடி வந்து, "டோன்ட் ஓபன் இட் ஐ ஸே!" என்று அவர் கையிலிருந்து அதை வெடுக்கெனப் பறித்து விட்டாள். "ஒரு பாக்கெட் ஸ்வீட் முந்நூறு ரூபாய். ப்யூர் பாதாம். ப்யூர் கீ.. ப்யூர் ப்ரிபரேஷன். ப்யூர்லி ஃபார் மெம்பர்ஸ். பாக்கெட் மேலே சுற்றியிருக்கிற கிஃப்ட் ராப்பர் அலோன் காஸ்ட்ஸ் பைவ் ருபீஸ்..." என்று அவரை ஸ்தலத்திலிருந்து உடனடியாக ஹைஜ்ரத்பால் செய்ய முயன்றாள்.

'பாக்கெட் கி அந்தர் க்யாஹை!' என்று தெரிந்து கொள்ளத் துடித்தார் அப்புசாமி. வாழ்க்கையில்தான் எந்த அசல் ஸ்வீட் ஸிக்ஸ்டீனையும் ஸ்பரிசித்ததில்லை. ஸ்வீட் பாக்கெட்டைக் கூடத் திறந்து பார்க்கக் கூடாதா? தொடக் கூடாதாமே.

அப்புசாமி ஸ்வீட் பாக்கெட்டுகள் அடுக்கப்பட்டிருந்த அறைக்கு வெளியே சப்பணங்கால் போட்டு உட்கார்ந்து கொண்டார். கீழ்க்கண்டவாறு உரக்க ஜெபிக்கத் தொடங்கினார்.

ஓம் க்ரீம் ஐஸ்!

கிழடே ஸ்வாஹா!

சிக்புக் ரயிலே ஸ்வாஹா!

கலக்குது பார் இவன் ஸ்டைலே ஸ்வாஹா!

வயிறே போஹா

ஊம். ஹாம்.

வலியே ஸ்வாஹா!

பாட்டிக்குப் புரியவில்லை. "என்ன உளர்றீங்க?" என்றாள்.

"இதுதாண்டி நீபா வலி மந்திரம்! இந்த ஸ்வீட்டுகளைச் சாப்பிடுகிற கிழவிகள் எல்லாரும் வயிற்று வலியால் துடிக்க வேண்டும் என்று ஸ்பெஷலாக நானே இயற்றியது. ஓம் வயிறே போஹா... வலியே ஸ்வாஹா..."

"உங்க பேத்தலை வீடு வீடாக விடியற் காலையில் போய்ச் சொன்னாலும் வேத மந்திரம்தான் சொல்ல வந்திருக்கிறார்களாக்கும் என்று யாராவது பிச்சை போடுவார்கள். கெட்லாஸ்ட்!"

அப்புசாமி விருட்டென்று எழுந்து கொண்டார். "பிச்சைதானே! எடுக்கறேண்டி. எடுக்கிறேன். 'பவதி பட்டாஸ் தேஹி! தாயே நாலு ஸ்வீட் போடுங்க'ன்னு பிச்சை எடுக்க இதோ புறப்படுகிறேன். அப்புறம் நீயே என் காலில் விழுந்து கையில் விழுந்து. இன்னும் பல இடங்களில் விழுந்து 'நாதா! இந்தாங்க ஒரு பாக்கெட்டுக்கு ஒன்பது பாக்கெட்!' என்று என்கிட்டே சரணாகதி அடையப் போகிறே."

அப்புசாமி தெருவில் நின்று கொண்டு சிறிது மண்ணை எடுத்துத் தன் மந்திரத்தை உச்சரித்து, பாட்டி பக்கமாக ஃப்ளையிங் கிஸ் மாதிரி ஊதினார்.

வேறு வழியின்றி ஒரு தம்ளர் தண்ணீரைக் கணவனை நோக்கி வீசினாள் சீதாப்பாட்டி.

அப்புசாமியின் பல சவால்கள், ஆரத்தனத்தோடு சீறி விட்டுச் சில நிமிடங்களில் கடலுக்குள் கர்ணம் போட்டு விழும் ஏவுகணை சமாசாரம்தான் என்பதை அவள்

அறிவாள். பழுத்த சுமங்கலியான அவள், அப்புசாமியின் எத்தனையோ பிஞ்சு சவால்களைக் கண்டிருக்கிறாள், சமாளித்திருக்கிறாள்.



சீதாப்பாட்டி காரை ஸ்டார்ட் செய்து கொண்டிருந்தாள். கார் நிறையப் பின் ஸீட்டில் ஸ்வீட் மிக்ஸடன் பாக்கெட்டுகள்.

ரசகுண்டு ஓட்டமும் நடையுமாகப் புத்தம் புது வேட்டி சரசரக்க எதிரே விரைந்து வந்து கொண்டிருந்தான்.


''ஓ! தீபாவளி ஆசிர்வாதம் வாங்கிக் கொள்ள வருகிறானா?''

ஆனால் ரசகுண்டு பாட்டியின் காலில் விழவில்லை. பதற்றத்துடன் நெருங்கி, ''பாட்டி! பாட்டி! உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதா?'' என்றான்.

''வாட் இஸ் த பிக் நியூஸ்...'' என்றாள் சீதாப்பாட்டி.

''எப்படிச் சொல்வதென்றே தெரியலே பாட்டி. நீங்க அவரைப் பிச்சை இச்சை எடுக்கச் சொன்னீங்களா? பா.மு.க. மெம்பர்கள் வீடாகப் பார்த்து வாசல்லே நின்னு, 'அம்மா தாயே! தீபாவளி ஸ்வீட் எதுனாத் தின்னு மிஞ்சியது, விருந்தாளித் தட்டுகளிலே ஓரம் கட்டின சொச்சம் ஏதாவது இருந்தால் போடுங்க தாயே'ன்னு குரல் கொடுக்கிறார். பட்டாஸுக்கு ஒரு ஜோல்னா, ஸ்வீட்டுகளுக்கு ஒரு ஜோல்னா, காரத்துக்கு ஒரு ஜோல்னா என்று தோளில் மூன்று அழுக்குத் துணி மூட்டைகளுடன் வடக் கத்திப் பைராகி மாதிரி தெருத் தெருவாகப் போய்க் கொண்டிருக்கிறார். என் வீட்டுக்குக் கூட வந்து கேட்டாரர். ருக்குமணி காப்பி தந்தாள். அதைக் கூடக் குடிக்காமல், 'காப்பியை இதுலே ஊத்து தாயே'ன்னு அதுக்குன்னு இடுப்பிலே கட்டிக் கொண்டிருக்கிற ஒரு கன்றாவிப் பித்தளை கூஜாவில் ஊற்றச் சொல்லி வாங்கிக் கொண்டார்.

''உங்க எதிரி பொன்னம்மா டேவிட் இருக்கிறாளே, அவள் வீட்டுலே போய்க் கெஞ்சியிருக்கிறார். அந்தக் கிழவி உங்க மேலே இருக்கிற கோபத்தைத் தாத்தா மேலே காட்டி விட்டாள். நாயை அவிழ்த்து விட்டு, நாய் ஓடி வர, தாத்தா 'யாமார்க்கும் குடியல்லோம், நாயை அஞ்சோம்'னு அங்கேயே நின்னிருக்கார். காலை நன்றாக வெடுக்கென்று நாய் பிடுங்கி, ரத்தமான ரத்தம். தற்செயலாக நானும் பீமாவும் அந்தப் பக்கம் போன போது பார்த்து, தாத்தாவுக்குக் காலைக் கட்டி, ஒரு இடத்திலே உட்கார வெச்கட்டு வந்திருக்கேன். நீங்க ரூபாய் கொடுத்தால் தாத்தாவை ஒரு ஆட்டோ வெச்சி நானும் பீமாவும் ஜி.ஹெச்க்குக் கூட்டிப்





"ஃபேக்டரில வேலை செய்யற உன்னால ஒரு பைசா கூட சேமிக்க முடியலையே! ஏன்?"

"என்ன பண்றது... நான் வேலை செய்யறது 'சேமியா' ஃபேக்டரி ஆச்சே!"

- இரா. வசந்தராசன்

போய் ஊசி போட்டுக் கொண்டு வந்து விடுகிறோம்.''

சோப்பாட்டி காரை ஸ்டார்ட் செய்தாள். ''நான் பைசா தரப் போவதில்லை. அவருக்கு இது ஒரு லெஸன் ஆக இருக்கட்டும்.''

''பாட்டி, உங்களுக்கு இவ்வளவு கல் மனசு கூடாது பாட்டி.''

''போதும் உன் தூது'' கார் சீறிக் கொண்டு கிளம்பி விட்டது.

சோப் பாட்டி முதல் ரவுண்ட் சுற்றி விட்டு மத்தியானம் வந்து சிறிது ஓய்வெடுத்த போது பிற்பகல் இரண்டு மணியிருக்கும்.

இன்னும் ஒரு முப்பது வி.ஐ.பி.க்களைப் பார்க்க வேண்டியிருந்தது. அதற்குள் ஒரு சின்னக் குட்டித் தூக்கம் போட்டால் தேவலை.

வாசலில் குரல் கேட்டது. ''அம்மா தாயே! அன்னபூர்ணி! ஸ்வீட் பூர்ணி! எதுனாப் பட்டாக, ஸ்வீட், காரம் இருந்தாப் போடு தாயே... ஸ்வீட் பிக்ஸ்டீன் கூடப் போடலாம் தாயே..

இன்னும் உங்க வயித்தை வலிக்கலையா தாயே... வயித்து வலியால்தான் படுத்திருக்கியாடி தாயே!

''ஓம் க்ரீம் ஐஸ்! கிழடே ஸ்வாஹா! சிக்குக் ரயிலே ஸ்வாஹா! கலக்குது பாரு இவன் ஸ்டைலே ஸ்வாஹா! வலிரே போஹா! ஊம்... ஹூம். வலியே ஸ்வாஹா''

சோப்பாட்டி கதவை லொடக்கென்று திறந்தாள்.

பாட்டியைப் பார்த்ததும் அப்புசாமி, ''அம்மா தாயே! ரெண்டு கண்ணாலே இந்தக் கோரத்தைப் பாரு தாயே! இரண்டு நாயையும் கால் கடிக்க.. இல்லே, இல்லே... ரெண்டு காலையும் நாய் கடிக்க... வழியெல்லாம் தொரதொரன்னு ரத்தம் ஊத்தி... இப்ப உடம்புலே எலும்பு மட்டும் லொட லொடன்னு ஆடுது தாயே...''

''மை காட்! என்னது இது கோரம்!'' பதறினாள் சோப்பாட்டி.

''ரத்தம் பார்த்தியா ரத்தம்... யாருக்காவது தானம் கொடுத்தாலும் பைசா கிடைக்கும். நாய்கிட்டேயிருந்து காசு வசூல் பண்ண முடியுமா? அதுவும் பெரிய பெரிய பல்.''

முதலிலே டாக்டர்கிட்டே போய் ஊசி போட்டுக் கொண்டு வாருங்கள்.''

''சீதே! அதைத்தான் நான் ரசகுண்டுகிட்டே சொல்லி அனுப்பினேன்.''

''நான் கொஞ்சம் பிஸியாயிருந்துட்டேன்.''

''சீதே! கட்டின கணவனை நாய் கடிச்சுட்டுதுன்னு தெரிந்ததும், பத்தினியாயிருக்கிறவள் ஓடி வர வேண்டாமா? மறுபடியும் சாயந்தரம் ராப்பிச்சைக்குக் கிளம்பப் போகிறேன். அதைச் சொல்லிப் போகறதுக்குத்தான் வந்தேன்.''

''ப்ளீஸ்!'' என்று கெஞ்சினாள் சோப்பாட்டி. ''என் தப்பை நான் உணர்ந்து விட்டேன். உங்களுக்காக மூணு ஸ்வீட் பிக்ஸ்டீன் பாக்கெட் ரெடியாக எடுத்து வைத்திருக்கிறேன்.''

''சப்பாஷ்!'' என்று குதூகலித்தார் அப்புசாமி. அவரை நாயும் கடிக்கவில்லை.



போலீஸ்காரர் : ஏண்டா இன்ஸ்பெக்டர் மயங்கி விழுந்துட்டாரு?

கேடி : 'குடிச்சிருக்கியான்னு பார்க்கணும்; வாயை ஊது'ன்னாரு. ஊதினேன். மயங்கி விழுந்துட்டாரு!''

- நெல்லை சிவக

பேயும் பிராண்டவில்லை. சிவப்பு மையை ஊற்றிப் போலியாக ஒரு செட்டப் செய்து கொண்டிருந்தார்.

''ப்ளீஸ்! குளித்து விட்டு வாங்க...'' என்றாள் உள்ளிருந்து சீதாப்பாட்டி.

அப்புசாமி குளித்து முடித்துக் கபகப வென்ற பசியுடன் முன்னேறினார்.

''இப்பத்தான் என்.டி. ராமாராவ் மாதிரி சார்மிங்காக, ஆணழகனாக இருக்கிறீர்கள். எனக்குச் சரியான லெஸன் டீச் பண்ணிட்டீங்க. எங்கே அந்த தீபாவளி மந்திரத்தை இன்னொரு தரம் சொல்லுங்க...''

அப்புசாமி பூரிப்புடன் ஓம் க்ரீம் ஜூஸ்! கிழடே ஸ்வாஹா! என்று ஆரம்பித்து, ஒதி முடித்தார்.

சீதாப்பாட்டி கலகலவென்று சிரித்தாள். ''உங்க மந்திரம் வெரு ஃபன்னி...''

''நீ ஒரு பன்னி!'' என்று சிரித்த அப்புசாமி, ''இத்தனை நாடகம் ஆடலை யென்றால் நீயாக மூன்று ஸ்வீட் விக்ஸ்டீன் பாக்கெட்டை இப்போ எனக்குத் தருவாயா?'' என்றவர் ஆவலுடன் பாக் கெட்டைப் பிரிக்கத் தொடங்கினார்.

''நோ ப்ளீஸ்... உங்க ஃப்ரெண்ட்ஸ் ரசகுண்டு, பீமா இவர்களோடு தீபாவளியைக் கொண்டாடுங்கள்.''

''அப்படின்றே? சரி. இப்போ என் வயிறு கத்துதே. பசின்னு துடிக்குதே...''

''பசிச்சாத்தான் நல்லது. ஸ்வீட்டுகளை ரசிக்க ருசிக்கச் சாப்பிடுவீங்க...''

''சீதே! நீ இவ்வளவு தாராளமாக இருப்பேன்னு நினைக்கவே இல்லை...!''

அப்புசாமி ஸ்வீட் விக்ஸ்டீன் பாக் கெட்டுகளைச் சுமந்து கொண்டு லொங்கு லொங்கென்று ரசகுண்டுவின் வீட்டுக்குப் போனார். பீமாவும் அங்கே இருந்தான்.

''வெற்றி! வெற்றி! ஸ்வீட் விக்ஸ் டீன்! ஸ்வீட் விக்ஸ்டீன்! ஸ்வீட் விக்ஸ்டீன்! ஆளுக்கொரு ஸ்வீட் விக்ஸ்டீன் பாக்கெட்! முந்நூறு ரூபாய் ஸ்வீட்!''

''பேசாமே பிரி தாத்தா!'' பீமாராவ் அவசரப்படுத்தினான்.

''இருடா பாதுஷா வாயா'' என்று கவுண்டமணி பாணியில் ரசகுண்டு அவன் ஆர்வத்துக்கு அணை போட்டான்.

அப்புசாமி முதல் பெட்டியைப் பிரித்தார். உள்ளே கருகருவென்று ஜல்லிக் கல்!

பரபரப்புடன் ரசகுண்டு இன்னொன் றைப் பிரித்தான். கருகருவென்று ஜல்லிக் கல்.

அடுத்த இதழில்...



●● கட்சிக்குள் எதிர்ப்பு : வாழப்பாடி என்ன செய்யப் போகிறார்? – கவர் ஸ்டோரி

●● இன்றைய ஸ்பெஷல் : அருகம்புல் ஜூஸ்! – மருத்துவக் கட்டுரை!

மூன்றாவது பாக்கெட்டை பீமா பிரித் தான். கருகருவென்ற ஜல்லிக் கல்.

''தாத்தா!'' என்றான் ஈனசுரத்தில் ரசகுண்டு. ''பாட்டி மனசு கல் மனசு தாத்தா! என்னவோ சீட்டு மாதிரி தெரிகிறது பாருங்கள்... ரூபா நோட்டு சீட்டாக இருக்கப் போகுது...!''

அப்புசாமி பல்லை நறநறத்தார்.

''நோட்டு வைக்கிறவளா அவள்! வேட்டு வைக்கிறவள்!'' என்றவாறு காகி தத்தைப் படித்தார்.

டியர் சார், ஹாப்பி தீபாவளி!

ஸ்வீட் விக்ஸ்டீனைக் கடிக்க முடிந்ததா?

மிஸஸ் பொன்னம்மா டேவிட், மகாராஷ்டிரா எர்த் க்வேக் ரிலீஃப் வொர்க்குக்காக பா.மு. கழக சார்பாக அங்கேயே காம்ப் போட்டு உழைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் வீட்டுக்கு நீங்கள் போனதாகவும், நாய் கடித்ததாகவும் சொன்னதுமே எல்லாம் உங்கள் செட்டப் என்று தெரிந்து விட்டது.

நான் சீதே என்பதை புரூவ் செய்யச் சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி. உங்கள் மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே ஸ்வீட் விக்ஸ்டீனைச் சாப் பிடுங்கள், டாட்டா!

இப்படிக்கு உங்'கல்'
சீதே.

வட்டமேஜை

அத்தைக்கு மீசை முளைக்குமா?

◆ தலையங்கம் படித்தேன். ஆளுனர் பதவியும் முதல்வர் பதவியும் தனித்தனியான அதிகாரங் களுள்ள பதவிகள். இதில் தேவையில்லாமல் ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்த முயல் வதும், சேறு பூச முயல்வதும் அழகன்று. நம் ஆளுனரின் நடவடிக்கைகளோ, தனிப்பட்ட கோபத்தின் காரணமாகப் பிரச்னைகள் உண்டு பண்ணுவதாகவும், முதல்வரின் நடவடிக்கை களோ, அதே போன்ற எதிர்ப் பார்வையால் அவலமாகவும் இருப்பதாகவே தெரிகிறது. "ஆட்சிக்கு உதவத்தான் ஆளுனர்" என்ற தங் களின் வரிகளை இருதரப்பாரும் உணர்ந்து நடத் தலே சிறப்பு. அதுவரையில், பரபரப்பாக பத்திரி கைகளுக்குச் செய்தி கிடைப்பதைத் தவிர, வேறு பலனில்லை.

கருங்காலி, கரு.பி. கார்த்திகேயன்.

◆ ஆளுனருக்கும் முதல்வருக்கும் ஏற்பட்டிருக் கும் பனிப் போர் தீவிரமடைவதால் யாருக்கு என்ன லாபம் என்பதை அவர்களே சிந்திக்க வேண்டும். எந்த நடவடிக்கை எடுத்தாலும் முதல்வர், மக்களிடத்தில் அனுதாபம் பெற அவருக்கென்று ஒரு தனிப்பாணி வைத்துள்ளார் என்பதையும் கவர்னர் தெரிந்து கொள்ள வேண் டும்.

தொழுகிரிப்பட்டி, ஆர். முத்துக்குமரன்.

◆ கல்கி 31.10.93 இதழ் தியாக பூமி படத்தில் பிராமணர்கள் அனைவரும் பஞ்சக்கச்சம், குடுமி, ருத்ராக்ஷ மாலை, விபூதி அணிந்துள்ளனர். ஆனால் பூணூலைக் காணோமே? ஏன் இந்த கவனக் குறைவு?

சென்னை - 75, கே.வி. ராகவன்.

◆ கரூர் சிறப்பிதழில் நாரத கான சபா குறித்து நான் கூறியதாக வெளியிடப்பட்டுள்ள செய்தி தவறாக இருக்கிறது. நாரத கான சபாவின் ஆண்டு விழாவின்போது பல கலை நிகழ்ச்சிகள் நடக் கும். ஆனால் நாடகத்திற்கு நல்ல கூட்டம் வருமே தவிர பாட்டு, பரதநாட்டியக் கச்சேரி களுக்குக் கூட்டம் மிகக் குறைவு. அநேகமாக எல்லா நகரங்களுக்கும் இது பொதுவான நிலை தான். இப்போது இந்தச் சபாவில் வாய்ப்பாட்டு, புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் முதலிய இசைக்கருவிகள் கற்க ஏற்பாடு செய்துள்ளார் கள். பயிற்சிக் கட்டணம் குறைவாக உள்ளதால் பலரும் சேர வாய்ப்பு உள்ளது. சபாவில் முன்பு போல இப்போது புகழ் பெற்ற வித்வான்களின் கச்சேரிகள் நிறைய நடப்பதில்லை. காரணம், வித்வான்களின் சன்மானம் அதிகம். சபாவிற்கு வருமானம் குறைவு. எனவே, சபா மெம்பர் களின் சந்தா தவிர கல்யாணங்களுக்கு வாட கைக்கு விடுவதன் மூலமும் சபா நடக்கிறது. சிறிய முறையில், நடைபெற்று வருகிற கரூர் நாரத கான சபாவின் பொருளுக்கும் புகழுக்கும் களங்கம் ஏற்படுத்துவது என் எண்ணமல்ல.

கரூர், ஆர்.பி.எஸ். விசாலாட்சி

◆ அமைச்சரான பிறகும் தொகுதிக்குச் செல் கிறாரா(?!). அடடா!! இது கின்னஸ் புத்தகத்தில் வர வேண்டிய செய்தியாயிற்றே!?

பவித்திர மாணிக்கம், ஆர். பாஸ்கர்.

◆ அமைச்சரானால் தொகுதிப் பக்கம் செல்லக் கூடாது என சட்டம் ஏதாவது உள்ளதா என்ன? இந்த வார இதழின் எல்லா ஜோக்குகளையும் தூக்கிச் சாப்பிட்டு விட்டது அமைச்சரின் இந்த வாக்கியம்!

சேலம், எம்.கே. சக்திவேல்.

◆ தின்னப்பா நகர்ப் பகுதி நுகர்வோர் பாது காப்புச் சங்கப் பெண்கள் பிரிவு போல, ஒவ் வொரு ஊரிலும் கிளைகள் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஹூம்! அத்தைக்கு மீசை முளைக்குமா? 'சித்தப் பா'ன்னு கூப்பிடற நல்ல நாளும் வருமா?

பரமக்குடி, எஸ். ஹரிஹரன்.

◆ தின்னப்பா நகர்வாசிகள் தெரு விளக்கு இல்லாமல் எப்படிக் கஷ்டப்படுகிறார்களோ, அதேதான் எங்கள் ஊர் கதியும். எட்டு மணி ஆனால் போதும்; அமாவாசை இருட்டுத்தான்! வெளியிலே வரவே தயக்கமாக இருக்கும். அவர் களாவது தங்கள் பிரச்னைகளைக் கல்கி வாயிலாக தெரிவித்து விட்டார்கள். நாங்கள் போய் யாரிடம் முறையிடுவது?

தக்கோலம், அ. முஸ்தபா.

◆ சுப்பிரமணியன் ரவிச்சந்திரனின் 'காத்திருந் தவர்கள்' சிறுகதை படித்தேன். நல்ல சரளமான நடையில் கதையை நடத்திச் சென்று, கடைசி யில் சாமியாரைக் காட்டாமலேயே - ஆனால் அவர் மேல் ஒரு பிரமிப்பு கலந்த மரியாதையை வரச் செய்து ஆச்சரியம் கொள்ளச் செய்த ஆசிரி யருக்குப் பாராட்டுக்கள்.

மேட்டுமகாதானபுரம், எம். சந்திரசேகர்.

◆ விட்டில் பூச்சிகள் சிறுகதை அருமை. கல வரத்தினால் பாதிக்கப்பட்டு, தன் வீட்டிற்கு அடைக்கலம் புகுந்த கௌசல்யாவைக் காப் பாற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணம் கொண்ட ஷாபானாவின் மனிதாபிமானம் பாராட்டத் தக்கது.

கோயமுத்தூர், ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

உங்கள் குழந்தை துறுதுறுவென இருக்க சமவிகித ஊட்டச் சத்து தேவை.

துறுதுறுவென இருப்பதற்குத் தேவையான சக்தியைப் பெறுவதற்கு, உங்கள் குழந்தைக்குச் 'சரியான' கலோரிகள் தேவை. புரோட்டீன்களும், கார்போஹைட்ரேட்ஸும், கொழுப்புச் சத்தும் சரியான சமச்சீர் விகிதத்தில் கலந்திருந்தால்தான் இந்தக் கலோரிகள் கிடைக்கும்.

இந்தச் 'சரியான' கலோரிகள் கிடைக்க வேண்டுமானால் இதற்குச் சிறந்த வழி ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த உணவைக் கொடுக்க வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆன பிறகு பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு வேளையும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவை உங்கள் குழந்தைக்குத் தர வேண்டும்.

எனவேதான் தாய்மார்கள் செரிலாக்கைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த உணவான செரிலாக்கில் புரோட்டீன்கள் செறிந்துள்ள இரண்டு முக்கிய பொருட்களான பாலும் கோதுமையும் உள்ளன. கொழுப்புச் சத்து, கார்போஹைடிரேட்ஸ், இரும்புச் சத்து, கால்ஷியம் ஆகிய சத்துக்களும் சரியான அளவில் கலந்துள்ளன. மேலும் இதற்கு வைட்டமின்கள் A,D,E,B–காம்ப்ளெக்ஸ் மற்றும் C பலம் சேர்க்கின்றன.

இன்னுமொரு சிறப்பு, செரிலாக் இப்பொழுது நெஸ்லேயின் புரட்சிகரமான புதிய Z-வகை என்ஸைமேட்டிக் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன்கூட்டியே பக்குவப்படுத்தப்படுகின்றன. செரிலாக் மிக எளிதில் ஜீரணமாகி விடுகிறது. மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது.

எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் செரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு கலோரிகள் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை துறுதுறுவென இருப்பதற்குத் தேவைப்படும் ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவு இது.





Mudra: NES: 0010-TML

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்

இலவசம். செரிலாக் பேபி கேர் புத்தகம்.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடவே தானிய உணவு வகைகளைக் கொடுங்கள்.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka